# திருமணமும் குடும்பமும்

பாகம் 1

வேதாகம அடிப்படையில்
பிரச்சினைகளுக்குத் தீர்வு

வேத பாடசாலை
67, பராக்கா ரோடு
கீழ்ப்பாக்கம்
சென்னை - 600 010.

**Marriage & Family (Part 1)**
Booklet - 6
Tamil

© IBL
2004

Cover Credit : Cynthia Kingston
Printed by :

For additional booklets write to :
**India Bible Literature**
67, Beracah Road, Kilpauk
Chennai - 600 010.

Ph : 26425166 Fax : 26428298
E-mail : ibl.maa@iblchennai.org

# திருமணத்தின் ஏழு மடங்கு இணைப்பு






அத்தியாயம் 1

## திருமணம் மற்றும் குடும்பத்தின் பிரமாணம்

அநேக ஆண்டுகளுக்கு முன்பு ஒருவர், அமெரிக்காவில் தனது பழைய கார் ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது, வழியில் அது பழுதடைந்து போனதால் சாலை ஓரத்தில் காரை நிறுத்தி விட்டு நின்று கொண்டிருந்தார், மிக நேர்த்தியாக உடை அணிந்திருந்த ஒரு மனிதர் ஓர் அழகிய காரில் அந்தப் பக்கமாக வந்த போது, பழுதடைந்த கார் அருகே நின்று கொண்டிருந்த மனிதரைக் கண்டு அவருக்கு உதவி செய்வதற்காக தனது காரை நிறுத்தினார். அவர் தனது காரை விட்டு இறங்கி பழுதடைந்திருந்த காரின் இயந்திரம் இருந்த பகுதியைத் திறந்து பார்த்தார். பழுதடைந்திருந்த கார், அமெரிக்காவில் மிகவும் பிரபலமாக எல்லாராலும் போற்றப்பட்ட ஃபோர்டு (Ford) கம்பெனி யாரால் தயாரிக்கப்பட்டிருந்த ஒன்றாக இருந்தது. மிகவும் நேர்த்தியாக உடை அணிந்திருந்த அந்த மனிதர், பழுதடைந்து போன அந்தப் பழைய காரின் இயந்திரத்தைச் சரிபடுத்தி விரைவில் அதை ஓடும்படிச் செய்துவிட்டார். பழைய காரின் சொந்தக்காரர் ஆச்சரியப் பட்டு அந்த மனிதரிடத்தில், ஃபோர்டு காரைப் பற்றி எப்படி இவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு அந்த மனிதர், ‘‘நான் தான் ஹென்றி ஃபோர்டு. நான்தான் இந்தக் காரை வடிவமைத் தேன். இந்தக் கார்களை உற்பத்தி செய்கிற கம்பெனியின் சொந்தக் காரனும் நான்தான்’’ என்று பதிலளித்தார்.

பழுதாகிப்போன அவரது கார்களில் ஒன்றை எவ்வாறு சரிசெய்ய முடிந்தது என்று ஹென்றி ஃபோர்டிடம் கேட்டால் அதற்குப் பதில் சொல்ல அவரால் முடியும் என்று நாம் எதிர்பார்க்கலாம் அல்லவா? அவ்வாறே உடைந்துபோன ஒரு திருமணத்தை எப்படிச் சரிசெய்யக் கூடும் என்று தேவனிடத்தில் கேட்டால் அவரால் அதற்குப் பதிலைக் கூறமுடியும். ஏனெனில், திருமணத்தை ஏற்படுத்தியவரே அவர்தான். திருமணம் மற்றும் குடும்பத்தைக் குறித்து இக்கட்டுரையில் வரையப் பட்டிருக்கும் விதிமுறைகள் யாவும் வேதத்தின் அடிப்படையிலா னவை. குடும்பத்தையும் ஏற்படுத்தியவர் தேவன் தாமே என்று வேதம் சொல்லுகிறபடியினால் அவரால் மட்டுமே உடைந்துபோன ஓர் திருமண உறவைச் சீர்படுத்துவது எப்படி என்று நமக்குக் கூறமுடியும். திருமணம் என்றால் என்ன என்றும், திருமணத்தின் நோக்கம் என்ன என்றும், திருமணம் மற்றும் குடும்பத்திற்கான அவரது திட்டம் என்ன என்றும் அவரால் நமக்குக் கூற முடியும்.

## திருமணம் மற்றும் குடும்பத்தைக்குறித்து இயேசு போதித்தது என்ன?

இயேசு கிறிஸ்துவின் சீஷர்களாகிய நாம் ஒவ்வொரு வேதப் பாடத்தையும் படிக்க ஆரம்பிக்கும் போதும், ''இந்தக் குறிப்பிட்டப் பாடத்தில் இயேசு நமக்குப் போதிப்பது என்ன?'' என்ற கேள்வியைக் கேட்க வேண்டும். மதத் தலைவர்கள் இயேசுவினிடத்தில் வந்து திருமணம் மற்றும் விவாகரத்தைக் குறித்து அவரிடத்தில் கேட்ட போது, ''ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்று நீங்கள் வாசிக்கவில்லையா?'' என்ற கேள்வியையே அவர் பதிலாகச் சொன்னார். இயேசு அவ்வாறு கூறியதின் பொருள் என்னவெனில், ''நீங்கள் திருமணத்தைக் குறித்து நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், ஆதியிலேயே தேவன் அதை ஏற்படுத்தினதின் நோக்கத்தை முதலாவது நன்றாக அறிந்து கொள்ள வேண்டும்'' என்பதாகும்.

## திருமணத்திற்கான தேவனுடைய திட்டம்

''பின்பு தேவன் நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; .... தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித் தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்தி ... என்று சொல்லி தேவன் அவர்களை ஆசீர் வதித்தார்'' (ஆதியாகமம் 1:26-28).

தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்து அது ''நல்லது'' என்று கண்டார் என்று வேதம் கூறுகிறது. ஆனால் இரண்டாம் அதிகாரத்தில் அது ''நல்லதல்ல'' என்று அவர் கூறுவதைக் காண்கிறோம். எது நல்லதல்ல? மனிதன் தனிமையாக இருப்பது நல்லதல்ல. ''அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். அப்பொழுது ஆதாம் இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றார். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும்



விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்றார்'' (ஆதியாகமம் 2:21-24).

மனிதன் தனிமையாக இருந்த போது அவன் முழுமை பெறாத வனாக இருந்ததை தேவன் கண்டார். இந்தக் குறிப்பிட்ட இடத்தில் எபிரெய மொழியில் ''அவனை முழுமைப்படுத்துகிற ஓர் நபரை நான் அவனுக்காக இப்பொழுது உருவாக்கப்போகிறேன்'', என்று தேவன் கூறியதாகச் சொல்லப்பட்டுள்ளது. உதவி செய்கிற ஒருவர் அல்லது ''அவனுக்கேற்ற ஓர் உற்ற உதவியாளர்'', எபிரெய மொழியில் ''முழுமை செய்கிற ஒருவர்'' என்று அர்த்தமாகும். ஆரம்பத்திலிருந்தே குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் திருமணத்தில் இணைக்கப்படுகிற வர்களுக்கும் உரிய பொறுப்புகளை தேவன் கொடுத்து வந்திருக் கிறார். ஒரு பெண்மணி இல்லாமல் ஓர் மனிதன் முழுமை அற்றவனாக இருக்கிறான். ஒரு மனிதனை முழுமை செய்வதற்காகவே ஓர் பெண் படைக்கப்பட்டிருக்கிறாள்.

சிருஷ்டிப்பின் விவரங்கள் திரும்பவும் ஒரு முறை இரண்டாம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. மூன்றாவது முறையாக மறுபடியும் ஆதியாகமம் 5:1-2 பகுதியில் தேவன் ஆணையும் பெண்ணையும் சிருஷ்டித்தார் என்னும் செய்தி வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. ஆதி யாகமம் ஐந்தாம் அதிகாரத்தில் தேவன் அவர்களை ''ஆதாமியர்கள்'' என்று அழைக்காமல் ''மனுஷர்'' என்று பெயரிட்டு அழைத்தார் என்பதை நாம் காணலாம். ''ஆதாம்'' என்றால் ''மனிதன்'' என்று அர்த்தமாகும். பரிசுத்த விவாகத்தில் இணைக்கப்பட்ட ஓர் ஆணும் ஓர் பெண்ணும் இருவரல்ல, ஓர் முழு மனிதனாக இருக்கிறார்கள் என்னும் கோட்பாடு இங்கு ஓர் சாதுரியமான விதத்தில் போதிக்கப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவோமானால், இருவரும் ஒருவராயிருக்கும் படி அவர்கள் படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறலாம்.

## நபர்கள், பங்காளர்கள் மற்றும் பெற்றோர்கள்

இதுவரை நாம் வாழ்வின் பிரமாணத்தை வேத வாக்கியங்களில் கண்டிருக்கிறோம். நாம் அதை ''திருமணம் மற்றும் குடும்பத்தின் பிரமாணம்'' என்று அழைக்கலாம். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்து வதற்குத் தகுந்த குணாதிசயங்கள் நிறைந்த இரண்டு பெற்றோர்கள் தேவனுக்குத் தேவையாயிற்று. அவர்கள் இருவரும் தகுந்த குணா திசயங்கள் நிறைந்தவர்களாக இருப்பதற்கு அவர்களுக்குத் தகுதியான பங்காளத்துவம் தேவையாயிருந்தது. தகுதியானப் பங்காளத்துவத் தைப் பெறுவதற்கு அவர்கள் இருவரும் தகுதியான நபர்களாக இருக்க வேண்டியது அவசியமாயிற்று.

ஆதாமையும் ஏவாளையும் தேவன் சிருஷ்டித்த போது அவர்கள் இருவரும் தங்களுக்குத் தேவையான உணவை ஒருவர் மற்றொரு வரிடத்திலிருந்து உறிஞ்சிக்குடிக்கும் ஒட்டுயிர்களைப் (Parasite) போலச் சிருஷ்டிக்கவில்லை, அல்லது ஒருவர் மனுஷராகவும் மற் றொருவர் அவரைச் சார்ந்திருக்கும் ஒட்டுயிராகவும் படைக்கப்பட வில்லை. அவர்கள் இருவரும், தனித்தனியே இரு முழு மனிதர்களா கவும், ஒருவர் மற்றொருவருடைய வாழ்க்கையைக் கட்டி எழுப்புகிற நபர்களாகவும், தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித் ததின் நோக்கத்தை நிறைவேற்ற திறன் படைத்தவர்களாகவும் இருந் தனர். இந்த விதிமுறையானது சிருஷ்டிக்கப்பட்ட அந்த நாளில் எவ்வாறு உண்மையாயிருந்ததோ அவ்வாறே இந்த நாள் வரைக்கும் உண்மையாயிருக்கிறது.

எனினும் வாழ்க்கைக்கான இந்தத் திட்டம் இன்று பலத்த தாக்குதலுக்கு உள்ளாயிருக்கிறது. உதாரணமாக, ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள உறவுக்கானத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தும், ஓர் ஆண்மகன் செய்கிற எல்லாக்காரியங் களுக்கும் இணையாகத் தன்னாலும் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்று ஓர் பெண்மனி இன்று நிரூபித்துக் காட்ட வேண்டிய சூழ் நிலையிலிருக்கிறாள். ஓர் ஆண் மகன் பொறுப்பெடுத்துச் செயல் படுத்துகிற அதே காரியங்களை ஒரு பெண்மணியினால் செய்யக் கூடாமல் போனால், அவள் அந்த ஆண் மகனுக்குச் சமமானவள் அல்லது சமநிகர் உடை யவள் என்று சொல்லக்கூடாது என்னும் ஓர் கருத்து வழக்கில் இருந்து வருகிறது.

ஆண் உரிமைக்காக போராடுபவர்கள் ஆணினமே மேன்மை யானது என வாதிடுகின்றனர். ஆனால் பெண் உரிமையைக் குறித்து வாதிடுபவர்கள் தாங்களே ஆண்களைவிட அதிக மேன்மை யுள்ளவர்கள் என கூறுகின்றனர். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள உறவு இப்படியும் இருக்கலாம் அல்லது அப்படியும் இருக்கலாம் என்பது போல, அது அந்தச் சூழ்நிலையைப் பொறுத்தது என்பது பெண்களின் வாதம். வேதாகமத் திட்டத்தின்படி ஆண்-பெண் உறவானது இருவரும் ஒருமித்து இருக்கும்போது தான் மேன்மை அடையும் என்பதே. இருவரும் ஒரே விதமாக இருந்திருந்தால் அந்த இருவரில் ஒருவருடைய தேவை அவசியம் இல்லாமல் போயிருக்கும். வேண்டுமென்றே தேவன் ஆணையும் பெண்ணையும் தனித்தனியே தனிச் சிறப்பு உள்ளவர்களாக இருக்கும்படிச் சிருஷ்டித்தார். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் முழுமைப்படுத்துவதற்காகவே



அவர்களை அவ்வாறு சிருஷ்டித்தார். ஆனால் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் எல்லாக்காரியங்களிலும் ஈடுபட்டு, ஒருவர் செய்கிற அதே வேலையை மற்றொருவரும் செய்யத்திறனுள்ளதாக இருக்கிறதைக் காண்பிக்கிறதினால் இருவருக்கும் இடையே உள்ள வித்தியாசங் களைக் காணக் கூடாதபடிக்குக் கலாச்சாரமானது மறைத்து விடுகிறது. ஆணையும் பெண்ணையும் தேவன் சிருஷ்டித்த விதத்தில் ஓர் அழகிய வேறுபாடும் ஓர் அற்புதமான நோக்கமும் உண்டு.

திருமணம் மற்றும் குடும்பத்தின் அடிப்படைப் பிரமாணத்தை விளக்குவதற்கும், மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்ட ஓர் பிரமீட்டை (Pyramid) எடுத்துக் கொள்ளுவோம். மூன்று பிரிவுகளாக பிரிக்கப் பட்டிருக்கிற அந்த பிரமீட்டின் மேல் பிரிவில் ''பெற்றோர்கள்'' என்றும், இரண்டாவது பிரிவில் ''பங்காளர்கள்'' என்றும், கீழ்ப்பிரிவில் ''இரு நபர்கள்'' என்றும் எழுதி வைத்துக் கொள்ளுங்கள் (படத்தில் காண்க.




ஒரு பிரமீட்டைக் கட்டவேண்டுமானால், அதன் உச்சியிலுள்ள பகுதியை நீங்கள் முதலாவது கட்ட மாட்டீர்கள் அல்லவா? அவ்வித மாகவே தேவன் நியமித்த பங்காளத்துவம் இல்லாத இரண்டு சமமான தகுதிகளுள்ள பெற்றோர்களைக் கொண்டு ஓர் குடும்பத்தைக் கட்டு வதும் தேவனுடைய திட்டமல்ல. மேலும், கீழ்ப் பிரிவை முதலாவது கட்டி எழுப்பும் முன்பு இரண்டாவது பிரிவிலுள்ள பங்காளர்களைக் கட்டுவதும் தேவனுடைய திட்டமல்ல. நல்ல பெற்றோர்களை உருவாக் குகிற பங்காளத்துவத்தின் அஸ்திபாரம், இரண்டு சமமான நபர்களைக் கொண்டுதான் ஆரம்பமாகிறது. பிரமீட்டின் கீழ்ப்பிரிவு தான் அஸ்தி பாரமாக உள்ளது. அவ்விதமாகவே, திருமணத்தில் இணைக்கப்படுகிற இரண்டு நபர்கள் தான் அந்தத் திருமணத்தின் மிக முக்கியமான அம்சங்களாயிருக்கின்றனர்.

### ஆரம்பிக்க வேண்டிய இடம்

ஒவ்வொரு திருமணத்திலும் நான்கு பிரச்சினைப் பகுதிகள் உள்ளன. ஜாண் மற்றும் மேரி ஆகிய இவர்களது திருமண உறவில் முதலாவது பிரச்சினைப் பகுதி ஜாண். இரண்டாவது பிரச்சினைப் பகுதி மேரி. மூன் றாவது பிரச்சினைப் பகுதி அவர்கள் இருவரும் இணங்கி வாழ்வது. நான்காவது பிரச்சினைப் பகுதி அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள்.

ஜாணுக்கு ஐம்பது பிரச்சினைகளும் மேரிக்கு ஐம்பது பிரச்சினைகளும் இருக்குமானால், மேரியும் ஜாணும் தனித்தனியே அவைகளைக் கண்டுபிடித்துச் சரி செய்யாவிட்டால் திருமணம் ஆகும் போது அவர்கள் சரி செய்ய வேண்டிய பிரச்சினைகள் நூறாகிவிடும். திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று முடிவு செய்த உடனேயே அவன் முதலாவது தனது சார்பில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க ஆவன செய்ய ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறே மேரியும் தனது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள ஆரம்பிக்க வேண்டும். உங்கள் பிரச்சினைக்கு நீங்களே காரணமாயிருக்கிறீர்கள் என்பதை ஒப்புக் கொள்ள உங்களுக்கு மனதில்லாதிருக்குமானால், அல்லது அவைகளை அடையாளம் கண்டுகொள்ள உங்களால் கூடாமற் போனால், இந்த உலகிலுள்ள எந்த ஒரு திருமண ஆலோசகராலும் உங்களுக்கு உதவி செய்ய முடியாமல் போகும். ஆனால் உங்கள் வாழ்க்கையிலுள்ள பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வீர்களானால் பங்காளத்துவத்திலுள்ள ஏராளமான பிரச்சினைகளை உங்களால் தீர்த்துவிடக்கூடும்.

இதை விளக்குவதற்கு நான் உங்களுக்கு ஒரு கதையைக் கூறட்டும்: ஒரு மனிதன் மன நல மருத்துவரிடம் ஆலோசனைக் கேட்பதற்காகச் சென்றான். அவன் தனது தலையில் கீரைக் கூடையையும் அதனுள் மூன்று முட்டைகளையும் வைத்திருந்தான். அவனது இரண்டு காதுகளிலும் பன்றி இறைச்சித் துண்டுகளைக் கட்டித் தொங்க விட்டிருந்தான். இந்தக் கோலத்துடன் அவன் அந்த மருத்துவரிடம் சென்றான். அந்த மருத்துவர் அவனை உள்ளே அழைத்து உட்காரும்படிக் கூறினார். அந்த மனிதன் தனது தலையில் வைத்திருந்த முட்டைகள் கீழே விழுந்து விடாதபடிக்கு மிகவும் கவனமாக பார்த்துக் கொண்டு உட்கார்ந்தான். மருத்துவர் அவனைப் பார்த்து, ‘‘உன் பிரச்சினைகளைக் குறித்து ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?’’ என்று கேட்டார். உடனே அந்த மனிதன் ‘‘ஆம், டாக்டர், நான் என்னுடைய சகோதரனைக் குறித்து உங்களிடம் பேச விரும்புகிறேன். பாருங்கள், என் சகோதரனுக்கு உண்மையிலேயே பிரச்சினைகள் இருக்கின்றன’’ என்று கூறினான்.



அப்படிப்பட்ட மக்களை போதகர்களும் திருமண ஆலோசகர்களும் அனுதினமும் சந்திக்கின்றனர். இவர்கள் தங்கள் பிரச்சினைகளுக்குத் தாங்களும் ஏதோ ஒரு விதத்தில் காரணமாயிருக்கிறோம் என்பதை ஒப்புக் கொள்ள மறுக்கின்றனர். ‘‘உன் கண்ணில் உத்திரத்தை வைத்துக்கொண்டு உன் சகோதரனுடைய கண்ணில் இருக்கிற துரும்பை எடுக்க முயற்சிக்கிறாயே’’ என்று இயேசு இப்படிப்பட்ட மக்களைப் பார்த்துதான் கூறினார் (மத்தேயு 7:3). குற்றங் கண்டு பிடிக்கிற மக்கள் எப்போதும் பிறருடைய வாழ்வில் காணப்படுகிற தவறுகளை, குறிப்பாக பிறரது திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கையில் காணப்படுகின்ற தவறுகளைக் கண்டுபிடிக்கிறதில் நிபுணர்களாயிருக்கின்றனர். அவர்கள் எப்போதும் பிறர் மீதே குற்றம் சுமத்துகிறவர்களாயிருக்கிறார்கள். ஏதாகிலும் ஒரு பிரச்சினை ஏற்படுமானால் தங்களுக்கும் அதில் ஒரு பங்குண்டு என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ளுகிறதே இல்லை. அந்தப் பிரச்சினையில் அவர்களுக்கே அதிகப் பங்குண்டு என்னும் உண்மை அனைவருக்கும் வெட்ட வெளிச்சமாயிருந்தாலும் கூட அவர்கள் அதை ஒப்புக்கொள்ளுகிறதில்லை.

உலகிலேயே மிகச்சிறந்த திருமண ஆலோசனை வேதாகமத்தில் தான் காணப்படுகின்றது. வேதாகமம் கூறுகின்ற ஒரு சில திருமண ஆலோசனைகளை நாம் இந்தப் புத்தகத்தில் காணப்போகிறோம். நாம் அவ்வாறு செய்யும்போது, ஒரு சில விதிமுறைகளையும் மாதிரிகளையும் ஆராய்ந்து கண்டுபிடிக்க ஏதுவுண்டாகும். அப்படிப்பட்ட மாதிரிகளில் இதுவும் ஒன்றாகும்; ஒவ்வொரு முறையும் திருமணத்தைக் குறித்து வேதாகமம் கூறும்போது, திருமணத்தில் இணைக்கப்படுகின்ற இரண்டு பங்காளர்களையும் அது இரண்டு தனித்தனி நபர்களாகப் பிரித்து விடுகிறது. பின்பு அது அந்த மனிதனுக்கு திருமணத்தில் அவனது பொறுப்பு, பங்கு அல்லது அவன் ஆற்ற வேண்டிய கடமையைக் குறித்துப் பேசுகிறது. அவ்விதமாகவே, அது பெண்ணொருத்திக்கு ஆலோசனை வழங்கும்போதும் அவள் தனது திருமணத்தில் ஆற்ற வேண்டிய பொறுப்புகளைக் குறித்துப் பேசுகிறது.

உதாரணமாக, 1 பேதுரு மூன்றாம் அதிகாரம் பெண்களுக்கு ஆலோசனை வழங்குகிறது. குறிப்பாக, தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாத புருஷர்களை உடைய பெண்களிடம் அது பேசுகிறது. முதல் ஆறு வசனங்களில், பேதுரு புருஷர்களுக்கோ அல்லது புருஷர்களைக் குறித்தோ எதுவும் பேசவில்லை. மாறாக, அவர் மனைவிகளிடமே வெவ்வேறு காரியங்களைக் குறித்துப் பேசுகிறார். பரிசுத்த

வாழ்க்கை, உடை அலங்காரம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவை அதில் அடங்கும். பிரச்சினைப் பகுதி எண் இரண்டை எவ்வாறு கையாள ஆரம்பிக்க வேண்டுமென அவர் பெண்களுக்கு கூறுகிறார். தாங்கள் எவ்வாறு இருக்க வேண்டுமென அவர் விரும்புகிறாரோ அவ்வாறே தங்களை வனைந்து கொள்ளவும், தங்கள் திருமண வாழ்வில் அவரது விருப்பம் நிறைவேறவும் அவர்கள் தேவனிடத்தில் வேண்டிக்கொள்ள வேண்டும் என்று புத்தி கூறுகிறார்.

அதன் பிறகு, பேதுரு, பிரச்சினைப் பகுதி எண் ஒன்றைக் குறித்துப் புருஷர்களிடம் பேசுகிறார். வேதாகமம் எப்போதும் பிரச்சினைகளை உள்ளதை உள்ளபடியேயும் நடைமுறைக்கேற்றவாறு பேசுகிறது. தங்கள் பெற்றோர்களிடத்தில் தாங்கள் நடந்து கொள்ள வேண்டிய விதத்தைக் குறித்தும் அவர்களது பொறுப்புகளைக் குறித்தும் வேதம் பிள்ளைகளிடம் பேசுகிறது. வேதம் இவ்வாறு ஆலோசனை கூறும் போது அது உண்மையையே பேசுகிறது. ஏனெனில், நீங்கள் யாருக்குப் பொறுப்பாளியாக இருக்கிறீர்களோ, அந்த நபருக்கு ஏற்றபடி உங்களை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியமாகக் காணப்படுகிறது. ஆம், நீங்கள் தான் அந்த நபர். உங்களுக்கு நீங்களே பொறுப்பாளியாக இருக்கிறீர்கள்.

இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ள திருமணமான சில தம்பதியருக்கு அதிகக் காலம் ஆகிறது. ஆனால் இந்த ஆய்வின் இறுதியில் நீங்கள் இதைக் கற்றுக்கொண்டு, ''என்னுடைய மனைவி, புருஷனுடைய காரியத்தை சரி செய்ய என்னால் முடியாது'' என்று சொல்லுவீர்கள். உண்மையிலேயே அது உங்களால் முடியாது. தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நின்று கொண்டு, உங்கள் மனைவிக்காக அல்லது புருஷனுக்காக நீங்கள் பதில் சொல்ல போவதில்லை. அவர்களுடைய காரியங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு உங்களுடையதல்ல. மாறாக, நீங்கள் யாருக்குப் பொறுப்பாளியாக இருக்கிறீர்களோ அந்த நபருக்காக பதில் சொல்ல வேண்டியது உங்கள் கடமையாகும். அந்த நபர் நீங்களே. உங்களுக்கு நீங்களே பதில் சொல்ல வேண்டும். இறுதியாக, நீங்கள் பதில் சொல்ல வேண்டியதை எண்ணி அதற்காக இப்போதே ஆயத்தப்பட ஆரம்பிப்பீர்களானால், நீங்கள் புத்திமானாக விளங்குவீர்கள். உங்கள் திருமண வாழ்வில் உங்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு உங்களுடையதே ஆகும்.

புருஷனும் மனைவியும் ஒன்றாக சேர்ந்து வந்து ஆலோசனை பெற அமர்ந்திருக்கும்போது அவர்களுக்கு ஆலோசனை வழங்குவது



ஒரு போதகருக்கு பல சமயங்களில் கடினமாகக் காணப்படுவதுண்டு. ஏனெனில், அவர்களுடைய சண்டைகளைத் தீர்த்துவைக்கிற ஓர் மத்தியஸ்தரைப் போலவே அவர் அங்கு செயல்பட முடியும். அவர்கள் இருவரையும் அவர் தனித்தனியே சந்திக்கக் கூடுமானால் அது அவருக்கு நலமாயிருக்கும். அவர்கள் இருவருடைய பிரச்சினைகளையும் தனித்தனியே பேசித் தீர்த்து ஆலோசனை வழங்கிய பின்பு, அவர் அவர்களுடைய பங்காளத்துவம் மற்றும் இணங்கி வாழுதலுக்குரிய காரியங்களைக் குறித்து ஆலோசனை வழங்கக் கடந்து செல்லலாம். அந்த நபர்கள் விசுவாசிகளாகவோ, அல்லது இயேசு கிறிஸ்துவோடு தனிப்பட்ட விதத்தில் உறவு கொள்ளாதவர்களாகவோ இருப்பார்களானால் அந்தப் போதகருடைய முதலாவது வேலை அந்தப் புருஷனுக்கு அல்லது அவனது மனைவிக்கு இரட்சிப்புக்கு ஏற்ற ஆலோசனைகளை வழங்கி கிறிஸ்துவின் மூலமாக தேவனோடு அவர்களுக்கு உறவை உண்டாக்குவதே ஆகும். ஓர் ஆவிக்குரிய ஆலோசகர் அல்லது போதகருக்கு, திருமண ஆலோசனை வழங்குதல் அதிக கனிதரும் ஓர் சுவிசேஷ ஊழியக் கருவியாக விளங்கக்கூடும்.

கணவன் ஒருவருக்கு அவரது போதகர் இவ்வாறு கூறினார்: ''திருமணம் என்பது ஐம்பது-ஐம்பது என்ற சமநிலைக் கோட்பாட்டுக்கு உட்பட்டதல்ல; ஒருவருக்கொருவர் நூற்றுக்கு நூறு உண்மையுள்ளவர்களாயிருப்பதும் அல்ல; ஆனால் இருவரும் நூறு சதவீதம் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பதுதான் திருமணமாகும்''. அந்தக் கணவன் தனது வீட்டிற்குச் சென்று அவனது மனைவியினிடத்தில், ''போதகர் என்னிடத்தில், 'திருமணம் என்பது ஒரு நூறும் பூஜ்யமும் ஒன்று சேர்வது' என்று கூறினார். நான் தான் அந்த நூறு, நீதான் அந்த பூஜ்யம்'' என்று கூறினான். ''நபர்கள்'' தான் திருமண பிரமீட்டின் அஸ்திபாரத்தை உருவாக்குகிறார்கள் என்ற உண்மையை உணர்ந்து ஒப்புக்கொள்ள அநேகருக்கு இயலவில்லை. இங்குதான் திருமணம் சம்பந்தப்பட்டப் பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றன. இங்குதான் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வும் ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த உண்மையை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்போது, எந்த நபரிடத்தில் காரியங்களைச் சரி செய்து கொள்ள ஆரம்பிக்க வேண்டும் என்பதையும் அவர்கள் உணர்ந்து அறிந்து கொள்ள வேண்டும். அந்த நபரிடத்தில் தான் அவர்கள் தங்கள் சரிசெய்தலைத் துவக்க வேண்டும். தங்களில்தானே அவர்கள் அந்த சரிசெய்தலைத் துவக்க வேண்டும்.

## தேவனைப் பொருத்தமட்டில் திருமணம் என்றால் என்ன?

திருமணம் மற்றும் குடும்பம் என்னும் இந்த வேத ஆய்வுக்கு நீங்கள் வரும்போது, ''இதில் எனக்கு என்ன இருக்கிறது?'' என்ற கேள்வி உங்கள் உள்ளத்தில் எழுமானால் இதில் உங்களுக்கு

ஏராளமான நன்மைகள் உண்டு என்பதுதான் பதிலாகக் கொடுக்கப் படும். இரட்சிப்புக்கு அடுத்தபடியாக, இந்த உலகில் மிக அற்புதமான ஓர் ஆசீர்வாதம் என்னவெனில், அது ஓர் மகிழ்ச்சி நிறைந்த குடும்ப வாழ்வு என்று கூறலாம். திருமணம் மற்றும் குடும்பம் என்னும் இந்த ஆய்வில் ஓர் வேதாகமக் கண்ணோட்டத்தை உண்மையிலேயே நீங்கள் பெற விரும்பினால் ''இதில் தேவனுக்கு என்ன இருக்கிறது?'' என்று கேட்க வேண்டும். தேவனைப் பொருத்தமட்டில் திருமணம் என்றால் என்ன? அவர் திருமணத்தை ஏற்படுத்தியதன் காரணமென்ன? அவர் நம்மை ஏன் ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்தார்? நல்ல மக்களைக் கொண்டு இந்த உலகத்தை நிரப்ப வேண்டுமென்று தேவன் விரும் பினார் என்பது தான் அதற்குப் பதிலாகும்.

இந்தத் தெய்வீகத் திட்டத்தின் மாபெரும் வெளிப்பாடுகளில் ஒன்று சங்கீதம் 128ல் மிக அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. ''கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்'' (1-2), இன்று அநேகர் இந்த சங்கீதத்தின் முதல் வசனத்தை திருத்தி ''எல்லாரும் பாக்கியவான்கள்.'' என்று முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறார்கள். மனித இனம் முழுமைக்கும் மீட்பு கிடைக்கும் என்ற கோட்பாட்டை (Universalism) மக்கள் போதிக்கிறார்கள். தேவன் அன்புள்ளவராக இருக்கிறபடியினால் அவர், எல்லாரையும் ஆசீர்வதிக்கிறார் என்பது தான் அவர்களது வாதம். ஆனால் வேத வாக்கியம் அவ்வாறு நமக்கு போதிக்கிறதில்லை. சங்கீதப் புத்தகத்தில் ''பாக்கியவான்'' என்னும் தலைப்பின் கீழ்வரும் பல சங்கீதங்களில் இதுவும் ஒன்றாகும். ஆசீர் வதிக்கப்பட்ட ஒரு மனிதனுடைய ஆசீர்வாதங்கள் யாவும் தற்செயலாகவோ அல்லது எதேச்சையாகவோ ஏற்பட்டதல்ல என்று இந்த சங்கீதங்கள் யாவும் நமக்குப் போதிக்கின்றன. அவை யாவும் தேவனிடத்தில் நாம் வைக்கும் விசுவாசம் மற்றும் அவருக்குக் கீழ்ப்படிவதின் விளைவாகவே நம்மை வந்தடைகின்றன.

ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு மனிதனை தேவன் எவ்வாறு பயன் படுத்துகிறார் என்பதையும் ஆசீர்வதிக்கப்பட்ட அந்த மனிதன் எவ் வாறு தேவனுடைய திட்டங்களுக்குள் தன்னைப் பொருத்திக்கொள் ளுகிறான் என்பதையும் நமக்கு எடுத்துக்காட்டவே இந்த ''பாக்கிய வான்'' சங்கீதம் கொடுக்கப்பட்டுள்ளது. ''உன் மனைவி உன் வீட்டோ ரங்களில் கனி தரும் திராட்சக் கொடியைப் போலிருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவ மரக் கன்றுகளைப் போல்



இருப்பார்கள். கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்; நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய். நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்'' (128:3,5-6).

இவ்வுலகில் தேவன் கிரியை செய்கிற விதத்தைச் சித்தரிக்கிற ஓர் சங்கீதமாக இது காணப்படுகிறது. திருமணம் மற்றும் குடும்ப வாழ்வின் மூலமாகவே அவர் கிரியை செய்கிறார். தம்மை விசுவாசித்து தமது வழிகளில் நடக்கிற ஓர் மனிதனைத் தேடிக் கண்டுபிடித்து அவனை ஆசீர்வதிக்கிறார். அந்த மனிதனுடைய வாழ்வில் ஓர் பெண்மணியைக் கொண்டுவந்து சேர்த்து அவனை முழுமையாக்கும்போது அவனை ஓர் தகப்பனாக்குகிறார். இந்த இரு நபர்களும் பங்காளர்கள் ஆவதின் விளைவாக, அவர்கள் ஒரு குடும்பத்தை உருவாக்குகிறார்கள். இந்தப் பிள்ளைகள் தங்கள் பெற்றோரோடு ஏறத்தாழ இருபது ஆண்டுகள் வாழ்ந்து, அவர்களால் பேணி வளர்க்கப்பட்டு, தங்கள் வாழ்க்கையை எதிர் கொள்ள ஆயத்தமாகின்றனர். பின்பு தங்கள் பட்டணத்திலேயும் (எருசேலம்), தங்கள் தேசத்திலேயும் (இஸ்ரவேல்) இறுதியில் இந்த உலகத்திலேயும் தாக்கம் ஏற்படுத்தும்படி இச்சிறு குடும்பமானது சீயோனின் ஓர் அங்கமாக மாறுகிறது. (பழைய ஏற்பாட்டு ஆவிக்குரிய சமுதாயம்).

பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள 'சீயோன்' என்ற வார்த் தையானது, புதிய ஏற்பாட்டுத் திருச்சபைக் கோட்பாட்டிற்குச் சமமான தாகக் காணப்படுகிறது. இவ்வுலகில் தேவன் எவ்வாறு கிரியை செய்கிறார்? முதலாவதாக, அவர் திருச்சபின் மூலமாகத்தான் கிரியை செய்கிறார் என கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் கருது கின்றனர். தேவனும் கிறிஸ்துவும் திருச்சபையின் மூலமாகவே கிரியை செய்கிறார்கள். ஆனால் திருச்சபை என்பது சிறு சிறு குடும்பங்களால் ஆனதாகும். இந்த உலகிலுள்ள ஓர் அடிப்படை அளவுகோல் (Unit) குடும்பமேயாகும். குடும்பம் என்னும் இந்தச் சிறு அளவைக் கொண்டே தேவன் சீயோனில் (திருச்சபை) தாக்கம் உண்டாக்குகிறார். சிறு அலகுகளாகிய குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஓர் ஆவிக்குரிய சமுதாயமாக மாறுகிறது. பின்பு அவர்கள் பட்டணத்திலும், தேசத்திலும் இறுதியாக இந்த உலகத்திலும் தாக்கம் ஏற்படுத்துகிறார்கள். இப்பொழுது, உலகத்தில் காரியங்கள் சரியாக நடைபெறாமலிருக்கு மானால், பட்டணத்தில் காரியங்கள் சரியாக நடைபெறாமலிருக்கு மானால் பிரச்சினை எங்கே இருக்கிறது என்றும் அதன் தீர்வு என்ன என்றும் உங்களால் கண்டுபிடிக்க முடியுமா? குடும்பங்களில் தேவன்

வைத்திருக்கும் தனி நபர்களிடத்தில் தான் நீங்கள் அந்தப் பிரச்சினை யைக் கண்டுபிடித்துச் சரி செய்ய முடியும் (சங்கீதம் 68:6).

பல ஆண்டுகளுக்கு முன்பு, பத்திரிகை ஒன்று, சிறு பிள்ளைகளின் பிரச்சினை மற்றும் அவர்கள் மத்தியில் காணப்படுகின்ற குற்றங்களை அலசி ஆராயும் கட்டுரைகளை வெளியிட்டது. அவ்விதழில் பல கட்டுரை ஆசிரியர்களும் நிபுணர்களும் தங்கள் பல்வேறு விதமான கருத்துக்களைக் கூறியிருந்தனர். அரசாங்கத்தின் தவறாக அது இருக்குமா? கல்விப் பயிற்சியின் தவறாக இருக்குமா? அல்லது கலாச்சாரம்தான் பிரச்சினைக்குக் காரணமா? சில எழுத்தாளர்கள் திருச்சபைகளையும், தேவாலயங்களையும், பள்ளி வாசல்களையும் கூட கேள்விக்குறியாக்கினார்கள். இந்தக் கல்வி நிறுவனங்கள் தாங்கள் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்ற ஒருவேளைத் தவறிப் போயிருக்கலாம். ஆனால் கட்டுரைகளை எழுதிய அனைத்து சமூக சீர்திருத்தவாதிகளும் இளைஞருக்குரிய நீதிமன்ற நீதிபதிகளும், சமூக சேவகர்களும் இறுதியாக ஓர் முடிவுக்கு வந்தனர்: குடும்பம்தான் பிரச்சினை என்பதுதான் அவர்களது இறுதியான முடிவு.

## மனிதனின் பொறுப்பு

வேதாகமத்தின்படி திருமணம் மற்றும் குடும்ப வாழ்வின் பிரமாணத்தின்படி பொறுப்பு என்பது மனிதனில்தான் ஆரம்பிக்கிறது. தன்னையே தனது குடும்பத்தின் தலைவனாகவும் ஆவிக்குரிய குருவா கவும் இருக்கும்படி தேவன் விரும்புகிறார் என்கிற பொறுப்பை ஏற்றுக் கொள்ள மறுக்கிற மனிதனிடத்தில்தான் மிகப் பெரிய பிரச்சினை இருக்கிறது என நான் கருதுகிறேன். சங்கீதம் 128-ன்படி, ஒரு மனித னானவன் தேவனை விசுவாசித்து அவரது வழிகளில் நடக்க ஆரம் பிக்கும் போதுதான், இவ்வுலகில் தேவனுடைய ஆசீர்வாதம் ஆரம்பிக் கிறது. ஒரு மனிதன் தேவனுக்குப் பயந்து அவரது வழிகளில் நடக்கும் போது, அவன் தனது குடும்பமாகிய பிரமீட்டைக் கட்டுவதற்கான அஸ்திபாரத்தை தேவன் உடையவராக இருக்கிறார். தேவன் இப் பொழுது ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனைக் கண்டுபிடித்திருக்கிற படியினால், அவர் தமது, திருமணம் மற்றும் குடும்ப வாழ்வுக்கானப் பிரமாணத்தை அந்த மனிதனின் வாழ்வில் புகுத்த முடியும். இப்பொழுது, இந்த ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனுடைய வாழ்வில் ஆசீர் வதிக்கப்பட்ட ஒரு பெண்ணைக் கொண்டு வந்து இணைத்து அவர்கள் மூலமாக ஆசீர்வதிக்கப்பட்ட பிள்ளைகளை அவரால் எழுப்ப முடியும். தேவனால் இப்பொழுது ஒரு குடும்பத்தில், ஒரு திருச்சபையில், ஒரு பட்டணத்தில், ஒரு தேசத்தில் இறுதியாக இந்த உலகிலேயே தாக்கம் உண்டாக்க முடியும். அது ஒரு மனிதனில்தான் ஆரம்பிக்கிறது.



திருமணம் மற்றும் குடும்ப வாழ்வு சீர் குலைந்து கிடக்கும் இந் நாட்களில், வாலிபர்கள் தாங்கள் பின்பற்றுவதற்குத் தகுதியான மாதிரி கள் இல்லாமல் தடுமாறி அலைகிறார்கள். தங்களுக்கு ஒரு நல்ல மாதிரி யைக் காண்பிப்பதற்குத் தகப்பன் இல்லாதபடியினால் ஒரு டஜனுக்கும் அதிகமான மனிதர்கள் என்னிடத்தில் வந்து என்னைத் தங்களுக்குத் தகப்பனாக இருக்கும்படிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். திருமணம் ஆகிப் பல ஆண்டுகள் ஆன பின்பும் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள மனமற்றிருந்த ஒரு வாலிபன் என்னிடத்தில் வந்து மிகவும் பரிதாப மாக, ''ஐயா, ஒரு தகப்பனாக இருப்பது எப்படி என்று நான் அறிந்து கொள்ளும் வரை பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள நான் விரும்ப வில்லை. சிறிது காலத்திற்கு நீங்கள் என்க்குத் தகப்பனாக இருப்பீர்களா?'' என்று கேட்டான்.

திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு ஆலோசனை பெறும்படி என்னிடத்தில் வந்த பலர் இவ்விதமாகக் கூறியதுண்டு: ''வெற்றி கரமான ஓர் திருமண வாழ்வை எங்களால் பெற முடியுமா என்ற கவலை எங்களை அழுத்துகிறது. பல திருமணங்கள் விவாகரத்தில் முடிவடைந்திருக்கின்றன. ஒரு நல்ல திருமணத்தை நாங்கள் இதுவரை கண்டதே இல்லை. எங்கள் பெற்றோர்கள் பிரிந்து வாழ்கிறார்கள். ஒரு கிறிஸ்தவ திருமணம் மற்றும் குடும்ப வாழ்வு என்றால் எப்படி இருக்கும் என்றுகூட எங்களுக்குத் தெரியாது. இனிமேலும் எங்களுக்கு ஓர் மகிழ்ச்சி நிறைந்த திருமணம் மற்றும் குடும்ப வாழ்வு அமையும் என்ற நிச்சயம் எப்படி உண்டாகும்?''

ஆகவே, மகிழ்ச்சி நிறைந்த ஓர் குடும்ப வாழ்வை நீங்கள் எவ்வாறு கட்டி பராமரிப்பீர்கள்? இவ்வுலகில் வாழ்ந்த ஞானிகளி ளெல்லாம் தலை சிறந்த ஞானியாகிய சாலொமோன் தனது அழகிய நடையில் இவ்வாறு எழுதுகிறான்: ''கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா: கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளி விழித்திருக்கிறது விருதா. நீங்கள் அதி காலையில் எழுந்து, நேரப்பட வேலையிலே தரித்து, வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா; அவரே தமக்குப் பிரியமான வனுக்கு நித்திரை அளிக்கிறார்'' (சங்கீதம் 127:1-2).

இந்த இரண்டு வசனங்களிலும் சாலொமோன் தனது சுய சரிதத்தை இரத்தினச் சுருக்கமாக எழுதியிருக்கிறான். அல்லது இவைகளை சாலொமோனின் கடைசிக் கால வார்த்தைகள் என்றும் கூறலாம். ''பிரசங்கி'' என்னும் தலைப்பில் அவன் எழுதிய மாபெரும்

பிரசங்கத்தின் சுருக்கெழுத்து வாசகங்கள்தான் இந்தக் குறுகிய சங்கீத மாகும். அவன் தனக்கு மிகவும் பிரியமான வார்த்தையாகிய ‘‘விருதா’’ அல்லது ‘‘மாயை’’ என்னும் பதத்தையே இவ்விரண்டு வசனங்களிலும் பயன்படுத்துகிறான்.

தான் கையிட்டுச் செய்யும் எந்த வேலையையும் மிக நேர்த்தி யாகவும் யாவரும் புகழும்படியும் செய்து முடிப்பதில் நிபுணன் சாலொமோன். ஆனாலும், எந்தவொரு வேலையும் விருதாவாகப் போகவும் வாய்ப்புண்டு என கூறுகிறான். அவன் அநேகக் காரியங் களைக் குறித்து மிகவும் கவலைப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவன் இங்கு, அதிகாலையில் எழுந்து, கடினமாக உழைத்து சம்பாதித்துச் சாப்பிட்டுப் பின்பு படுக்கைக்குச் செல்லுவதும் கூட விருதா என்று கூறுகிறான். மட்டுமல்ல, நாம் வீட்டைக் கட்டுவதும் விருதா என கூறுகிறான். சாலொமோன் ஒரு தலை சிறந்த கட்டடக் கலைஞன். அவன் ஒரு தேவாலயத்தை மாத்திரமல்ல, பட்டணங் களையும், பூங்காக்களையும், சத்திரங்களையும்கூட கட்டினான். ஒரு அரசியைக் கண்டுச் சந்திப்பதற்காக கடல் பிரயாணம் செய்யக் கப்பல் களைக் கூட கட்டினான். அவனது கட்டட ஆர்வத்துக்கு ஓர் எல்லையே இல்லை.

கவலைப்படுவதும் கூட விருதாவாய்ப் போக சாத்தியம் உண்டு. ஏனெனில், நீங்கள் ஒருவேளை தவறான காரியங்களுக்காகக் கவலைப்படலாம். நீங்கள் தவறான காரியங்களுக்காக வேலை செய்வதினால் உங்கள் வேலையும் கூட விருதாவாய்ப் போக வாய்ப் புண்டு. தவறான காரியங்களைக் கட்டுவதினால் நீங்கள் கட்டியதும் கூட விருதாவாய்ப் போகக் கூடும்.

பின்பு சாலொமோன் பிள்ளைகளைக் குறித்து எழுத ஆரம்பிக் கிறான். இதற்கு முன்பு அவன் சொன்னவைகள் பிள்ளைகளுக்கும் பொருந்துமோ? ஆம், சகலமும் அதன் உள்ளடங்கும். எல்லாவற்றை யும் கட்டியிருந்தும் தனது பிள்ளைகளின் வாழ்வைக் கட்டி எழுப்ப தான் தவறி விட்டதாக சாலொமோன் உணர்ந்தான். இப்பொழுது அந்த ஞானியாகிய அரசன் கூறுவதைக் கவனியுங்கள். ‘‘இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். வால வயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவைகளால் தன் அம்பறாத்தூணியை நிரப்பின மனுஷன் பாக்கியவான்; அவர்கள் நாணமடையாமல் ஒலிமுக வாசலில் சத்துருக்களோடே பேசுவார்கள்’’ (127:4-6).



இந்த சங்கீதமானது திருமணம் மற்றும் குடும்ப வாழ்வின் பிரமாணத்திற்கு எதிர்மறையான செயல்பாட்டைக் கூறுவதாக உள்ளது. சாலொமோன் கூறுவதின் பொருள் இதுதான்: ‘‘நான் செய்ததைப் போல நீங்களும் செய்யாதிருங்கள். ஏனெனில், விருதாவாகவே நான் வேலை செய்தேன், விருதாவாகவே நான் கட்டினேன். விருதாவாகவே நான் கவலைப்பட்டேன். நீங்கள் உண்மையிலேயே கரிசனைக் கொண்டு கவனம் செலுத்த வேண்டிய ஓர் காரியம்: உங்கள் பிள்ளை களின் வாழ்க்கையே ஆகும்.’’ இந்த சங்கீதத்தை எழுதி முடிக்கும் போது, பிள்ளைகள்தான் பெற்றோரின் கையில் உள்ள அம்புகளுக்குச் சமமானவர்கள். அவர்களைக் கொண்டு பகைவர்களை நேருக்கு நேர் சந்திக்கப் பெற்றோர்கள் பலமுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்னும் கருத்தாழம் மிக்க ஓர் உருவக அணியை சாலொமோன் எழுதுகிறான். அம்பின் வீரியமும் பாய்ந்து செல்லும் திசையும், வில்லில் அதனை நாணேற்றுபவரைப் பொறுத்து அமையும். எவ்வளவுக்கு அதிகமாக அந்த அம்பு போர் நுணுக்கத்துடன் எய்யப்படுகிறதோ அவ்வளவுக்கு அதிகமாக அதன் வேகமும் வீரியமும் பாயந்து செல்லும் திசையும் அமையும்.

நமது பிள்ளைகள்தான் அம்புகள். பெற்றோராகிய நாம்தான், அம்பை உலகை நோக்கி எய்யப் பயன்படுத்தப்படும் வில்லுகள். பெற்றோராகிய நாம் இந்த வசனங்கள் போதிக்கும் பாடத்தை உணர்ந்து கொள்ளும்போது, கர்த்தரால் கட்டப்படாத எந்த குடும்ப வாழ்வும் கட்டப்படமாட்டாது என்னும் சத்தியத்தை நினைவு கூற வேண்டும்.

திருமணம் மற்றும் குடும்ப வாழ்வை நம்மால் கட்டமுடியாது. அதைக் கட்டுபவர் தேவன்தான் என்னும் சத்தியத்தை மற்றுமொரு அழகிய உருவக அணியைக் கொண்டு சாலொமோன் இங்கு விவரித்துக் கூறுகிறான். சாலொமோனின் கூற்றுப்படி, தேவன்தாமே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்.

நாம் விழித்திருந்து தேவன் நமது சரீரங்களைப் பெலப்படுத்தும் படி எவ்வளவுதான் காத்திருந்தாலும் கூட அவர் நம்மைப் பெலப்படுத் துகிறதில்லை. ஆனால் நாம் களைத்துப்போய் உறங்கச் செல்லும் போது, பெலமிழந்துபோன நமது சரீரங்களையும், மனதையும், உணர்வு களையும் ஆவிகளையும் தேவன் பெலப்படுத்திச் சுகமளிக்கிறார்.

## *ஓர் தரமான திருமணம்*

தேவனால் ஏற்படுத்தப்பட்ட பங்காளத்துவத்திற்குள் பிரவேசிக்கிற தேவ பக்தியுள்ள நபர்களால் விளைவதை தரமானப் பெற்றோர்கள் என நமது பிரமீடு விளக்குகிறது. திருமண உறவு செழித்து வளரவும், தங்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர்கள் சிறந்தோங்கவும், அந்தத் திருமண உறவின் மையமாக தேவன் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். தேவன் நமக்கு உதவி செய்யாவிடில் புருஷன்-மனைவி ஸ்தானத்தில் ஒருவருக்கொருவர் ஆற்ற வேண்டிய கடமையிலும் பெற்றோர் ஸ்தானத்தில் பிள்ளைகளுக்கு ஆற்ற வேண்டிய கடமையிலும் நம்மால் செழித்தோங்க முடியாது.

திருமணம் மற்றும் விவாகரத்து ஆகியவைகளைக் குறித்து எழுப் பப்பட்டக் கேள்விகளுக்கு இயேசு பதிலளிக்கும் போது, மோசே விவாகரத்தை அனுமதித்தார். ஆனால் அது அந்தப் பெண்மணிகளை அவர்களுடைய புருஷர்களிடத்திலிருந்து பாதுகாப்பதற்காகவே என்று கூறினார். மத்தேயு பத்தொன்பதாம் அதிகாரத்தில் நாம் இதைக் குறித்து தெளிவாகக் காண்கிறோம். அந்நாட்களில் பெண்களுக்கு எந்த உரிமையும் வழங்கப்படவில்லை. நியாயமாகச் சேரவேண்டிய சுதந்தர மும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. மனைவியை விவாகரத்து (தள்ளி விடுதல்) செய்யலாம் என்ற சட்டத்தை பேதைகளான பெண்களைக் காப்பாற்றும் எண்ணத்துடன் மோசே இஸ்ரவேலர் களுக்கு ஏற்படுத்தினார். ஆனால் இயேசுவின் கூற்றுப்படி, அது தேவனுடைய விருப்பமல்ல என்பது தெளிவாகிறது. விவாகரத்து என்னும் ஓர் காரியம் காணப்படலாகாது என்பதே ஆதியில் தேவன் கொண்டிருந்த நோக்கமாகும்.

அப்பொழுது இயேசுவின் சீஷர்களில் ஒருவன்-அது பேதுருவாக இருக்கும் என நான் எண்ணுகிறேன் - ‘‘மனைவியைப் பற்றி புருஷனுடைய காரியம் இப்படியிருந்தால் விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல’’ என்றான் (மத்தேயு 19:10).

இயேசு அவனுக்குப் பதிலாக ‘‘வரம் பெற்றவர்களே தவிர மற்றவர் கள் இந்த வசனத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்’’ (வ.11) என்றார். இந்தப் போதனையைப் புரிந்து கொள்ளவும் அப்பியாசிக் கவும் பரிசுத்தாவியானவர் யாருக்கு உதவி செய்கிறாரோ அவர்களால் மட்டுமே இதைச் செய்ய முடியும் என்பதுதான் இதன் பொருளாகும். தேவனுடைய ஒத்தாசையின்றி, ஓர் சரியான அல்லது சமமான திருமணப் பங்காளராக ஆவது கூடாத காரியம் என இயேசு கூறினார்.



தேவனுடைய உதவியின்றி நம்மால் நமது வீட்டைக் கட்டிக் கொள்ள முடியாது என்று சாலொமோனும் இயேசுவும் நமக்குக் கூறுகின்றனர். அவர் இல்லாவிட்டால் நமது உழைப்பு விருதாவாகப் போய் விடும். தேவனுடைய உதவி இன்றி நாம் ஒரு நல்ல பெற்றோர் களாகவோ அல்லது நல்ல பங்காளர்களாகவோ ஆக முடியாது. தேவனுடைய உதவியின்றி நாம் நல்ல நபர்களாக ஆக முடியாது என்றுதான் வேத வாக்கியங்கள் யாவும் நமக்குப் போதிக்கின்றன. மாம்சத்தினால் பிறந்த யாவும் மாம்சமாயிருக்கும் என்பது இயேசுவின் போதனையாகும் (யோவான் 3:6). மாம்சம் என்பது தேவ உதவி பெறாத மனித சுபாவமாகும். அவராலேயே அன்றி நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று இயேசுவே கூறியிருக்கிறார் (யோவான் 15:5).

தேவனுடைய பார்வையில் கனம் பெற்ற ஓர் திருமணத்தை நீங்கள் பெற விரும்பினால், தேவனால் ஒன்று சேர்க்கப்பட்ட திரு மணத்தை, தேவனால் அங்கீகரிக்கப்பட்ட திருமணத்தை, தேவனால் பாதுகாக்கப்பட்ட திருமணத்தை, தேவனுடைய நோக்கங்களை நிறை வேற்றுகிற ஒரு திருமணத்தை நீங்கள் பெற வேண்டுமென விரும்பி னால் பின்வரும் ஜெபத்தைச் சொல்லுங்கள்.

> ‘‘ஓ அன்புள்ள பரம தகப்பனே, இந்த வீட்டை ஆசீர்வதியும்
>
> உமது பிரசன்னத்தின் ஒளியினால் எங்கள் வீட்டை ஆசீர்வதியும்
>
> உமது அன்பின் ஆவியினால் பெலப்படுத்தும்
>
> உமது உறவுகளால் இந்த வீட்டை ஓர் நல்ல குடும்பமாக்கும்.
>
> ஒரு முக்கியமான பங்காளத்துவத்தைப் பெறும்படிக்கு நபர்களா யிருக்கிற எங்களைச் சுகமாக்கும்.
>
> அன்பும் ஞானமும் நிறைந்த பெற்றோர்களாக விளங்க உதவி செய்யும்.
>
> ஒவ்வொரு நாளும் உமது கிருபையைப் பெற்றுக் கொள்ளும் வழியை எங்களுக்குக் காண்பியும்.
>
> இந்த வீட்டில் நாங்கள் செய்கிற ஒவ்வொரு செயலும் கிறிஸ் துவுக்காகவும், கிறிஸ்துவினாலும் கிறிஸ்துவுக்குள்ளும் செய்யப் படுவதாக.
>
> உயிர்த்தெழுந்தவரும் உயிரோடிருக்கிறவருமாகிய கிறிஸ்து வின் அன்பும், ஜீவனும், ஒளியும்

எங்களைப் பெலப்படுத்தி வழிநடத்துவதாக
இந்த வீட்டிற்குள் வரும்போதும் வெளியே போகும்போதும்
குறிப்பாக இந்த சுவர்களுக்குள் வாழும்போதும்
கிறிஸ்துவின் சாட்சிகளாக விளங்க உதவி செய்யும்.
இந்த வீட்டை ஓர் நம்பிக்கையின் சின்னமாக மாற்றும்
தமது வார்த்தையினால் இந்த வீட்டை எடுத்துக் கட்டினவரை
தமது ஆவியின் மூலமாக இந்த வீட்டை ஒன்று சேர்த்தவரை
தமது கிருபையினால் இந்த வீட்டைக் காக்கிறவரை
இந்த வீடு எப்போதும் சுட்டிக்காட்டட்டும்.
பிதாவே, இயேசுவின் நாமத்தில் எங்கள் வீட்டை ஆசீர்வதியும்
ஆமென்''.

**அத்தியாயம் 2**

## தேவனுடைய பார்வையில் ஓர் திருமணம்

திருமணம் மற்றும் விவாகரத்து என்னும் தலைப்பின் கீழ் அமைந்துள்ள இயேசுவின் தெளிவான போதனையைக் கொண்ட ஒரு பகுதி சுவிசேஷ நூல்களில் இடம் பெற்றுள்ளது. இந்த வேதப் பகுதியை உங்களுக்கு நான் ஏற்கனவே எடுத்துக் காட்டியிருக்கிறேன். ''தேவனுடைய பார்வையில் ஒரு திருமணம் என்றால் என்ன?'' என்ற கேள்விக்குப் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலுமிருந்து பதில்கள் இயேசுவினால் கொடுக்கப்பட்டிருக்கிறபடியினால் நான் மீண்டும் அந்தப் பகுதிக்கு நமது கவனத்தைத் திருப்ப வேண்டும் என்று விரும்புகிறேன்.

''அப்பொழுது, பரிசேயர் அவரைச் சோதிக்க வேண்டுமென்று அவரிடத்தில் வந்து: புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்திரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் விசுவாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார். அதற்கு அவர்கள்: அப்படியானால், தள்ளுதற் சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார் என்றார்கள். அதற்கு அவர்: உங்கள் மனைவிகளைத் தள்ளி விடலாமென்று உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதி முதலாய் அப்படி இருக்கவில்லை. ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததின் நிமித்தமேயன்றி அவளைத் தள்ளி விட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபச்சாரஞ் செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபச்சாரஞ் செய்கிறவனாக இருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி : மனைவியைப் பற்றி புருஷருடைய காரியம் இப்படியிருந்தால், விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல என்றார்கள். அதற்கு அவர்: வரம் பெற்றவர்களே தவிர மற்றவர்கள் இந்த வசனத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், என்றார்'' (மத்தேயு 19:3-11).

## திருமணம் என்பது ஒரு தெய்வீகமான உறவு

இந்த உறவின் ஏழு பரிமாணங்களில் முதலாவது பரிமாணத்தைக் குறித்து முதலாம் அத்தியாயத்தில் நான் விளக்கியுள்ளேன். ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே உள்ள இந்த உறவானது தெய்வீகமானது என்று நாம் கண்டோம். வேதாகமத்தின் சிருஷ்டிப்பு அதிகாரத்தில் சிருஷ்டிகர் ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் சிருஷ்டித்து அவர்களை ஒருமைத்துவம் என்னும் நிலைக்குக் கொண்டு வருகிறதைக் காண்கிறோம். தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பான் என்று சொல்லி தேவனுடைய பார்வையில் திருமணத்திற்கான பொருளை விளக்குகிறார். கர்த்தர் தாமே ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் இணைத்தார் என்று நாம் சொல்லுகிற திருமணம்தான் தேவனுடைய பார்வையில் ஒரு திருமணமாகக் காணப்படுகிறது. அப்பொழுது தான் திருமணம் செய்து கொள்ள நாம் எடுக்கும் தீர்மானமானது தெய்வீக வழிநடத்துதலால் ஏற்பட்ட ஒன்றாக இருக்க முடியும்.

இந்த உறவு தெய்வீகமானது. ஏனெனில், அந்த உறவுக்கான திட்டத்தை அவர் தாமே தமது வார்த்தையில் எழுதி வைத்திருக்கிறார். இந்தத் தம்பதியரை தேவன் ஒரே மாம்சமாக்கினபோது அவர்கள் ஒன்றாகக் கொண்டுவரப்பட்டனர். தேவன் மாத்திரமே இவர்களை ஒன்றாக இணைத்து வைக்க முடியும் என்று இயேசு நமக்குக் கூறுகிறார்.

ஒவ்வொரு பங்காளரும் அவனுடைய/அவளுடைய பிரச்சினை களைத் திருமண உறவுக்குள் கொண்டு வருகிறபடியினால், நாம் நிறைவேற்றி முடிக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கிற பொறுப்புகள், கடமைகளை எதிர் கொள்ள வேண்டிய சவால் ஒன்று நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு திருமணத்தில் நமது பொறுப்புகள் என்ன என்பதை முதலாவது நாம் அறிந்து கண்டு கொண்ட பின்பு அவை களை நாம் நிறைவேற்றுகிறோமா அல்லது நிறைவேற்றாமல் விட்டு விடுகிறோமா என்பதைக் குறித்த கரிசனை உடையவர்களாகவும் இருக்க வேண்டும். ஒரு திருமணத்தில் நம்மால் ஏற்படும் பிரச்சினை களுக்குப் பொறுப்பை நாமே ஏற்றுக்கொள்ள நாம் முன்வர வேண்டியது அவசியம்.

### *திருமணம் என்பது ஒரு நிரந்தரமான உறவு*

மத்தேயு 19 ஆம் அதிகாரத்தில் உள்ள இயேசுவின் போதனையி லிருந்து திருமணமானது ஒரு நிரந்தரமான உறவாக இருக்க வேண்டியது அவசியம் என காண்கிறோம். திருமணம் ஓர் நிரந்தரமான உறவாக இருக்க வேண்டியதின் அவசியம் என்ன? இக்கேள்விக்கான விடையை இரண்டே வார்த்தைகளில் சுருங்கக் கூறலாம்: பிள்ளை களின் உரிமைகள்.

சங்கீதம் 127-ல் சாலொமோன் நமக்குக் கொடுத்த உதாரணம் நினைவிருக்கிறதா? ஓர் அம்புக்கு வில் எப்படி இருக்கிறதோ அப் படியே பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளுக்கு இருக்க வேண்டும். பிள்ளைகள் தங்கள் வாழ்வில் செல்லுகின்ற திசையும் வேகமும் அவர்கள் எவ்வளவுக்கு அதிகமாக உந்தித் தள்ளப்படுகிறார்ளோ அதைப் பொறுத்தே அமையும். நீங்கள் ஒரு பிசாசாக இருந்து குடும்பத்தை நாசமாக்க வேண்டுமென்று விரும்பினால் என்ன செய் வீர்கள்? வில்லிலுள்ள அந்த நாணை அறுத்து விடுவீர்கள் அல்லவா? வில்லையே உடைத்துப் போடுவீர்கள் அல்லவா? அதையே தான் சாத்தான் செய்து கொண்டிருக்கிறான். குடும்பங்களை நாசமாக்கிவிட அவன் மும்முரமாக முயற்சி செய்து கொண்டிருக்கிறான். வில்லிலுள்ள நாணை அவன் அறுத்தெறிகிறான்.

திருமணம் மற்றும் குடும்ப வாழ்வுக்காக தேவன் ஏற்படுத்தின வாழ்வின் பிரமாணமானது வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள மிகப் பழமையான மேன்மையான பிரமாணங்களில் ஒன்றாகும். ஏனெனில், அது இருபது ஆண்டு போஷாக்கிற்குப் பின்பு பிள்ளைகளின் உலகிற் குள் புறப்பட்டுச் சென்று வாழ்வை எதிர் கொள்ள தானாகவே



அவர்களைப் பக்குவப்படுத்துகிற ஓர் குடும்பத்தை உருவாக்குகிறது. பிள்ளைகளுக்கு அந்தப் போஷாக்கும் பாதுகாப்பும் தேவையாயிருக் கிறது. வில்லிலுள்ள நாணை நீங்கள் அறுத்தெறியும் போது, ஒரு திருமணம் முடிவடையும் போது, உங்கள் பிள்ளைகளுடைய போஷாக் கையும், பாதுகாவயையும், தேவன் அவனுக்கென்று வைத்திருந்த திட்டத் தையும் சீர்குலைத்து, வேதாகமத்தின் முதல் இரண்டு அதிகாரங்களில் தேவன் எழுதி வைத்திருக்கும் திருமணம் மற்றும் குடும்ப வாழ்வுக் கானப் பிரமாணத்தின் நோக்கத்தையும் தவறிப்போகச் செய்கிறவர்களா யிருப்பீர்கள். இன்று பிள்ளைகளிடத்தில் காணப்படுகின்ற மிகப்பெரிய பிரச்சினைகளுள் இதுவும் ஒன்றாகும். தனது வாழ்நாள் முழுவதும் வாலிபப் பிள்ளைகளுக்கு ஆலோசனை வழங்கி ஊழியம் செய்து வந்த எழுபத்தெட்டு வயது ஆலோசகர் ஒருவர் இவ்வாறு கூறினார்: ‘‘எனது ஆலோசனை வழங்கும் ஊழிய அனுபவத்தில் முதன் முதலாக, குழந்தைகளால் அடிக்கடிக் கேட்கப்படும் கேள்விகளில் மிகப்பெரிய கேள்வி ‘‘என் நண்பர்களை எப்போதும் ஒன்றாகச் சேர்த்து வைத்துக் கொள்வது எப்படி?’’ என்பது தான்.

அதனால்தான் திருமணம் என்பது ஒரு நிரந்தரமான உறவாக இருக்க வேண்டுமென்று இயேசு கூறினார். உங்கள் திருமணம் எவ்வளவு பாதுகாப்பாக இருக்கிறதோ அவ்வளவு பாதுகாப்புடன் உங் கள் பிள்ளைகளும் இருக்கிறார்கள். உள்ளுணர்வில் அவர்கள் அதை அறிந்திருக்கிறார்கள். உங்கள் பிள்ளைகளுடைய முகத்தில் பீதியை நீங்கள் காண விரும்பினால், உங்கள் மனைவியுடனோ அல்லது உங்கள் கணவனுடனோ நீங்கள் சண்டையிடும் போது அவர்களை ஏறிட்டுப் பாருங்கள். தங்கள் தாயும் தகப்பனும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுக்குப் பாதுகாவல் இல்லை என்பதை அவர்கள் உணர்கின்றனர். மாறாக, அவர்களுடைய முகங்களில் சந்தோஷத்தைக் காண நீங்கள் விரும்பினால், பாசத்தைக் காட்டுங்கள்; உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாகவே உங்கள் மனைவியையோ அல்லது கணவனையோ முத்தம் செய்யுங்கள். நீங்கள் அவ்வாறு செய்யும் போது அவர்கள் உங்களைக் கேலி செய்யலாம். ஆனால் அச்செயலானது உங்களை முட்டாளாக்க இடங்கொடுக்காதீர்கள். அவர்கள் அதை விரும்புகின்றனர் ! அன்பையும் பாசத்தையும் நீங்கள் பொழிவதை அவர்கள் காணும்போது, உங்கள் திருமண வாழ்வு நன்றாக இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டதைப் போல உங்களைப் பார்ப்பார்கள். அதுவே அவர்களுக்கு ஓர் பாது காவலை அளிக்கிறது.

கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதற்கு முன்பே சிலர் இரண்டாம் திருமணம் அல்லது மூன்றாம் திருமணம் வரைக்கும் சென்று விடு கின்றனர். அவர்கள் விசுவாசிகளாகும் போது வேறொரு திருமண வாழ்வில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள், பழைய திரு மண உறவில் அவர்களுக்கு பிள்ளைகள் இருக்கின்றனர். இப்படி இருக்கும் சூழ்நிலையில் திருமணம் மற்றும் விவாகரத்தைக் குறித்து இயேசுவானவர் போதித்த போதனையை இவர்கள் தங்களுடைய வாழ்வில் அப்பியாசிப்பது எப்படி?

தேவனுடைய பிரமாணங்களை மக்கள் தங்களுடைய வாழ்க்கை யில் அப்பியாசிக்க வேண்டும் என்று இயேசு போதனை செய்வதற்கு முன்பு தேவ அன்பை அவர் மக்களுக்கு வெளிப்படுத்திக் காட்டினார். அவரது நாட்களில் வாழ்ந்து வந்த மத ஸ்தாபகர்களுக்கும் இயேசுவுக் கும் ஓர் பெரிய வித்தியாசம் உண்டு. மனிதனுடைய நல்வாழ்வுக்காக தேவன் கொடுத்தப் பிரமாணங்கள் யாவும் அவருடைய இருதயத்தி லிருந்து வெளிப்பட்ட அன்பினாலேயே என்பதை இயேசு அறிந் திருந்தார். வேதாகமத்தில் தேவனுடைய பிரமாணங்கள் கொடுக்கப் பட்டதின் நோக்கம், தேவன் தமது அன்பை மனிதனுக்கு வெளிப் படுத்துவதே ஆகும். நாம் அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று தேவன் விரும்புகிறார். அதற்காகவே அவர் தமது பரிசுத்த வார்த்தையை நமக்கு அருளிச் செய்திருக்கிறார். சட்ட திட்டங்களை நமக்குக் கொடுத்து அதனால் நாம் எவ்வளவு சந்தோஷமின்றி இருக்கிறோம் என்பதைக் காண்பதற்காக அவர் அவைகளை நமக்குக் கொடுக்கவில்லை. நாம் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். வேதத்தில் சொல்லப்பட்டுள்ள தேவனுடைய ஒவ் வொரு பிரமாணத்திற்கும் ஓர் குறிப்பிட்ட நோக்கம் உண்டு. மனிதனை தேவன் நேசிப்பதினால், அந்தப் பிரமாணங்கள் யாவையும் அவனு டைய நன்மைக்காகவே அவர் கொடுத்திருக்கிறார் என்பது இறுதியில் தெரியவரும்.

மதத் தலைவர்களாகிய பரிசேயர் பிரமாணத்தின் ஆவியைக் காணும் கண்களை இழந்துவிட்டனர். பிரமாணத்தின் ஒரு சிறு பகுதியை உடைத்திருந்தாலும் அல்லது நிறைவேற்றத் தவறியிருந் தாலும் அப்படிப்பட்ட மக்களைப் பிடிப்பதில் அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால், மோசேயின் மூலமாகத் தமது பிதாவானவர் இந்தப் பிரமாணங்களைக் கொடுக்கும் போது அவர் கொண்டிருந்த நோக்கத்தைக் காணும் கண்களை இயேசுவானவர் இழந்து போக வில்லை. ''தேவன் ஏன் இந்தப் பிரமாணத்தைக் கொடுத்தார்? இந்தப்



பிரமாணத்தின் மூலமாக மனிதனுடைய நல்வாழ்வுக்காக தேவனுடைய அன்பு வெளிப்படுத்தும் செய்தி என்ன?'' போன்ற காரியங்களின் மீது இயேசுவானவர் தமது பார்வையைத் தொடர்ந்து செலுத்தி வந்தார்.

உதாரணமாக, திருமணம் மற்றும் குடும்ப வாழ்வின் பிர மாணத்தை அவர் கொடுத்ததின் நோக்கம், நாம் மகிழ்வுடன் வாழவும் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஓர் குடும்பத்தையும் நாம் உடைய வர்களாக இருப்பதுவே ஆகும். ஆதியில் தேவன் மனிதனைச் சிருஷ் டித்தபோது, தனிமையாயிருப்பது மனிதனுக்கு நல்லதல்ல என்று கண்ட தினால், அவனைக் குடும்பம் என்னும் ஓர் கூட்டிற்குள் வைத்தார் என்று வேதத்தில் வாசிக்கிறோம் (சங்கீதம் 68:6). நாம் தனிமையாயிருப் பதை அவர் விரும்புகிறதில்லை (இக்குறிப்பட்ட விஷயத்தில் மேலும் அதிகமாக அறிந்து கொள்ள இப்புத்தகத்தின் ஆறாவது அத்தியாயத் தைக் காணுங்கள்).

## திருமணம் என்பது இருவருக்கென்றே ஏற்படுத்தப்பட்ட தனிப் பட்ட ஓர் உறவு முறை

திருமணம் என்பது தெய்வீகமானதும் நிரந்தரமானதுமான உறவு முறை மட்டுமல்ல, இயேசுவானவர் மற்றும் மோசே ஆகியோரின் கூற்றுப்படி, அது புருஷன்-மனைவி ஆகிய இருவருக்கென்றே ஏற் படுத்தப்பட்ட தனிப்பட்ட ஓர் உறவுமுறையாகும். ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள இந்த ஒருமனமானது குறைந்த பட்சம் இரண்டு காரணங்களுக்காக தனிப்பட்டது. ''இதினிமித்தம் புருஷனான வன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்...'' என்று மோசே கூறினார். திருமணம் மற்றும் விவாகரத்தைக் குறித்த விஷயத்தில், மோசே சொன்னது சரிதான் என்று இயேசுவும் ஒப்புக் கொண்டு தமது உறுதியான அறிக்கையைத் தெரிவித்தார் (மத்தேயு 19:5). திருமணமானது, மணம் புரிந்து கொண்ட தம்பதியரை அவர்களது பெற்றோர்களிடத்திலிருந்து பிரிக் கிறது அல்லது தனிமைப்படுத்திவிடுகிறது. திருமணமான பின்பு, அந்தத் தம்பதியினர் தங்கள் பெற்றோருடன் கொண்டுள்ள நல்லுற வைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்பது இதன் பொருளல்ல. ஆனால் பெற்றோரோடு சேர்ந்து அவர்கள் வாழமாட்டார்கள் என்பது தான் அதன் அர்த்தமாகும். நீங்கள் ஒரு பெண்மணியாயிருப்பீர்களா னால், உங்கள் தகப்பன் இனி உங்களுக்கு ஆவிக்குரிய தலைவரல்ல; உங்கள் புருஷன்தான் இனி உங்களுக்குத் தலைவராயிருக்கிறார்.

இருவருக்கும் இடையே ஏற்படுகின்ற அந்நியோன்னியம் அல்லது நெருக்கத்தின் அடிப்படையிலும் திருமணம் என்பது

தனிப்பட்டது. திருமணம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே செய்து கொள்ளப்படுகிற ஒரு விதமான ஒப்பந்தத்தைப் போன்றது என இயேசுவானவர் போதித்தார். அந்த ஒப்பந்தமானது ''தனிப்பட்ட'' என்னும் நிபந்தனையின் அடிப்படையில் உண்டானது. இந்தத் தனிப்பட்ட தன்மை மீறப்படுமானால் அல்லது சீர்குலைக்கப்படு மானால், அந்தத் திருமண ஒப்பந்தமே அர்த்தமற்றதாகிவிடும். அது அவ்வாறு ஆக வேண்டுமென்ற அவசியமில்லை, ஆனால் அவ்வாறு ஆகக்கூடும். புருஷன் மனைவிக்கே உரிய தனிப்பட்ட உறவு முறை யில்லாமல் தம்பதியர் வாழ வேண்டுமென்று தேவன் திருமணத்தை ஏற்படுத்தவில்லை. நீங்கள் அதைச் செய்ய வேண்டுமென்று அவர் சொல்லவில்லை. உங்கள் புருஷனோ அல்லது மனைவியோ இந்தத் தனிப்பட்ட உறவு முறையில் வாழ விரும்பாவிட்டால் நீங்கள் அதை நிராகரித்துவிடலாம். ஏனெனில் திருமணம் என்பது ஓர் தனிப்பட்ட உறவுமுறை ஆகும்.

ஒரு நாள் ஒரு மனிதன் என்னைக் காண வந்திருந்தான். நான் ஒரு போதகராகப் பணியாற்றிக் கொண்டிருந்த இடத்தின் அருகிலுள்ள ஒரு ஹோட்டலில் வேலை செய்து வந்தான். கோடைக் காலத்தில் அவன் ஒரு பெண்ணை சந்தித்தான். அவன் அவளை மிகவும் நேசித்தான். அந்தக் கோடைக் காலம் முழுவதிலும் அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ளாமலேயே தாம்பத்திய உறவு கொண்டு வாழ்ந்து வந்தனர். கோடைக் காலம் முடிந்தது. அந்தப் பெண் தனது கல்லூரிப் படிப்பைத் தொடரும்படி திரும்பிச் சென்றுவிட்டாள். ஆனால் சமயம் வாய்த்த போதெல்லாம் வார இறுதியில் அங்கு வந்து அவனைச் சந்தித்து வந்தாள். ஆனால் ஒரு குறிப்பிட்ட வார இறுதியில் அவள் அவனைச் சந்திக்க வரவில்லை. அன்று அவள் அவனை தொலை பேசியில் அழைத்து, 'நான் இனி அங்கு வந்து உன்னைச் சந்திக்கப் போவதே இல்லை' என்று கூறிவிட்டாள்.

அவன் என் அலுவலகத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு தேம்பித் தேம்பி அழுதான். அவன் உள்ளம் உடைந்து போயிருந்தது. கடைசி யாக அவன் என்னிடத்தில், ''உங்களுக்குத் தெரியுமா, இவ்வளவு ஆழமும் அந்நியோன்னியமும் நிறைந்த உணர்வுகள் கொண்ட இந்த உறவு ஒரு பாதுகாவலுடன் வந்திருக்க வேண்டும்'', என்று கூறினான். பாதுகாப்பற்றதும் விலகிப் போகிறதுமான ஓர் உறவினால் உண்டாகும் உணர்வுகளைத் தேக்கி வைக்க அவன் விரும்பவில்லை. ஒரு தொலை பேசி மூலமாக வந்த வார்த்தையோடு தனது உறவுக்கு ஓர் முடிவு வந்துவிட்டதே என்று சொல்லி அவன் குமுறிக் கொண்டிருந்தான்.



மோசே மற்றும் இயேசுவின் மூலமாக சொல்லப்பட்ட திருமணத்திற் கான தேவனுடைய திட்டத்தைக் குறித்துக் கேட்டு அறிந்துகொள்ள அவன் இப்பொழுது ஆயத்தமாயிருந்தான்.

திருமணம் போன்ற அந்நியோன்னிய உறவுமுறையில் நீங்கள் பாதுகாவலற்றவர்களாக இருப்பதை தேவன் விரும்பவில்லை. அத னால் தான் இயேசுவும் மோசேயும் ''தனிப்பட்டது'' என்பதை (exclu siveness) ஓர் திருமண ஒப்பந்தத்தின் நிபந்தனையாக ஏற்படுத் தினார்கள்.

**அத்தியாயம் 3**

## ஒருமைப்பாட்டின் ஏழு இணைப்புகள்

ஆப்பிரிக்க விசுவாசி ஒருவன், ஆதியில் தேவன் முதல் தம்பதி யரைச் சிருஷ்டித்து. அவர்கள் ''ஒரே மாம்சமாயிருப்பார்கள்'' என்று உரைத்த போது, அவர் தமது சிந்தையில் கொண்டிருந்த அந்த உறவின் நோக்கத்தைச் சித்தரிக்கும் விதத்தில் மரத்தாலான ஓர் அழகிய சிற்பத் தைச் செதுக்கினான். அவன் இந்தச் சிற்பத்தைச் செதுக்கும் போது, ஒரு புருஷனும் ஒரு மனைவியும் எவ்வாறு ஒரே மாம்சமாயிருக்கலாம் என்பதை விளக்குவதற்கு ஏழு வழிகளைச் சித்தரித்துக் காட்டினான்.

ஒரே மரத்துண்டிலிருந்து அந்த புருஷன் மனைவி சிற்பம் வடிவமைக்கப்பட்டிருந்தது. ஐந்து இரட்டை இணைப்புகள் கொண்ட ஒரு சங்கிலியால் அவர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். இந்த சங்கிலி யானது அவர்களுடைய தலை உச்சியின் மீது பொருத்தப்பட்டிருந்த ஒரு இணைப்புடன் சேர்த்து பிணைக்கப்பட்டிருந்தது. இந்தச் சங்கிலித் தொடரிலுள்ள ஒவ்வொரு இணைப்பும் புருஷன்-மனைவிக்கென தேவன் கொண்டிருந்த ஒருமைப்பாட்டின் பரிமாணங்களை விளக்கு வதாயிருந்தது. அவர்களுடைய தலை உச்சியின் மீதுள்ள இணைப் பானது தேவனோடு அவர்கள் கொண்டுள்ள ஆவிக்குரிய உறவை வெளிப்படுத்துகிறது. இந்த இரண்டு இணைப்புகளுடன் சேர்த்து பிணைக்கப்பட்டுள்ள மற்ற இணைப்புகள் யாவும் அவர்கள் ஒற்றுமை யாக வாழ்தலின் அஸ்திபாரமே அவர்களுடைய ஆவிக்குரிய உறவு தான் என்னும் உண்மையை வெளிப்படுத்துகிறது.

முதல் இரட்டை இணைப்பானது பரிமாற்றத்தைக் குறிக்கிறது. அதுவே அவர்கள் தங்களுடைய ஒருமைப்பாட்டை காத்துக் கொள்ள வும் வளர்க்கவும் உதவுகிற ஓர் கருவியாக உள்ளது. அடுத்த இணைப்பு இணங்கி வாழுதல் என்பதாகும். இது அவர்களுடைய

ஒருமைப்பாட்டிற்கு ஆதாரமாயிருக்கிறது. நடுவிலுள்ள இணைப்பானது அன்புக்கு அடையாளமாயிருக்கிறது. அவர்களுடைய ஒருமைப்பாட் டிற்கு அதுவே உயிர்த்துடிப்பாயுள்ளது. அன்பு என்னும் இணைப்பைத் தொடர்ந்து புரிந்து கொள்ளுதல் என்னும் இணைப்பு உள்ளது. இது அவர்களுடைய ஒருமைப்பாட்டின் வளர்ச்சியைக் குறிக்கிறது. இந்த இரட்டை இணைப்புகளின் இறுதியில் பால் உணர்வு என்னும் இணைப்பு உள்ளது. இது அவர்களுடைய ஒருமைப்பாட்டின் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதாயுள்ளது. இந்த இணைப்புகள் யாவும் இரட்டை இணைப்புகளாக இருப்பதன் நோக்கம் என்னவெனில், அவர்களுடைய ஒருமைப்பாட்டின் பரிமாணமானது ஓர் இருவழிப் பாதையைப் போன்றது. அதாவது அவர்களுக்கிடையே அது கொடுத்தல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல் ஆகிய இரு செயல்பாடுகளைக் கொண்டதா யுள்ளது. இந்த ஐந்து தனித்தனி இணைப்புகளையும் அவர்கள் தலைமீதுள்ள இணைப்புடன் ஒன்று சேர்த்து பிணைக்கும் போது, ஒருமைப்பாட்டின் ஏழு இணைப்புகளை நீங்கள் பெற முடியும்.

புருஷனையும் மனைவியையும் ஒரே மாம்சமாக்குவது, திரு மணத்தின் இந்த ஏழு பரிமாணங்களே. இது ஏழு இணைப்புகளினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. வானொலியில் ஒலிபரப்பப்படுகின்ற, திரு மணம் மற்றும் குடும்ப வாழ்வு பற்றிய வேதபாடம் இதன் அடிப்படை யிலானது. திருமணம் மற்றும் குடும்ப வாழ்வின் பிரமாணத்தைக் குறித்து நீங்கள் வானொலி ஒலிபரப்பில் கேட்டவைகளைத் தொகுத்து இரு சிறு நூல்களின் வாயிலாக உங்களுக்கு வழங்க விரும்புகிறோம்.

## ஆவிக்குரிய இணைப்பு

''முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது'' (பிரசங்கி 4:12) என்று ராஜாவாகிய சாலொமோன் பிரசங்கித்ததில் ஆழ்ந்த கருத்து ஒன்று உள்ளது என்று வேத அறிஞர்கள் கருதுகின்றனர். முப்புரிகளாலான ஒரு கயிறோ அல்லது கம்பியோ எளிதில் அறுக்கப்பட முடியாது. ஏனெனில், அவைகள் மூன்றும் ஒன்றோடொன்றுப் பின்னிப் பிணைக் கப்பட்டுள்ளன. இந்தப் பிணைப்பானது அவைகளுக்கு மகா பெரிய பெலனை அளிக்கிறது.

தெய்வீகம், நிரந்தரம் மற்றும் தனிப்பட்ட தன்மை எனும் இம்மூன்றுத் தன்மைகளும் ஒன்று சேர்ந்த புருஷனுக்கும் மனைவிக்கும் இடையே ஒருமைப்பாட்டை தேவன் ஏற்படுத்தின போது, அவர்கள் இருவரும் தங்களுக்குள் முதலாவது ஒன்றாயிருக்கவும். பின்பு தங்களைச் சிருஷ்டித்த தேவனோடு ஒன்றாயிருக்கவும் அவர்



விரும்பினார். இவ்விதமாகத்தான் அவர் திருமணம் என்ற ஓர் பிணைப்பை ஏற்படுத்தினார். யூதப் பிள்ளைகளுடைய கல்லறையில் பொறிக்கப்பட்டிருக்கும் ஓர் அழகிய உருவக அணியை நீங்கள் இன் றைக்கும் கூட காணலாம். அந்த வாசகம் இவ்வாறு கூறுகிறது: ''உம் முடைய தேவனாகிய கர்த்தரின் ஆதரவில் இருக்கிற ஜீவனுள் ளோருடைய கட்டிலே கட்டப்பட்டிருக்கும்;'' (I சாமுவேல் 25:29). இன்று ஒவ்வொரு திருமணத்திலும் அந்த வாசகம் எழுதப்படுவது கர்த் தருடைய பார்வையில் மிகவும் ஏற்றதாயிருக்கிறது. சாலொமோன் கூறும் ''முப்புரிநூல்'' என்னும் அழகிய உருவக அணியானது விசு வாசிகள் இருவர் திருமணத்தில் இணைக்கப்படுகிறதைப் பின்வருமாறு சித்தரிக்கிறது: புருஷன், மனைவி மற்றும் கிறிஸ்துவானவர்.

திருமணத்தைக் குறித்து எழுதும்போது அப்போஸ்தலனாகிய பவுல், தனது கருத்தாழம் மிக்க அதிகாரத்தில், விசுவாசிகளான தம் பதியர்கள் ஜெபம் மற்றும் உபவாசத்தின் நிமித்தமாக மாத்திரம் சிறிது காலத்திற்குப் பிரிந்திருக்கலாம் என்று கூறுகிறார். தம்பதியரின் பாலுற வைக் குறித்தே இங்கு பேசுகிறார். தங்கள் சிருஷ்டிகரோடு அவர்கள் ஆவியில் ஒருமித்து இருக்கிறதினால் தான் அவர்களுடைய தாம் பத்திய உறவும் ஒற்றுமையும் பெலப்படுத்தப்படுகிறது என்பதை பவுல் இங்கு வெளிப்படையாகவே எழுதுகிறார். (I கொரிந்தியர்7:3-5).

சரீரப் பிணைப்பு அல்லது ஈடுபாடுகளைக் குறித்து பின்பு நான் உங்களோடு பேசுவேன். ஆனால் இப்பொழுது உங்கள் வாழ்வின் மிக நெருக்கமான உறவு முறையைக் குறித்து பவுல் இந்த வேதப் பகுதியில் விளக்கிக் கூற முயல்வது என்ன என்பதைக் குறித்துச் சிலவற்றைக் காண நான் விரும்புகிறேன். உங்கள் மனைவியோடோ அல்லது உங்கள் புருஷனோடோ நீங்கள் கொள்ளுகிற தனிப்பட்ட உறவு மிக முக்கியமானதல்ல, ஆனால் தேவனோடுள்ள உங்கள் உறவே மிக முக்கியமானதாகும். தேவனோடு நாம் கொள்ளும் உறவே மிக நெருக்கமானதுமாக இருக்கிறது என பவுல் போதிக்கிறார்.

திருமணமான பிறகும் நாம் தனித்தனியே பிரிந்து சென்று தேவனோடு கிட்டிச் சேர்வது நம்முடைய திருமணத்தை பெலப்படுத்து மானால், திருமணமான தம்பதியராயிருந்தும் கூட தேவனோடு தனிப் பட்ட விதத்தில் உறவு கொள்வது சாத்தியமே என்பதையே இது பொருள்படச் செய்கிறதல்லவா? நீங்கள் அதைக் குறித்துச் சிந்திப்பீர் களானால், தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நாம் நிற்கும்

போது நம்மைக் குறித்துதான் நாம் தேவனுக்குப் பதில் சொல்ல வேண்டும்; நம்முடைய கணவனையோ அல்லது மனைவியையோ குறித்து அல்ல என்பதைப் புரிந்து கொள்ளுவீர்கள். நியாயாசனத்திற்கு முன்பாக நாம் தனித்தனியாகத்தான் நிற்கப் போகிறோம், புருஷனும் மனைவியுமாகச் சேர்ந்து நிற்கப் போவதில்லை. இரு விசுவாசிகள் தனித்தனியே தேவனோடு எவ்வளவு ஒன்றித்திருக்கிறார்கள் என் பதைப் பொறுத்தே அவர்களது திருமண வாழ்வும் பெலமுள்ளதா கவோ அல்லது பெலவீனமானதாகவோ அமையும். புருஷனும் மனை வியும் தனித்தனியே கிறிஸ்துவினிடத்தில் அதிக விசுவாசமும் உறவும் உள்ளவர்களாக இருப்பார்களானால் அவர்கள் இருவரும் திருமணத் தால் ஒன்றாகக் கூடிவரும் போதும், அவர்களிடத்தில் காணப்படுகின்ற ஆவிக்குரிய பரிமாணமானது பொதுவானதாக இருக்கும். அந்த அனுபவமே அவர்களுடைய உறவை அதிக பெலனுள்ளதாக்கும்.

ஒரு புருஷனும் மனைவியும் தனித்தனியே ஜெபம், வேத வாசிப்பு மற்றும் வேத தியானத்தில் அமைதியாக நேரம் செலவழிக்கிற பழக்கம் உடையவர்களாயிருந்தால், வாழ்வின் கடினமானப் பகுதி களைக் கடந்து செல்லும்போது அது அவர்களுக்கு உதவி செய்யும். தங்கள் பேச்சு அல்லது செயலின் மூலமாக ஒருவரையொருவர் காயப்படுத்தியிருக்கலாம். ஆனால் அவர்கள் தேவனோடு தனித்து நேரம் செலவழித்து விட்டுத் திரும்பி வரும்போது, தேவனோடு சமாதானம் பெற்றிருப்பார்கள். மட்டுமல்ல அந்த சமாதானம் அவர்கள் இருவருக்குள்ளும் பாய்ந்து செல்லும். அனுதினமும் அவர்கள் கர்த்தரி டத்தில் நெருங்கி வரும்போது தேவனோடு வளருகிற அனுபவத்தை அவர்கள் பெறுவதோடு அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் நெருங்கி வாழக்கற்றுக் கொள்ளுவார்கள்.

நீங்கள் எதிர்பார்த்த அளவுக்கு ஒருவருக்கொருவர் நெருங்கி வாழவில்லை என்ற உணர்வு உங்களுக்கு ஏற்படுமானால், தனிப்பட்ட விதத்தில் நீங்கள் தேவனோடு கிட்டிச் சேருங்கள். ஒரு திருமணத்தை பெலப்படுத்துவதற்காக ஒருமைப்பாட்டின் ஆவிக்குரிய இணைப்பு இவ்விதமாகத்தான் தேவனால் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு புருஷனுக்கும் மனைவிக்கும் தேவனோடு தனித்தனியே இந்த ஆவிக் குரிய இணைப்பு ஏற்பட்டிருக்கிறபடியினால், இந்த ஆவிக்குரிய இணைப்புகள் தான் வேதாகமத்தில் நமக்காக தேவன் திட்டமிட்டு வைத்திருக்கிற திருமணத்திற்கான அஸ்திபாரமாயிருக்கின்றன என்று சொல்லுவேன்.



**அத்தியாயம் 4**

# பரிமாற்றம் என்னும் இணைப்பு

ஆலோசனை பெறுவதற்காகத் தங்கள் போதகரையோ அல்லது திருமண ஆலோசகரையோ தம்பதியர் சந்திக்கும் போது, முதலாவதாக அவர்கள் சொல்வது பரிமாற்றம் பற்றிய பிரச்சினையையே (communication). ஆலோசனை வேளையில் பேசத் துவங்கும் போது அவர்கள் சொல்லுகிற முதல் காரியம், ‘‘எங்களுக்குள் எந்தக் கருத்துப் பரிமாற்றமும் இல்லை. நாங்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள் வதேயில்லை’’ என்பதுதான்.

ஒரு திருமணத்தை உயிரோட்டம் உள்ளதாக வைத்துக்கொள்ள உதவும் ஓர் கருவிதான் இந்தக் கருத்துப் பரிமாற்றமாகும். இருவர் ஒன்றித்து வாழவும் ஒரே மாம்சமாயிருக்கவும் உதவுவதும் இந்தக் கருத்துப் பரிமாற்றம் தான். மறுபிறப்படைந்த விசுவாசிகளாகிய நாம் கிறிஸ்துவோடுகூட ஒருமனம் உடையவர்களாக இருக்கிறோம். இரட்சகர் இயேசுவோடு நாம் பெற்றிருக்கிற ஒருமனமானது தானாக வளர்வதில்லை. அது பராமரிக்கப்பட வேண்டும். பேணி வளர்க்கப்பட வேண்டும். அதற்காகத்தான் நீங்கள் அனுதினமும் கர்த்தரிடத்தில் ஜெபிக்கவும் வேதம் வாசிக்கவும் நேரம் செலவழிக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் நாம் இதை விளக்கிக் கூற வேண்டுமானால், ஜெபத்தின் மூலமாக கிறிஸ்துவோடு தொடர்பு கொள்ளுதல் மற்றும் வேதத்தை வாசிப்பதன் மூலமாக அவரது சத்தத்தைக் கேட்டல் ஆகிய வற்றின் மூலமாக கிறிஸ்துவோடுள்ள நமது உறவைப் பராமரித்து வளர்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஒரு திருமணத்திலும் இந்த அனுபவம் உண்மையாயிருக்கிறது. நமது உறவைப் பராமரித்து வளர்த்துக் கொள்ள வேண்டும். திருமண மான ஒரு தம்பதியர் தங்களுக்கிடையே உள்ள ஒருமைப்பாட்டை உரமிட்டு வளர்க்கவும், பராமரிக்கவும், இந்த பரிமாற்றம் ஓர் கருவி யாக விளங்குகிறது. நோய்க் கிருமிகள் இருளில் தான் பெருக்கமடை கின்றன. அவைகளால் ஒளியில் வாழ முடியாது. இருவர் மனந்திறந்து பரிமாறிக் கொள்ளாவிட்டால் அவர்களிருவருக்கும் இடையே ஏராளமான ‘‘கிருமிகள்’’ நுழைந்து விடும். அதனால் தான் ‘‘வெட் கமான அந்தரங்கக் காரியங்களை வெறுத்துவிடுங்கள்’’ என்று பவுல் புத்தி சொல்லுகிறார் (II கொரி. 4:2). நாம் உத்தமமாக நடந்து கொள்ளாமல் ஒருவருக்கொருவர் காரியங்களை மறைத்தோமானால் ‘‘கிருமிகளை’’ இருளில் வைத்திருக்கிறவர்களாகக் காணப்படுவோம்.

பரிமாற்றம் அல்லது பகிர்ந்து கொள்ளுதல் என்பது நமது உறவின் மீது வெளிச்சத்தைப் பாய்ச்சுவதைப் போன்றதாகும். நாம் அப்படிச் செய்யும் போது ''கிருமிகள்'' செத்துப் போகும். மனந்திறந்து பகிர்ந்து கொள்ளுதலின் மூலமாக ''வெளிச்சம்'' பாய்ந்து செல்லுகிறது. அதுவே நமது ஒருமைப்பாட்டை உரமிட்டு வளர்த்துப் பாதுகாக்கிற ஓர் கருவி யாக இருக்கிறது.

''பரிமாற்றம்'' என்றால் பேச்சு, உடலசைவு (சைகை) அல்லது பிறவழிகளின் மூலம், தகவல், செய்திகள் மற்றும் யோசனைகளை அளிப்பதும் பெற்றுக்கொள்வதும்'' என்று பொருளகராதிகள் கூறு கின்றன. இந்த விளக்கமானது பரிமாற்றத்தைக் குறித்து அநேகக் காரி யங்களை நமக்குத் தெரிவிக்கிறது. முதலாவது, ''பரிமாற்றமே இல்லை'' என்ற ஒரு காரியம் இல்லவே இல்லை. ''நாங்கள் பரிமாறிக் கொள்வதே இல்லை'' என்று மக்கள் சொல்வார்களானால், அது ஓர் உண்மையான வார்த்தை அல்ல. நாம் எப்போதும் பரிமாறிக் கொண்டே இருக்கிறோம். ஆனால் எதைப் பரிமாறுகிறோம் எப்படிப் பரிமாறுகிறோம் என்பதில் பல வித்தியாசங்கள் உள்ளன. பேசுதல், உடலசைவுகள் அல்லது வேறு வழிகள் அதில் உள்ளடங்கும்.

பரிமாற்றத்திற்கான இந்த விளக்கம் பரிமாற்றத்தில் இரண்டு பரிமாணங்கள் உள்ளன என்றும் சொல்கிறது. ஒன்று கொடுத்தல் மற்றொன்று பெற்றுக் கொள்ளுதல். ''என் கணவர் ஏதோ இரகசியத் தீவு ஒன்றில் வாழ்ந்து வருவதைப் போலவும் அவரைச் சென்று அடை வதற்கு வழி தெரியாமல் இருபது ஆண்டுகளாக நான் அந்தத் தீவையே சுற்றிச் சுற்றி வருவதைப் போலவும் என் வாழ்க்கை இருக் கிறது'' என்று ஒரு பெண்மணி ஒரு நாள் என்னிடத்தில் கூறினார்கள்.

நீங்களும் உங்கள் மனைவியும் (அல்லது கணவனும்) தனித் தனியே வெவ்வேறு தீவுகளில் வாழ்ந்து வருவதைப் போலவும் வானொலி மூலமாக மட்டுமே அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என்பதைப் போலவும் கற்பனை செய்துப் பாருங்கள். வானொலி மூலம் பரிமாறிக்கொள்ள வேண்டுமானால், செய்தி அனுப்புபவர் தன் வானொலியை இயக்க வேண்டும். செய்தியைப் பெற்றுக் கொள்பவரும் தன் வானொலியை இயக்க வேண்டும். சில வேளைகளில் இருவரில் ஒருவரோ அல்லது இரண்டு பேருமே தங்களுடைய ஒலிபரப்புச் சாதனங்களை இயக்காதபடிக்கு அதைத் தடை (switched off) செய்து வைத்திருக்கும் உண்மைத் தெரிய வருவதுண்டு. ஆனால் ஒருவேளை அந்த சாதனங்களை இயங்கும் நிலையில் (switched on) வைத்திருந்தாலும்கூட மறு முனையிலிருந்து



அனுப்பப்படுகின்ற செய்தியானது திரிக்கப்பட்டு, குழம்பிப் போவ துண்டு. ஒருவேளை ஒருவர் அல்லது இருவருமே தங்கள் சாதனங் களை இயங்கும் நிலையில் வைத்திராமல் இருப்பது அல்லது இயங்கும் நிலையில் வைத்திருந்தாலும் சரியான அலைவரிசையில் அச்சாதனங் களைப் பொருந்தச் செய்யாதபடியினால் செய்தி அனுப்பவும் முடி கிறதில்லை, பெறவும் முடிகிறதில்லை.

செய்தி அனுப்பப்படுகிற விதம் எவ்வளவு முக்கியமோ, அதைப் போலவே அதைப் பெறப்படுகிற விதமும் முக்கியமானது ஆகும். ஒரு ஆமையானது அதன் ஓட்டுக்குள்ளிருந்து வெளியே வந்து ஊர்ந்து சென்று கொண்டிருக்கும்போது அதை நீங்கள் மிதித்துவிட்டீர்களா னால் உடனே அது தனது உடலை படக்கென்று தனது ஓட்டுக்குள் இழுத்துக் கொள்ளும். பின்பு நீண்ட நேரத்திற்கு அது வெளியே வராது. மனிதர்களாகிய நாமும் கூட அதைப்போலவே இருக்கிறோம். நீங்கள் உங்கள் மனைவியினிடத்தில் (அல்லது கணவரிடத்தில்) ஒரு முக்கிய மானச் செய்தியைப் பகிர்ந்து கொண்டிருக்கும்போது அவர்கள் அதைச் சரியாக ஏற்றுக்கொள்ளாமல் போகும்போது, நீங்கள் உங்களை உங்களுடைய ஓட்டுக்குள் இழுத்துக் கொள்வீர்கள். அதன் பின்பு நீண்ட நேரத்திற்கு நீங்கள் வெளியே வராமல் போகலாம்.

நீங்கள் பரிமாறிக்கொள்ள முடியாவிட்டால், உங்கள் ஒற்று மையை பராமரித்து வளரச் செய்ய உதவியாக இருக்கிற அந்தக் கருவி உங்களிடத்தில் இல்லை என்றுதான் அர்த்தமாகும். அப்படியானால் உங்கள் உறவை செயல்படுத்த முடியாது. உங்களால் உங்கள் பரிமாற் றத்தை மேம்படுத்தி உங்கள் திருமண வாழ்வை செயல்படுத்த, இந்தக் கருவி பெரிதும் உதவும்.

ஒரு குழந்தையானது பிறக்கும் போது அதன் பெற்றோரோடு அதற்கு ஏற்படுகின்ற உறவானது முடிவடைந்து போவது போல அல்லாமல், திருமண உறவானது இருவரையும் ஒன்றாகக் கூட்டிச் சேர்க்கிறது. ஒரு பிரமீட்டின் இரு பக்கங்களும் எவ்வாறு ஒரே புள்ளியில் இரண்டறக் கலந்து சங்கமமாகிறதோ அவ்வாறே இருவரது வாழ்க்கையும் இரண்டறக் கலந்துவிடும்படி திருமணமானது வடி வமைக்கப்பட்டுள்ளது. ஒரு புருஷனும் ஒரு மனைவியும் மிக மிக நெருங்கி வாழவேண்டும். இந்த நெருக்கத்தை அல்லது அந்நியோன் னியத்தை நாம் அடைவதற்குப் பரிமாற்றம் தான் ஒரு கருவியாக உள்ளது. பரிமாற்றம் என்னும் இந்தக் கருவியைப் பெற்றிராதத் தம்பதியர், தங்கள் திருமண உறவை மேம்படுத்துவதற்காக தேவனால் வடிவமைக்கப்பட்டிருக்கும் ஓர் சிறந்த வழியை இன்னமும் கண்டு கொள்ளாமலிருக்கின்றனர் என்றுதான் கூறவேண்டும்.

பரிமாற்றப் பிரச்சினைகள் குறைந்த பட்சம் இரண்டு விதங்களில் வருகின்றன. அதில் ஒன்று: வாக்குவாதம். சில தம்பதியருக்கு எதைக் குறித்தாவது வாக்குவாதம் செய்யாமல் தொடர்ந்து ஐந்து நிமிடங்கள் கூட அவர்களால் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள முடியாது. மற்றொன்று இதற்கு நேர் எதிர்மறையானது: மௌனம். மௌனம் சாதிப்பவர்கள் பரிமாற்றப் பிரச்சினை இல்லாதவர்கள் என்று சொல்லி விட முடியாது. அதிலும் பிரச்சினை உண்டு. மக்கள் வித்தியாச மானவர்கள். மௌனமாக இருப்பது பலருக்கு மகிழ்ச்சியைத் தருவ தில்லை. அப்படிப்பட்டவர்களால் பிறர் மௌனமாயிருப்பதைப் பொறுத்துக் கொள்ளவே முடியாது. வேறு சிலர் இயற்கையிலேயே ''மௌனப் பிறவி'' களாக இருக்கின்றனர். பேசுகிறதற்கு அவர்களுக்கு அவசியமே இல்லை.

எனக்குத் தெரிந்தவர்களுள் மிக மிக அமைதியான சுபாவம் கொண்ட மனிதர் ஒருவர் உண்டு- அவர் எனது சிறந்த நண்பர்களுள் ஒருவராவார். ஒரு நாள் ஒரு பெண்மணி அவரிடத்தில் வந்து ''பேசுவதற்கு உங்களிடத்தில் ஒன்றுமே இல்லை, அல்லவா?'' என்று கேட்டாள். அதற்கு அவர், ''தண்ணீர் ஆழமாயிருக்கும் போது அது அமைதியாகவும் தண்ணீர் தளும்பாமலும் இருக்கும். ஆனால் ஆழம் இல்லாதிருந்தால் நீரில் சலசலப்பு உண்டாகும்'' என்று கூறினாராம். அந்தப் பெண்மணியினிடத்தில் எனது நண்பர் புண்படும்படி பேச வில்லை. அவர் தனது பதிலை எளிதில் விளங்கிக் கொள்ளும்படிக் கூறினார்.

எனவே, அப்படிப்பட்ட மௌனப் பிறவிகளில் ஒருவரை நீங்கள் மணம் புரிந்திருந்தால், பரிமாற்றத்தில் உங்களுக்கு ஓர் பிரச்சினை இருக்கிறது என்று கூற முடியாது. ஒன்றாகச் சேர்ந்து வாழ மிகவும் உன்னதமான வழிகளில் ஒன்றுதான் இந்தப் ''பரிமாற்றம்''. வார்த்தை கள் மூலமாகத் தொடர்பு கொள்ளுவதை இது பொருள்படுத்துகிறது. ஒருவருக்கொருவர் பேசாமலே இருந்தாலும்கூட மிக அற்புதமாக சேர்ந்து வாழக்கூடும். பேசித் தான் நமது ஒற்றுமையைக் காத்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. மௌனமாயிருத்தல் என்பது பரிமாற்றப் பிரச்சினை என்று அர்த்தமாகாது.

எனினும் ''உம்மென்றிருப்பது'' (பேச மனமின்றி முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் தன்மை கோபத்தை வெளிப்படுத்தும் விதம் - **"Silent contempt"**, கூட பரிமாற்றத்தின் ஒரு விதம் தான். ஆனால் அது ஒரு பிரச்சினை நிறைந்த பரிமாற்றமாகும். உங்கள் மனைவி (அல்லது கணவர்) ''உம்மென்று'' இருப்பார்களானால் நீங்கள்



அவர்களைக் கோபப்படுத்தியிருக்கிறீர்கள் என்றும் அதற்குப் பதிலாகத் தான் அவர்கள் உங்களிடத்தில் இப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்றும் இதன் மூலமாக உங்களுக்குத் தெரிவித்துக் கொண்டிருக் கிறார்கள். தன்னிடத்தில் அடிக்கடி இவ்வாறு நடந்து கொள்ளுகிற தனது புருஷனைக் குறித்து அவனுடைய மனைவி இவ்வாறு கூறினாள்: அவர் பேசாமல் மௌனமாக இருக்கும் போது அவர் என்ன சொல்லுகிறார் என்பதைக் கேட்பதற்கு நீங்கள் உண்மை யிலேயே அவருக்கு மிக அருகில் சென்று கவனிக்க வேண்டும்.

பேசுவதன் மூலமாக, உடலசைவுகள் மூலமாக, இன்னும் மற்ற வழிகள் மூலமாகவும் நாம் பரிமாற்றம் செய்கிறோம். அந்த ''மற்ற வழிகள்'' என்பது சில வேளைகளில், மௌனமாகவும், பாத்திரங் களைத் தூக்கி வீசி எறிவதாகவும், கதவை அறைந்து சாத்துவதாகவும், கை முஷ்டியைக் கதவிலோ அல்லது சுவரிலோ ஓங்கி குத்துவதாகவோ கூட இருக்கலாம். அல்லது, ஒரு புன்னகை புரிதல், தோளின் மீது பரிவுடன் கைகளை வைத்தல், தழுவிக்கொள்ளுதல் அல்லது கண்ணீர் வடித்தல், ஆகியவைகளும் கூட அதில் உள்ளடங்கும். ஆகவே, பரிமாற்றம் செய்யாத காரியம் எதுவுமே இல்லை என்பதை நீங்கள் கண்டு கொள்ளலாம். சில வேளைகளில் நாம் உடலசைவுகள் மூலமாகவும் வேறு வழிகளிலும் வார்த்தைகளின்றி பரிமாற்றம் செய்கிறோம். ஆனால் அந்த மற்ற வழிகள் மூலமாகத்தான் நாம் நமது எண்ணங்களை மிகத் துல்லியமாக வெளிப்படுத்துகிறோம். பிரான்சிஸ் அஸிஸி (Francis Assisi) என்பவர் ஒரு முறை இவ்வாறு கூறினார்: ''எல்லா காரியங்கள் வழியாகவும் கிறிஸ்துவைப் பிரசங்கியுங்கள். மிக அவசியமாகத் தேவைப்பட்டால் மாத்திரமே வார்த்தைகளைப் பயன் படுத்துங்கள்.'' நன்மைக்கானாலும் சரி அல்லது தீமைக்கானாலும் சரி, பலன் நிறைந்த பரிமாற்றம் செய்வதற்கு வார்த்தைகள் எப்போதும் தேவைப்படுகிறதில்லை.

பேச்சுக்கலைப் பேராசிரியர் ஒருவர் ஒரு நாள் மாணவர்கள் இரைந்து பேசிக் கொண்டிருந்த எங்களுடைய வகுப்பறைக்குள் நுழைந்தார். அவர் நேராக தனது இருக்கைக்குச் சென்று அங்குள்ள தனது மேசையில் தனது கையால் ஓங்கி அறைந்து, பலத்த ஓசை எழுப்பி ''எனக்கு முழுமையான அமைதியின்மை வேண்டும்'' என்று மகா பெரிய சத்தமிட்டுக் கூறினார். மாணவர்கள் யாவரும் மயான அமைதிக்குள்ளாயினர். பின்பு அவர் தனது செயலைக் குறித்து எங் களுக்கு விளக்கிக் கூறினார். ஒரு பரிமாற்றத்தில் ஏழு சதவீதம் மட்டும் தான் வார்த்தைகள். ஐம்பத்தைந்து சதவீதம் அந்த வார்த்தைகள் மீது

கொடுக்கப்படுகின்ற அழுத்தம்; முப்பத்தெட்டு சதவீதம் அந்த வார்த்தைகளால் பேசும்போது நாம் உண்டாக்குகிற உடலசைவுகள். ''எனக்கு முழுமையான அமைதியின்மை வேண்டும்'' என்று அவர் சொன்னார். அந்த வார்த்தைகள் மாணவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவில்லை. மாணவர்கள் அதைப் புரிந்து கொண்டிருந்திருப்பார்களானால் அதனுடைய விளைவு வேறு விதமாக இருந்திருக்கும். மாறாக, அந்த மாணவர்களை அமைதிப்படுத்தியது அவருடைய வார்த்தைகள் அல்ல, அவைகள் மீது அவர் கொடுத்த அழுத்தமே ஆகும். அதன் மூலமாக ''வகுப்பில் ஒழுங்கைக் காண நான் விரும்புகிறேன்''! என்று அவர் சொல்லுகிறார் என நாங்கள் புரிந்து கொண்டோம். தனது மேசையின் மீது ஓங்கி அறைந்த செயல்தான் அவரது வார்த்தைகளுக்கு மேலும் வலுவூட்டியது.

## *திரண்ட கருத்து*

பரிமாற்றம் என்பது பேசப்படுகின்ற வெறும் வார்த்தைகளல்ல; அது கேட்கப்படுவதும் கூட. பரிமாற்றம் என்பது பேசப்படுகின்ற வெறும் வார்த்தைகளல்ல; அது பெறப்படுகிறதும் கூட. பரிமாற்றம் என்பது பேசப்படுகின்ற வெறும் வார்த்தைகளல்ல; சைகை மற்றும் பிற வழிகள் மூலமாகவும் அது உணர்ந்து கொள்ளப்படுகிறது. பரிமாற்றம் என்பது பேசப்படுகின்ற வெறும் வார்த்தைகள் அல்ல; பகிர்ந்து கொள்ளப்படுகின்ற முழு கோட்பாடும் அதுவேதான். சில வேளைகளில் மக்கள் கேட்க விரும்பும் செய்தியாகவும் அது காணப்படுகின்றது. பேச்சு, சைகை, மற்றும் பிற வழிகள் மூலமாகப் பரிமாற்றம் செய்யப்படுகின்ற இந்தக் காரியங்கள் யாவும் அவைகளைப் பெற்றுக் கொள்பவரை ஒரு விதமான ''முழு கவனிப்புக்குள்'' கொண்டு வந்து விடுகிறது.

## *பரிமாற்றத்தில் ஏற்படும் பிரச்சினைகள்*

ஆலோசனைக்காக என்னை நாடி வருகின்ற தம்பதியருக்கு, ஒரு போதகர் என்ற முறையில் பல ஆண்டுகளாக நான் ஆலோசனை வழங்கி வருகிறேன். நான் அவர்களிடத்தில் ''உங்களுக்கிடையே நல்ல பரிமாற்றம் அல்லது பேச்சு வார்த்தை உண்டா?'' என்று கேட்பதுண்டு. ஏறத்தாழ எல்லாருமே விதிவிலக்கின்றி ''ஆம்'' என்று பதில் சொல்லுவார்கள். நான் அவர்களுக்கு, ஓர் பயிற்சியை (assignment) செய்யச் சொல்லி அனுப்பி வைப்பேன். அதாவது, அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதில்லை என்பது அவர்களது பிரச்சினையாயிருக்குமானால், அவர்கள் பேசுவதை நிறுத்திக் கொண்டதற்கானக் காரணங்களை பட்டியலிட்டு எழுதிக் கொண்டு வரும்படி கூறுவேன். பேசும்



போது கோபப்படாமல் பேசவே முடியாது என்பது அவர்களது பிரச்சினையாயிருக்குமானால், அவர்கள் பேசும்போது கோபம் வருவதற்கானக் காரணங்களை எழுதிக் கொண்டு வரும்படி கூறுவேன். நான் இந்தப் பிரச்சினைகளைப் ''பரிமாற்ற மின்னோட்டத் தடைகள்'' (communication circuit breakers) என்று பெயரிட்டு அழைக்கிறேன்.

பல ஆண்டுகளாக நான் அந்தப் பட்டியல்களைச் சேகரித்து ஆய்வு செய்து வருகிறேன். இந்தப் பட்டியல்களில் இருபதுக்கும் மேலான பரிமாற்றப் பிரச்சினைகள் எல்லாருக்கும் பொதுவானதாக இருக்கக் கண்டிருக்கிறேன். அந்தப் பிரச்சினைகளில் ஒரு சிலவற்றை நீங்கள் கீழே காணலாம்; அவைகளில் உங்களுக்கு மிகவும் பரிச்சயமானதாக ஏதாகிலும் இருக்கிறதா என காணுங்கள்.

### *1. ஆர்வமில்லாமை*

தனது கணவரிடத்தில் ஒரு மனைவி ஒரு நாள் மாலைப் பொழுதில், மிகுந்த மகிழ்ச்சியுடன் ''நம் குழந்தை இன்று கைச்சூப்ப ஆரம்பித்து விட்டது'' என்று கூறினாள். தனது குழந்தையின் வளர்ச்சியைக் குறித்து அவள் மிகவும் பரவசமடைந்திருந்தாள். ஆனால் அவள் கணவன் அதில் எந்த ஆர்வத்தையும் காட்டிக் கொள்ளவில்லை. அவன் தனது வேலையில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருப்பான் அல்லது செய்தித்தாளை எடுத்து வாசித்துக் கொண்டிருப்பான். தனது வார்த்தைகளை ஒருவரும் கவனித்துக் கேட்கவில்லை என்பதை உணர்ந்து கொண்ட பின், மேலும் தொடர்ந்து பேச யாரும் விரும்ப மாட்டார்கள். தனது காரியத்தில் மற்றவர்களுக்கு எந்த ஆர்வமுமில்லாமல் இருப்பதைக் காண்பது அதைவிடக் கொடியது. அது அந்த பெண்மணியைப் பார்த்து ''உன்னைப்பற்றியோ அல்லது உன் குழந்தையைப் பற்றியோ எனக்கு எந்த அக்கறையும் இல்லை'' என்று சொல்லுவதைப் போன்ற ஓர் செயலாகும். அவளைப் பொருத்த வரையில் அவன் அவ்வாறு அக்கறையின்றி நடந்து கொள்ளும் விதமானது, அவளையும் அவளது குழந்தையையும் அவன் நேசிக்கவில்லை என்றுதான் அர்த்தமாகிறது.

### *2. மனமுவந்து முன்வராமை* (No Initiation)

பரிமாற்றம் என்பது, கொடுத்தலும் பெற்றுக் கொள்ளுதலும். ஒரு நாளில் ஒரு புருஷனோ அல்லது மனைவியோ இவ்வாறு உணரக்கூடும்: ''நான் தான் எப்போதும் கொடுக்கிறவன(ள)ாக இருக்கிறேன். எனது பரிமாற்றத்தில் அவளு(னு)க்கு எந்த ஈடுபாடும் இல்லை. மனமுவந்து முன்வந்து பேசுகிறதுமில்லை. கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு மட்டுமே அவள்(ன்), பதில் சொல்லுகிறாள்(ன்).''

பரிமாற்றம் என்பது ஒரு பாலமாக இருக்குமானால், புருஷனும் மனைவியும் மனமுவந்து பாதி வழி நடந்து வர வேண்டும். அவர்களில் யாராவது ஒருவர் மாத்திரம் முழு பாலத்தையும் தொடர்ந்து கட்டிக் கொண்டே இருப்பார்களானால் அவர்களுக்கு அதில் சோர்வு ஏற்பட்டு தொடர்பு கொள்வதையே விட்டுவிட முயற்சி செய்வார்கள்.

### 3. வாக்குவாதம் மற்றும் சண்டையிடுகிற மனைவி/ புருஷன்

''அடைமழை நாளில் ஓயாத ஒழுக்கும் சண்டைக்காரியான ஸ்திரீயும் சரி'' (நீதிமொழிகள் 27:15) என்று சாலொமோன் கூறுகிறான். சண்டையிடுவதில் அல்லது வாக்குவாதம் செய்வதில் ஆணும் பெண்ணும் உண்மையில் ஒருவருக்கொருவர் சரிசமமாகவே உள்ளனர். வாக்குவாதம் செய்கிற ஒரு நபர் தனது மனைவி/புருஷன் சொல்லுகிற எந்தக் காரியத்தையும் எதிர்த்துப் பேசி சவாலிடுகிறவராயிருக்கிறார். நீங்கள் ஒரு புதிய யோசனையைச் சொல்ல முன்வரும் போது வாக்குவாதம் செய்கிற அந்த நபர் அதற்கு எதிராக ஏதாவது சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். வாக்குவாதம் செய்கிற ஒரு நபரோடு தொடர்பு வைத்துக் கொள்வது மிகக் கடினமான காரிய மாகும். சில வேளைகளில் அது கூடவே கூடாது என்பது போலத் தோன்றும்.

### 4. உங்கள் மனைவி அல்லது புருஷனுடைய தனிமைக்குக் காரணம் என்ன என்பதைப் புரிந்து கொள்ளத் தவறிப் போகுதல்.

உங்கள் புருஷனோ அல்லது மனைவியோ தனித்து இருக்க விரும்பினால் அது உங்கள் நெருக்கத்தை எந்த விதத்திலும் பாதிக்காது. அந்த உண்மை நிலையைக் கண்டு நீங்கள் அஞ்ச வேண்டாம். திருமணத்தில் ''இருவர் ஒருவராக்கப்'' பட்டிருந்தாலும் உண்மையில் அவர்கள் இருவரும் தனித்தனியே இருவராகத்தான் இருக்கிறார்கள் என்பதை மறந்து போகக் கூடாது.

### 5. சில வேளைகளில் ஒருவரிடத்திலோ அல்லது இருவரிடத்திலுமோ காணப்படுகின்ற சரீரப்பிரகாரமான உணர்வுகளின் அடிப்படையிலான மற்றும் ஆவிக்குரிய பிரச்சினைகளே ஒரு திருமணமான தம்பதியரின் வாழ்வில் பரிமாற்றப் பிரச்சினைகளுக்குக் காரணங்களாகி விடுகின்றன.

பிரச்சினைகளுக்கு இவைகள் காரணமாயிருக்குமானால் எவ்வளவு தான் பரிமாற்ற ஆய்வுகள் செய்தாலும் அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது கூடாத காரியமாகும். இந்தப் பிரச்சினைகளுக்குத்



தீர்வு காண வேண்டுமானால் உறவுக்குப் புறம்பே சென்று ஆவிக்கேற்ற ரீதியாகவும், சரீரப் பிரகாரமாகவும் உணர்ச்சிப் பூர்வமாகவும் தீர்வைக் கண்டுபிடிக்க வேண்டும்.

### 6. சரீர சுகம் /ஆரோக்கியம் சம்பந்தப்பட்டப் பிரச்சினைகள் தம்பதியரின் உறவு மற்றும் பரிமாற்றத்தைப் பெரிதும் பாதிக்கின்றன.

பரிமாற்றம் கடினமாகத் தோன்றுவதற்கு சரீர சுகவீனமும் ஒரு காரணமாக இருக்கலாம் என்பதை எப்போதும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். மனநலப் பிரச்சினைகளும்கூட பரிமாற்றத்தை அதிகமாகப் பாதிக்கக்கூடும். உங்கள் மனைவிக்கோ அல்லது கணவனுக்கோ தீவிரமான உணர்ச்சி ரீதியான அல்லது உடல் ரீதியான பிரச்சினை இருக்குமானால் உடனே அதற்கான தீர்வைக்காண அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டும்.

## வேதாகம தீர்வுகள்

சில வேளைகளில் பிரச்சினைகளுக்குக் காரணம் சுயநலமாகக் கூட இருக்கலாம். இருவரில் ஒருவர் அல்லது இருவருமே மற்றவருக்காகக் கரிசனை கொள்ளாமல் சுயநலவாதிகளாக இருக்கின்றனர். அதனால் தான் புருஷன் ஆர்வமில்லாதிருக்கிறான். அதனால் தான் அவன் கவனித்துக் கேட்கிறதில்லை. சுயநலமே பிரச்சினையாயிருக்குமானால், அதற்குத் தீர்வு சுயநலமில்லாமைதான். இயேசுவானவர் நமக்குக் கற்பித்த ''உங்களுக்கு பிறர் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்'' என்ற கட்டளையே இதற்குத் தீர்வு (மத்தேயு 7:12). திருமணமான தம்பதியரின் பரிமாற்றத்தையே மறுரூபமடையச் செய்யும் வல்லமை இந்தப் போதனைக்கு உண்டு. திருமணமான தம்பதியரில் ஒவ்வொரு வரும் தனது புருஷன் அல்லது மனைவியினுடைய காரியங்களில் உண்மையான ஆர்வம் கொண்டு அவர்களுடைய நலனில் அக்கறை செலுத்த வேண்டும்.

பரிமாற்றப் பிரச்சினைகளில் பலவற்றை, தேவனிடத்தில் ஞானத்தைக் கேட்டுப் பெற்றுக் கொள்வதினால் மேற்கொள்ள முடியும். எனக்கு மிகவும் பிடித்த வேத வாக்கியங்களில் ஒன்றான யாக்கோபு 1:5 இவ்வாறு கூறுகிறது: ''உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால்..... தேவனிடத்தில் கேட்கக்கடவன்''. மீண்டும் மீண்டும் நாம் தேவனிடத்தில், ''நான் என்ன செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. அதற்குத் தேவையான ஞானமும் என்னிடத்தில்

இல்லை. கேளுங்கள் என்று எங்களுக்குச் சொல்லியிருக்கிறீரே. ஆகையால் ஞானம் அருள வேண்டும் என நான் உம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறேன்'' என்ற ஜெபத்தைச் செய்கிறவர்களாக நாம் காணப்பட வேண்டும். ஞானத்திற்காகத் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிற தம்முடைய பிள்ளைகளுக்கு அவர் அதை அருளுகிறதில் எவ்வளவு மகிழ்ச்சி கொள்ளுகிறார் என்பதைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ஆகையால், உங்களுடைய பரிமாற்றச் சவால்கள், என்ன செய்வதென்றுப் புரியாமல் திகைத்து நிற்கிற சூழ்நிலைக்கு உங்களைக் கொண்டு வந்து நிறுத்தும்போது, ஞானம் அருள வேண்டு மென தேவனிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள்.

### ஒரு கடினமான நபரோடு பரிமாற்றம் கொள்வது எப்படி?

கடினமான பரிமாற்றப் பிரச்சினைகளைத் தீர்ப்பது எப்படி? என்று நமக்கு விளக்கிக் கூறுகிற வேறொரு வேதப் பகுதியும் உண்டு. பவுல் தீமோத்தேயுவுக்கு கூறுகின்ற இந்த அறிவுரை வார்த்தைகளைக் கவனியுங்கள்: ''புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு. கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாய் இராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும். எதிர் பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்க தாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிப்பட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கம் தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும்'' (II தீமோத்தேயு 2:23-26).

உங்கள் மனைவி அல்லது புருஷன் ஒரு ''கடினமான நபராயிருந்தால்'' ஒரு வேளை அவள்/அவன் சாத்தானால் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கலாம். அவர்கள் சாத்தானுடைய குகைக்குள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். உங்களால் அவர்களை வெளியே கொண்டு வர இயலாது. தேவனால் மாத்திரமே அவர்களை விடுதலை செய்ய முடியும்.

ஆனால் இங்குதான் நீங்கள் ஆவியின் கனியைக் காத்துக்கொள்ள வேண்டும். இந்த வேதப் பகுதியில் மூன்று ஆவிக்குரிய கனியைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. அவையாவன: தாழ்மை, பொறுமை மற்றும் சாந்தம். பரிசுத்தாவியின் கனியை நீங்கள் காத்துக் கொண்டால், உங்கள் மூலமாகத் தேவன் கிரியை செய்ய அது வாசலைத்திறக்கும்.



அதே வேளையில் அது சாத்தானுக்கு வாசலை அடைத்துவிடும். தேவன் உங்கள் ஜெபத்திற்கு செவிசாய்க்க இது ஓர் தருணத்தை உண்டாக்கும். இறுதியாக, அது சத்தியத்தை உங்கள் மனைவிக்கு அல்லது புருஷனுக்கு வெளிப்படுத்தும். அது அவர்களை விடுதலை செய்யும். வாக்குவாதமோ அல்லது சண்டையோ செய்யவே கூடாது என்று கர்த்தருடைய ஊழியக்காரருக்கு (உங்களுக்கு) பவுல் ஆணித்தரமாக எச்சரித்து எழுதுகிறார். ஏனெனில் நாம் அவ்வாறு செய்தால், அது தேவனைக் கிரியை செய்யவிடாமல் கதவை அடைத்துவிடும். ஆனால் சாத்தானுக்கு வாசலை திறந்து விடும்.

ஒரு கடினமான நபரோடு பரிமாற்றம் செய்ய பவுல் கூறும் இந்த அறிவுரையை ஜெபத்துடன் அப்பியாசப்படுத்த நீங்கள் ஆரம்பிக்கும் போது அந்தக் கடினமான நபர் நீங்களாகவே இருப்பதை உங்களால் உணர்ந்து கொள்ள முடியும். ''முன்பு உன் கண்ணில் இருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகை பார்ப்பாய்'' என்று இயேசு கூறியிருக்கிறார் (மத்தேயு 7:5). நமது கண்ணில் ஓர் உத்திரம் அல்லது ஓர் மரத்துண்டு இருக்குமானால், அது நமது பார்வையைக் குருடாக்கிவிடும். இந்த வேதப் பகுதியில் பவுல் விளக்கிச் சொல்லியிருக்கும் அந்தக் கடினமான நபர் நாம் தான் என்பதை நாம் உணர்ந்து கொள்ளக் கூடாதபடிக்கு அது நம்மைத் தடுத்துவிடும்.

குறிப்பாக, உங்கள் மனைவி (அல்லது கணவன்) மனநிலைப் பாதிக்கப்பட்டதினால் அல்லது சரீர சுகவீனத்தினால் பிரச்சினை உள்ளவர்களாக இருந்தால், சிலுவையில் நமது ஆண்டவர் தொங்கிக் கொண்டிருந்தபோது, ''பிதாவே, இவர்களை மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே'' (லூக்கா 23:34) என்று ஜெபித்த அந்த ஜெபத்தை ஜெபிப்பதும்கூட வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் மற்றொரு தீர்வு ஆகும். சொல்லொண்ணாத மகா வேதனை நிறைந்த அந்த மரணப் போராட்டத்தின் மத்தியிலும், தமது பகைவர்களை மன்னிக்கும்படி நமது ஆண்டவர் இயேசுவால் ஜெபம் செய்ய முடிந்ததே, அந்தக் காட்சியை சற்றே எண்ணிப் பாருங்கள். தமது பகைவருக்காக இயேசு அவ்வாறு ஜெபித்தாரானால் உங்கள் மனைவிக்காக அல்லது புருஷனுக்காக உங்களால் ஜெபிக்க முடியாதா? அவர்கள் செய்கிற காரியங்களுக்கு அவர்களே பொறுப்பாளிகளாயிராமல் அவர்களுடைய பாதிக்கப்பட்ட மனநிலை அல்லது சரீர சுகவீனத்தினால் உங்களுக்குப் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தால் இயேசு தமது பகைவர்களுக்காக ஜெபித்த அந்த ஜெபத்தை நீங்கள்

செய்யும் போது, அது உங்கள் மனைவி அல்லது கணவருடைய வாழ்வில் அற்புதங்களைக் கொண்டுவரும்.

### குடும்பப் பரிமாற்றம்

உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் (கணவருக்கும்) பிள்ளைகள் இருந்தால், உங்கள் இருவருக்கும் இடையே சாதாரணமாகவே உள்ள பரிமாற்றத்தைக் காட்டிலும் இப்பொழுது மிக அதிகமாக இருக்கும். இப்பொழுது உங்கள் குடும்பத்தில் பெருகிக்கொண்டே வரும் பரிமாற்றங்களைப் புரிந்துகொண்டு அவைகளுக்குத் தனித்தனியே பதில் சொல்ல நேரம் செலவழிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். உதாரணமாக ஒரு குடும்பத்தில் புருஷன் மனைவி என்னும் உறவுக்கிடையே ஏற்படும் பரிமாற்றமே மிக முக்கியமானதாகும். மற்றொன்று, தாய் தகப்பன் என்னும் உறவுக்கிடையே ஏற்படும் பரிமாற்றம். நான் இதை ஒரு ''செயற்குழு கூட்டம்'' என விவரித்துக் கூற விரும்புகிறேன். இந்த இரு பரிமாற்ற முதன்மை நிலைகளையும் நாம் மாற்றி அமைத்துவிடக் கூடாது. புருஷன் மனைவியாக பரிமாறிக் கொள்ள முதலாவதாக நேரம் ஒதுக்க வேண்டும். அதன் பின்பு பெற்றோர்கள் ஸ்தானத்திலிருந்து பரிமாறிக்கொள்ள நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதுபோக, பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கிடையே இன்னும் ஏராளமான பரிமாற்றங்கள் உண்டு. சில வேளைகளில், ஒவ்வொரு பிள்ளையோடும் தனித்தனியே பரிமாறிக் கொள்ள நேரத்தையும் இடத்தையும் நீங்கள் ஒதுக்க வேண்டும். மற்ற வேளைகளில் ஒரு குடும்பமாக ஒன்று கூடி பரிமாறிக் கொள்ளலாம். உங்கள் பிள்ளைகளும் கூட தங்கள் பெற்றோர் இல்லாதபடிக்கு தங்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ள வேண்டிய அவசியம் உண்டு என்பதை மறந்து போகாதீர்கள். என்னுடைய வீட்டில், எனது பிள்ளைகள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வதை நானும் என் மனைவியும் கேட்பதுண்டு. அது எங்கள் செவிகளுக்குள் ஒரு இனிய இசையைப் போலப் பாய்ந்து செல்லும்.

### வாழ்க்கைச் சக்கரம் (Cycle of Life)

ஒரு பலகாரத்தை மூன்று துண்டுகளாக வெட்டியிருப்பதைப் போல கற்பனை செய்து கொள்ளுங்கள். ஒவ்வொரு துண்டும் உங்கள் வாழ்க்கையின் மூன்றில் ஒரு பகுதிக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. பொதுவான வாழ்க்கை சுழற்சியில், மூன்று பகுதிகளில் முதல் பகுதி வாழ்க்கையில் நாம் நமது பெற்றோரால் பேணி வளர்க்கப்படுகிறோம்.



அடுத்தப் பகுதியில் நாம் நமது மனைவி அல்லது புருஷனோடு சேர்ந்து நமது பிள்ளைகளைப் பேணி வளர்க்கிறதில் செலவழிக்கிறோம். மூன்றாவது பகுதியை நமது பிள்ளைகள் நம்மை விட்டுக் கடந்து சென்ற பின் நமது மனைவி அல்லது புருஷனுடன் ''வெறுமையான கூட்டுக்குள்'' கழிக்கிறோம். நமது வாழ்வில் மூன்றில் இரண்டு பகுதிகளை நமது மனைவி அல்லது புருஷனுடனேயே கழிக்கின்றோம் என்பதையே இதன் மூலமாக நாம் அறிந்து கொள்ளுகிறோம். நமது பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களான பின்பு, நம்மை விட்டுப் பிரிந்து சென்று விட்ட பின்னும் கூட நமது மனைவி அல்லது புருஷனுடனேயே நமது வாழ்வின் இறுதி காலம் வரை நாம் கழிக்க வேண்டிய திருப்பதினால் பரிமாற்ற உறவில் நாம் நமது மனைவி அல்லது புருஷனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். ஒரு புருஷன் மனைவிக்கு இடையே உள்ள பரிமாற்றம் உடைந்து போனால் வாழ்க்கையின் மற்ற எல்லா உறவுகளும் பெரிதும் பாதிக்கப்படும். எனவே, புருஷன் மனைவிக்கு இடையே உள்ள பரிமாற்றத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

அநேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு முதலிடம் கொடுக்கின்றனர். இது தவறாகும். தங்கள் பிள்ளைகள் தங்களை விட்டுப்போன போது, அவர்கள் ஒருவருக்கொருவர் உள்ள உறவை அலட்சியப் படுத்தினால் அவர்கள் தங்களுக்கு எந்த சொந்தமும் இல்லை என எண்ணி வாடிப்போவார்கள். தகப்பன்மாரும் தாய்மார்களும் தாங்களும் ஒரு புருஷன்-மனைவிதான் என்பதை மறந்து போகிறபடியினால் அந்த சூழ்நிலையில் திருமணங்கள் உடைந்து சிதைந்து போகிற ஆபத்து ஏற்படுகின்றன. உங்கள் இல்லத்திலுள்ள மிக முக்கியமான உறவைப் பெலப்படுத்திக் கொள்ள இந்தப் பரிமாற்றமே ஓர் சிறந்த கருவியாக உள்ளது.

**அத்தியாயம் 5**

## இணங்கி வாழுதல் என்னும் இணைப்பு

ஒரு புருஷனும் மனைவியும் ஒற்றுமையாக வாழ்கிறார்கள் என்பதற்கு ''இணங்கி வாழ்தலே'' ஆதாரமாயிருக்கும்படி தேவன் அத்தன்மையை ஏற்படுத்தியிருக்கிறார். சரீரப்பிரகாரமாக இணங்கி வாழுதல் அல்லது ஒருவர் மீது மற்றொருவர் தீவிர ஆசை கொண்டு வாழ்தலையே 'இணங்கி வாழுதல்' என அநேகர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். சரீரப்பிரகாரமான இணக்கம் அவசியமானது தான். ஆனால்,

இணங்கி வாழுதல் என்றால், சரீரத்தில் தோன்றும் வெறும் இரசாயன மாற்றங்கள் மட்டுமல்ல, அது நமது நற்குணங்களையும் சம்பந்தப் படுத்துவதாயுள்ளது. உங்கள் சுபாவங்கள் இணக்கமுள்ளவைகளாக இருக்கின்றனவா? இங்குதான் திருமணங்கள் பிரச்சினைக்குள்ளாகின் றன. திருமணம் செய்து கொள்ளுகின்ற வாலிபர்கள், சில வேளை களில், தங்களுடைய ஆவிக்குரிய இணக்கத்தைக் குறித்துப் பேசுவது கூட கிடையாது.

திருமணம் செய்து கொண்ட பின்பு, தங்களுடைய ஆவிக்குரிய சுபாவங்களில் எந்தவிதமான இணக்கமும் தங்களுக்குள் இல்லை என்பதை அடிக்கடி அவர்கள் கண்டு கொள்ள நேரிடுகிறது.

உதாரணமாக கருவுற்றிருக்கும் ஓர் இளம் மனைவியினிடத்தில் அவளுடைய கணவன் வந்து, கருக்கலைப்புச் செய்து கொள்ள வேண்டுமென்று சொல்லுவதாக வைத்துக்கொள்வோம். ஆனால் அவளோ, ''நான் அதைச் செய்யப் போவதில்லை, அது என்னுடைய விசுவாசத்திற்கு எதிரானது'' என்று சொல்லுகிறாள். அதற்கு அவன்: ''நம்முடைய பிரச்சினைக்கும் உன்னுடைய விசுவாசத்திற்கும் என்ன சம்பந்தம்? ஒரு குழந்தையை இப்போது நம்மால் வளர்க்க முடியாது. உடனே அதைக் கலைத்துவிடு'' என்று சொல்லுகிறான். இறுதியில் அவள் விவாகரத்து செய்து விடுகிறாள். தாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளில் ஒரு மனைவிக்கும் புருஷனுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் இருக்கிறபடியினால்தான் இன்று அநேகத் திருமணங்கள் விவாகரத்தில் முடிவடைகின்றன. எந்தவொரு காரியத்திலும் முடி வெடுப்பதற்கு முன்பு, ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய கடமைகள் என்னவென்று அறிந்து திறந்த மனதோடு அதை ஏற்றுக் கொள்ளவும் அல்லது விட்டுக் கொடுக்கவும், இருவரும் திருமணம் செய்துகொள் வதற்கு முன்னமே ஒப்புக் கொடுத்திருக்க வேண்டியது அவசியம் ஆகும்.

நீங்கள் திருமணம் செய்து கொள்ளப்போகிற நபருடைய குணாதிசயங்கள் அல்லது விருப்பு வெறுப்புகளோடு நீங்கள் இணங்கிப் போகிறவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் இருவரும் கிறிஸ்து வுக்குள் ஒன்றாக இருந்து, உங்களுடைய விருப்பு வெறுப்புகள் யாவும் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் இருக்குமானால், அது உங்களுக்கு அருளும் இணக்கமுள்ள வாழ்வை எண்ணிப் பாருங்கள்! ஆவிக்கேற்றபடி இணங்கி வாழ்தலே உங்கள் திருமண உறவில் நீங்கள் நிறைவேற்ற வேண்டிய ஸ்தானத்திற்கும் பொறுப்புகளுக்கும்



அஸ்திபாரமாக இருக்கிறது. நீங்கள் இருவரும் சேர்ந்து, உங்கள் பிள்ளைகளை எப்படி வளர்க்க விரும்புகிறீர்கள்; உங்கள் நேரத்தையும் பணத்தையும் எப்படி செலவழிக்க விரும்புகிறீர்கள் மற்றும் வாழ்க்கை யின் பிற காரியங்களையும் உங்கள் ஆவிக்குரிய காரியங்களையும் நிர்ணயிப் பது நீங்கள் கட்டி எழுப்பியிருக்கும் உங்கள் ஆவிக்குரிய அஸ்திபார மேயாகும்.

வாழ்க்கையைக் குறித்து மக்கள் அந்த விதமாக உணர ஆரம்பித்த காலத்திலிருந்தே ''இணங்கி வாழுதல்'' என்னும் வார்த்தை சரித்திரத் தில் இடம் பெறலாயிற்று. 'இணங்கி வாழுதல்' என்னும் வார்த்தை ''உடன்'' மற்றும் ''பாடுபடுவதற்கு'' என்னும் இரண்டு வார்த்தைகளை வேராகக் கொண்டு அதிலிருந்து முளைத்தெழும்பி வருகிறது. ''ஒரு வரோடொருவர் பாடுபட'' தீர்மானம் செய்து கொண்ட இருவர் திரு மணத்தில் இணங்கி வாழத் தகுதியானவர்கள் என முற்காலத்தில் மக்கள் கருதி வந்தனர். தவறானக் கோணத்திலிருந்து வாழ்வை எதிர் நோக்குவதைப்போல அது தோன்றினாலும் அதுதான் உண்மையான கருத்தாகும். அந்நாட்களில் வாழ்க்கை மிகவும் கடினமானதாக இருந்தது. பழங்காலத் திருச்சபைக் கல்லறைத் தோட்டத்திற்கு நீங்கள் எப்போதாவது சென்றதுண்டா? நீங்கள் அங்கு சென்றால் பிள்ளைக ளுடைய கல்லறைகளை அதிகமாகக் காணலாம். கடந்த தலைமுறை களில் மக்கள் பெரிய குடும்பத்தை உடையவர்களாக இருந்தனர். அதற்குக் காரணம் ஒரு குடும்பத்தில் பத்து பிள்ளைகள் இருந்தால் அவைகளில் ஐந்து பிள்ளைகளாவது உயிர் பிழைக்க முடியும் என அவர்கள் நன்றாக அறிந்திருந்தனர்.

ஒரு குடும்பத்தில் புருஷனுக்கும் மனைவிக்குமிடையே உண்டா யிருக்கிற பரிமாற்றம் மிக முக்கியமானதாகக் கருதப்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று இணங்கி வாழுதல் ஆகும். நீங்கள் ஒரு பிள்ளையை இழந்து தவிக்கும்போது, அந்த சோதனையின் ஊடாக நீங்கள் இருவரும் சேர்ந்தே கடந்து செல்லுகிறீர்கள். நீங்கள் இருவருமாக சேர்ந்தே துக்கப்பட்டு பாடனுபவிக்கிறீர்கள். ஆனால் நீங்கள் உங்கள் மனைவியையோ அல்லது புருஷனையோ இழந்து தவிக்கும்போது நீங்கள் தனிமையில் அந்தத் துன்பத்தை அனுபவிக் கிறீர்கள். இந்த உண்மையை ஊர்ஜிதம் செய்கிற அநேக பாசம் மிக்க தம்பதியரைப்பற்றி நான் கேட்டிருக்கிறேன். கர்த்தரோடும் தங்கள் திருமண பங்காளரோடும் அவர்கள் உத்தமமாக நடந்து கொண்டதால் வாழ்வின் எத்தகைய கடினமானச் சூழ்நிலையையும் தங்களால் எளி தாகக் கடந்து செல்ல முடிந்தது என அவர்கள் கூறுகின்றனர். ''இணங்கி

வாழுதல்'' என்னும் வார்த்தைக்கு மிகப் பொருத்தமான பொருள் அந்த வாக்கியமாகத்தான் இருக்கும்.

ஆனால் எப்படியோ, அந்த வார்த்தைக்கு இன்று, ''எல்லா வகையிலும் ஒருவருக்கொருவர் பொருத்தமான இருவர்'' என்ற பொருள் வழக்கத்தில் இருந்து வருகிறது. அவர்கள் இருவருக்கும் சரீரப் பொருத்தமும் ஒரே விதமான விருப்பு வெறுப்புகளும் நோக்கங் களும் உண்டாயிருக்கின்றன. திருமணமான பின்போ, அவர்கள் இரு வரும் அவரவர்க்கென்று தனிப்பட்ட பெலனும் பெலவீனங்களும் பெற்றிருப்பதைக் கண்டுபிடிக்கின்றனர். திருமணமான ஆரம்பத்தில் பெலவீனங்கள் வெளிவருவதில்லை. ஆனால் சில காலம் சென்ற பின்பு தங்களுக்கென்றே உள்ள பெலத்துடனும் பெலவீனங்களுடனும் தாங்கள் வாழ்ந்து கொண்டிருப்பதையும் உணர ஆரம்பிக்கின்றனர். துர திர்ஷ்டவசமாக, அந்தக் கடினமான உண்மை மேலெழுந்து வரும் போது, ''இனிமேலும் நாம் இணங்கி வாழமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு அற்றுப்போயிற்று. என்னோடு இணங்கி வாழும் வேறொரு நபரை நான் கண்டு பிடித்துவிட்டேன்'' என்று திருமணமான பலர் சொல்லிவிட இன்று முடிவெடுத்திருக்கின்றனர்.

இணங்கி வாழுதல் இனி கூடாத காரியம் என்ற நிலை ஏற்பட்ட பின்பு திருமணத்திற்கு ஓர் முடிவு கட்டிவிட வேண்டியதுதான் என்று இன்றைய சமுதாயம் கூறுகிறது. எனவேதான் விவாகரத்துகளும் பிரிந்து வாழ்தலும் இந்நாட்களில் மலிந்து கிடக்கின்றன. உண்மையில் பல்வேறு கலாச்சாரப் பின்னணிகளிலும் விவாகரத்து செய்ய சட்டப்படி காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் விவாகரத்து செய்ய வேதாகமம் ஒரே ஒரு காரணத்தை மட்டுமே கூறுகிறது; அதுதான் ''இணங்கி வாழாமை.'' இது ஒரு துரோகச் செயலாகும். நான் உங்களோடு ஏற்கெனவே பகிர்ந்து கொண்டபடி, திருமண ஒப்பந்த மானது ஒரு நிபந்தனைக்கு உட்பட்டது. அந்த நிபந்தனை ''தனிப் பட்டிருப்பது'' என்பதாகும். நம்மோடு தனிப்பட்ட முறையில் வாழ விரும்பாத ஒரு நபருடன் நாம் இந்த உறவில் தொடர்ந்து வாழ வேண்டிய அவசியமில்லை என்று தேவன் இந்த நிபந்தனை மூலமாக நமக்கு உணர்த்திக் காட்டுகிறார்.

### ஏற்றுக் கொள்ளுதல்

இணங்கி வாழுதல் என்னும் கோட்பாட்டைக் குறித்து நமது புரிந்து கொள்ளுதலானது ஏற்றுக் கொள்ளுதல் என்னும் கோட்பாட் டையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். ஒரு திருமணத்தில் உங்கள்



மனைவி அல்லது புருஷனைக் குறித்து நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய காரியங்கள் பல உண்டு. அவனோ அல்லது அவளோ மாறி விடப் போவதில்லை. அநேகர் இந்தக் காரியத்தில் உண்மை தெரி யாமல் இருக்கிறார்கள். திருமணத்திற்குப் பின்பு தனது புருஷன் அல்லது மனைவியிடத்தில் இருக்கிற தனக்குப் பிடிக்காத குணத் தை மாற்றி தனக்கு விருப்பமானபடி அவர்களை நடந்து கொள்ளச் செய்து விடலாம் என்று அவர்கள் எண்ணுகின்றனர். குறிப்பாகப் பெண்கள் இப்படி இருக்கின்றனர். ''நான் அவரைத் திருமணம் செய்துகொண்டு, பின் என் விருப்பம்போல அவரை மாற்றிவிட என்னால் மந்திரம் செய்ய முடியும்'' என்று அவர்கள் எண்ணுகின்றனர். ஆனால் அது ஒரு முதிர்ச்சியற்ற எண்ணமாகும். திருமணத்திற்குப் பின்பும் கூட அந்த மனிதன் முன்பு எப்படி இருந்தானோ அப்படியே தான் இருக்கப் போகிறான். அவன் மாறப் போவதில்லை.

தங்களைத் தாங்களே மாற்றிக் கொள்ள முடியும் என்று எண்ணிய மக்களைக் குறித்து வேதம் வேடிக்கையாகப் பேசுகிறது. உதாரணமாக, ''எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால், தீமைசெய்யப் பழகின நீங்களும் நன்மை செய்யக் கூடும்'' என்று எரேமியா கூறுகிறார் (எரேமியா 13:23). மாறுவது அல்லது மாற்றப்படுவதெல்லாம் உண்மைக்குப் புறம்பான காரியம் என்று வேதம் நமக்குச் சொல்லுகிறது.

ஆனால் அதே வேதாகமம் ஒரு சில குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்ற நாம் ஆயத்தமாயிருந்தால் தேவனால் நம்மை மாற்ற முடியும் என்றும் கூறுகிறது. நீங்கள் கண்டிப்பாக மாறியே ஆக வேண்டும் என்று விரும்புவீர்களானால் அல்லது உங்கள் மனைவியோ அல்லது புருஷனோ மாற்றம் பெற்றே ஆகவேண்டும் என்று உறுதியாக நீங்கள் மனதில் தீர்மானம் செய்து கொண்டிருப்பீர் களானால். அந்த மாற்றத்தைப் பெற ஒரே வழிதான் உண்டு. அதுதான் மறுபடியும் பிறத்தல். மறுபிறப்பின் மூலமாக, தேவன் நம்மை மாற்றி கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகளாக ஆக்குகிறார் (2 கொரிந்தியர் 5:17).

மறுபிறப்பின் மூலமாக மட்டுமே மக்கள் மாற்றம் பெறமுடியும். வேறு வழியே இல்லை. உங்கள் மனைவியையோ அல்லது கண வனையோ உங்களால் மாற்றிவிடமுடியும் என்று எண்ணுவது பேதைத் தனமாகும். வேறு ஒருவரை திருமணம் செய்தால், உங்கள் பிரச்சினை களைத் தீர்த்துவிடலாம் என்று எண்ணுவது அதனினும் அதிக பேதமை யாகும். மாறாக நீங்கள் கூடுதலாக வேறு ஒரு நபருடைய பலம் மற்றும்

பெலவீனங்களோடு இணைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை விரைவில் கண்டு கொள்வீர்கள். உங்கள் வாழ்க்கைத் துணைவியின் அல்லது துணைவரின் நல்ல குணங்களையும் பெலவீனங்களையும் ஏற்றுக் கொள்ள கிருபை அருள வேண்டுமென தேவனிடத்தில் வேண்டிக் கொள்வதொன்றே ஞானமான செயலாகும்.

திருமணமான ஒரு தம்பதியராக நீங்கள் இருவரும் இணங்கி வாழுதலைக் குறித்து ஆலோசிக்கும்போது, அதில் எதிர்மறையான காரியங்களைக் குறித்து சிந்தியாதீர்கள். எதிர்மறையான காரியங்கள் ஒரு திருமண உறவை நாசமாக்கிவிடும். மாறாக, இணங்கி வாழுதலில் உங்களால் என்னென்ன செய்யக்கூடுமோ அவைகளைக் குறித்து சிந் தியுங்கள். ஒரு வாலிபன் அவனது பத்தொன்பதாவது வயதில் மறு படியும் பிறந்த அனுபவத்தை அடைந்தான். அவன், தன்னைக் கிறிஸ்து வுக்குள் வழி நடத்திய போதகரிடத்திற்குச் சென்று, பாலுறவு வாழ்க் கையில் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ளுவதில் தான் ஒரு கடினமானப் போராட்டத்தைச் சந்திக்கப் போவதாகக் கூறினான். போதகர் அவ னுக்குச் சில நல்ல புத்திமதிகளை வழங்கினார். அவர் அவனிடத்தில் ''தேவன் உனக்காக ஒரு பெண்மணியை ஏற்படுத்தி வைத்திருக்கிறார். உன்னுடைய பாலுறவு சம்பந்தப்பட்ட வாழ்க்கையில் பரிசுத்தமாக வாழ்வதற்கு எதிரான எல்லாப் போராட்டங்களுக்கும் இறுதியான தீர்வு அதுதான்'' என்று கூறினார்.

அதற்கு அந்தப் புதிய விசுவாசி ''நான் அவளைச் சந்திக்கும் போது இவள்தான் அந்தப் பெண்மணி என்று எப்படி அறிந்துகொள் வது?'' என்று கேட்டான். அந்தப் போதகர் அவனுக்கு விளக்கமாகக் கூற ஆரம்பித்தார்: ''ஒரு துண்டு காகிதத்தை எடுத்துக் கொண்டு அதன் நடுவில் மேலிருந்து கீழாக ஒரு நேர்க்கோடு வரைந்துகொள். அந்தக் கோட்டிற்கு இடது புறத்தில், அந்தப் பெண் ஆவிக்குரியப் பிரகாரமாக, புத்திசாலித்தனத்தில், சரீரத் தோற்றத்தில், மேலும் எப்படிப்பட்ட குண லட்சணங்களெல்லாம் இருக்க வேண்டுமென்று நீ விரும்புகிறாயோ அவைகளெல்லாவற்றையும் எழுது. இப்பொழுது அந்தக் கோட்டிற்கு வலதுபுறத்தில் அப்படிப்பட்ட பெண்ணொருத்தித் தனக்குப் புருஷனாக வரவிருக்கிறவன் எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்று விரும்பு வாளோ அந்த குணலட்சணங்கள் எல்லாவற்றையும் எழுது. அந்தப் பட்டியலை மிக்க கவனமாக வாசித்துப் பார்த்து, ''நான் அந்த விதமான மனிதனாக இருக்கிறேனா?'' என்று உன்னையே நீ கேட்டுக்கொள். நீ அப்படிப்பட்ட மனிதனாக இல்லாவிட்டால், உனது கற்பனையில் தோன்றும் பெண்ணுக்காக ஜெபித்து, சந்திக்கக் காத்துக் கொண்டிருக் கும் வேளையில் நீ செய்ய வேண்டியது என்னவென்று நீ அறிந்து கொள்ளுவாய்.''



நீங்கள் எதிர்பார்த்திருப்பது என்னவென்று உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறபடியினாலும், நான் மேற்கூறியபடி பட்டியல்களை ஆயத்தம் செய்து வைத்திருக்கிறபடியினாலும் உங்களுடைய வருங் கால மனைவியையோ அல்லது புருஷனையோ கண்டவுடனே, அவளே (அவனே). எனக்கு ஏற்றவளாக (ஏற்றவனாக) இருப்பாள் (இருப்பான்) என்று அறிந்து கொள்ளுவீர்கள். நான் அப்படித்தான் செய்தேன். நான் அந்தப் பட்டியலைத் தயார் செய்து அவற்றை அப் படியே மனப்பாடம் செய்து கொண்டேன். நான் எனது மனைவியைச் சந்தித்தபோது, அந்த இடத்திலேயே தீர்மானம் எடுத்திருக்க முடியும். ஆனாலும் இரண்டாவது சந்தர்ப்பம் வரட்டும் என்று நான் காத்திருந் தேன். ஏனெனில், நான் மிகவும் அவசரப் புத்திக்காரன் என்று அவள் என்னைக்குறித்து எண்ணிவிடக் கூடாதென்று விரும்பினபடியினால் நான் அவ்வாறு செய்யவில்லை! உங்கள் வருங்கால மனைவி அல்லது புருஷனைச் சந்தித்தபோது, இந்தப் பட்டியல்கள் உங்கள் கைவசம் இல்லாதிருந்திருக்கலாம். ஆனாலும் நீங்கள் அநேகமாக இந்த வித மாகவே செய்திருப்பீர்கள். அல்லவா?

உங்களுக்குத் திருமணம் ஆன உடன் ''என் மனைவி அல்லது புருஷனிடத்தில் காணப்படுகின்ற எந்த நற்குணங்கள் அவளை/ அவரை எனக்கு மனைவியாக அல்லது புருஷனாகத் தேர்ந்தெடுக்கும் படி கவர்ந்திழுத்தது?'' என்று உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். சில வேளைகளில் சிலருக்குத் திருமணம் ஆகி பல ஆண்டுகள் ஆகி யிருந்தால் ஒருவரையொருவர் அவர்கள் மனைவியாக அல்லது புருஷனாக தெரிந்து கொள்ளும்படி முதன் முதலாக தங்களைக் கவர்ந் திழுத்த காரியம் என்னவென்பதை அறிந்து கொள்ள அவர்கள் மறந்தே போயிருக்கின்றனர். நீங்கள் எப்படிப்பட்ட குறை இலட்சணங்களை எதிர்பார்த்திருந்தீர்கள்? அவைகளில் எத்தனை இன்றுவரை உங்கள் மனைவி அல்லது புருஷனிடத்தில் காணப்படுடகின்றன? பின்பு நீங் களே உங்களைப் பார்த்து, ''உங்களிடத்தில் காணப்பட்ட எந்த நற் குணங்கள் உங்கள் மனைவி அல்லது புருஷனிடத்திற்கு அவர்களை கவர்ந்திழுத்தன? அவைகளில் எத்தனை நற்குணங்களை நீங்கள் இன்று வரை உடையவர்களாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டுக் கொள்ளுங் கள். இப்பொழுது உங்கள் மனைவி அல்லது புருஷனிடத்தில் நீங்கள் கண்டு வியந்து பாராட்டின எல்லா நற்குணங்களையும் எழுதி ஒரு பட்டியலாக தயார் செய்யுங்கள். பின்னர் உங்கள் மனைவியோ அல்லது புருஷனோ உங்களிடத்தில் கண்டு வியந்து பாராட்டின எல்லா நற்குணங்களையும் பட்டியலிடுங்கள்.

போதகர் டிக் உட்வார்டு தனது மகளால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட அழகிய பேப்பர் வெயிட் (Paper weight) ஒன்றைத் தனது மேசையின் மீது வைத்திருந்தார். மழமழவென்றிருந்த அந்த அழகிய கல்லாலான பேப்பர் வெயிட் மீது, இவ்வாறு எழுதியிருந்தது: ‘‘நீங்கள் தேவனோடு நெருங்கி இருந்த அளவுக்கு இப்பொழுது நெருங்கி இராவிட்டால்...’’ அந்தப் பேப்பர் வெயிட்டின் அடிப்பாகத்தில் ‘‘விலகிப் போயிருப்பது யார்?’’ என்ற இரு வார்த்தைகள் எழுதப்பட்டிருந்தன.

இப்பொழுது அந்தக் கேள்வியை உங்களையும் உங்கள் மனைவி அல்லது கணவனைக் குறித்தும் கேட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் மனைவி அல்லது கணவரோடு நெருங்கி இருந்த அளவுக்கு இப்பொழுது நெருங்கி இராவிட்டால், விலகிப்போயிருப்பது யார்? நீங்கள் விலகிப் போயிருக்கிறீர்களா? அல்லது விலகிப்போனது உங்கள் மனைவியா? (அல்லது புருஷனா?) முதன்முதலில் உங்கள் இருவரையும் ஒன்றாகக் கூட்டிச் சேர்த்த அந்த நற்குணங்களை மறந்து விடாதீர்கள்.

**இணங்கி வாழுதலின் பகுதிகள்**

உங்களுடைய பழைய ‘‘இணங்கி வாழுதலின் பட்டியல்களைப் பார்க்க உங்களுக்கு உதவும்படிக்கு இணங்கி வாழுதலின் தன்மைகளில் ஒரு சில முக்கியமானதும் அடிப்படையானதுமான பகுதிகளில் நமது கவனத்தைத் திருப்புவோம்.

அவைகளில் ஒன்று சரீரப்பிரகாரமான இணக்கமாகும். ஒரு நல்ல திருமணத்தில், பாலுறவு தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்குமானால், அந்தத் திருமண உறவில் பத்து சதவீத இடத்தைப் பாலுறவு எடுத்துக் கொள்ளுகிறது. ஆனால் அது தேவனால் ஏற்படுத்தப்படாததாக இருந்திருக்குமானால் அத்திருமணத்தில் ஏற்படுகிற பிரச்சினைக்கு தொண்ணூறு சதவீதம் பாலுறவேதான் காரணமாயிருந்திருக்கும். எனவேதான் சரீரப்பிரகாரமான இணக்கமின்மையின் காரணமாகவே அநேகத் திருமணங்கள் உடைந்து போகின்றன. உங்களுக்குள் அப்படிப்பட்ட சரீரப்பிரகாரமான இணக்கமின்மை இருக்குமானால், நீங்கள் உங்களுடைய சுயநலத்தை நாடுவதற்குப் பதிலாக, உங்கள் மனைவி அல்லது புருஷனுடைய நலனைக் கருதி அவர்களைத் திருப்திப்படுத்துகிற காரியங்களுக்கு முதன்மை ஸ்தானத்தைக் கொடுத்து அவர்களை உங்கள் உறவின் மையத்தில் வைக்கும்போது எவ்வளவு அதிகமானப் பிரச்சினைகளை உங்களாலேயே தீர்த்துக் கொள்ள முடியும்?

இணங்கி வாழுதல் என்பது நமது நற்சுபாவங்கள் சம்பந்தப்பட்டதாகவும் உள்ளது. நற்சுபாவம் என்பது. ‘‘அதன் முக்கியத்துவம்,



பயன்படும் தன்மை, அதனால் விளையும் நன்மை மற்றும் அதன் விரும்பத்தக்கக் காரியங்கள் ஆகியவற்றைப் பொறுத்தே அது உயர்ந்ததா அல்லது தாழ்ந்ததா என்று தரம் நிர்ணயிக்கப்படுகின்றது.’’ ஒவ்வொருவரிடத்திலும் நற்சுபாவங்கள் உண்டு. ஒருவேளை நாம் அவைகளை வரையறுக்கக் கூடும் அல்லது கூடாமலும் போகலாம். திருமணத்தில் இருவர் இணைக்கப்பட்டபின்பு இந்தப் பகுதியில் தான் இணக்கமின்மை உண்மையில் தெளிவாகக் காணப்படும். நமது நேரத்தைச் செலவழிப்பது போன்ற காரியங்களை நமது நற்சுபாவங்கள் நிர்ணயிக்கிறதாயிருக்கிறது. உங்கள் மனைவி அல்லது கணவருடன் இப்படிப்பட்டக் காரியங்களில் உங்களுக்கு எப்போதாவது போராட்டம் ஏற்பட்டதுண்டா?

நமது பணத்தைச் செலவழிக்கிற விதத்திலும் கூட நமது நற்சுபாவம் வெளிப்படும். நமது பணமும் உடைமைகளும்தான் நாம் எவ்வாறு நேரத்தை செலவழித்திருக்கிறோம் என்பதைப் பிரதிபலித்துக் காட்டும். எனவே, நமது பணத்தைச் செலவு செய்யும்போது, நமது வாழ்க்கையை நாம் எவ்வாறு கழிக்கிறோம் என்பதை அது பொருள்படச் செய்கிறது. பண விஷயத்தில் நீங்களும் உங்கள் மனைவியும் (அல்லது கணவனும்) எப்போதாவது ஒத்துப் போகாமல் இருந்திருக்கிறீர்களா? தங்கள் பணத்தைச் செலவு செய்யும் விதத்தில் புருஷனுக்கும் மனைவிக்கும் இடையே பிரச்சினை ஏற்படும்போது, அவர்களுடைய இணங்கி வாழும் தன்மையில் ஓர் விரிசல் காண ஆரம்பித்திருக்கிறது என்பதையே அது தெரிவிக்கிறது.

உங்கள் பிள்ளைகளை நீங்கள் எவ்வாறு வளர்க்கிறீர்கள் என்பது உங்களுடைய இணங்கி வாழும் தன்மையையும் உங்களுடைய நற்சுபாவங்களையும் பிரதிபலித்துக் காட்டுகிற மற்றொரு பகுதியாக உள்ளது. ‘‘நமது பிள்ளைகள் எவ்வாறு இருக்க வேண்டுமென விரும்புகிறோம்? நமது பிள்ளைகளுக்கு எப்படிப்பட்டக் கல்வியைக் கொடுக்க வேண்டுமென விரும்புகிறோம்? நமது பிள்ளைகளை எவ்வாறு கண்டித்து வளர்க்கிறோம்?’’ போன்ற கேள்விகளுக்கு நீங்கள் இருவருமாகச் சேர்ந்து பதில் அளிக்க வேண்டும். ஒரு புருஷனும் மனைவியும் மிக வேறுபட்ட குடும்பப் பின்னணியிலிருந்து வந்தவர்களாயிருந்தால், இந்தக் கேள்விகளுக்கு பதிலளிப்பதில் இருவருக்கும் போராட்டம் ஏற்பட வாய்ப்புண்டு.

இறுதியாக, இணங்கி வாழுதலில் இன்று ஓர் முக்கியமான பகுதியாக விளங்குவது, குடும்பப் பொறுப்பை வகிப்பதாகும். ஒரு புருஷன் மற்றும் தகப்பனுடைய ஸ்தானத்திலிருந்து உங்கள் பொறுப்பை நீங்கள்

எவ்வாறு காண்கிறீர்கள்? ஒரு மனைவி மற்றும் தாயினுடைய ஸ்தானத்திலிருந்து உங்கள் பொறுப்பை நீங்கள் எவ்வாறு காண்கிறீர்கள்? நீங்கள் உங்கள் பொறுப்புகளை விவரித்துக் கூறும்போது நான் உங்களிடத்தில் இரண்டு கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் உங்கள் பொறுப்புகளை அல்லது ஸ்தானத்தை கலாச்சாரத்திலிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறீர்களா அல்லது வேத வாக்கியங்களிலிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறீர்களா? கலாச்சாரத்திலிருந்து நீங்கள் அவைகளைப் பெற்றிருந்தால் உங்கள் திருமணம் மற்றும் குடும்ப வாழ்வில் காரியங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன?

திருமணமானது தேவனால் ஏற்படுத்தப்பட்டு அதற்குரிய திட்டம் அவரால் வகுக்கப்பட்டது என்று நீங்கள் விசுவாசித்தால், நீங்கள் உங்கள் பொறுப்புகளை வரையறுத்த விதமானது வேத வாக்கியங்களில் வேர்கொண்டவைகளாக இருக்க வேண்டும். திருமணம் மற்றும் குடும்பவாழ்வு என்னும் தலைப்பில் இந்த வேதப் பாடத்தை நாம் கற்றுக் கொள்ள ஆரம்பித்தபோது திருமணம் மற்றும் குடும்ப வாழ்வுக்கான ஜீவ பிரமாணத்தை, தேவன் மனிதனை ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்தபோதே நிலைநிறுத்தினார் என்னும் முகவுரையை நினைவில் கொள்ளுங்கள். அவர் தமது வார்த்தையில் தம்பதியர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்றும் குடும்பங்கள் எவ்வாறு செயல்பட வேண்டுமென்ற திட்டத்தையும் மிகத் தெளிவாக வரைந்து வைத்திருக்கிறார். வேதாகமம் தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வார்த்தை என்று நீங்கள் விசுவாசிப்பீர்களானால், இந்தக் குடும்பப் பொறுப்பை வகிப்பவர்களுக்கான தெய்வீகத்திட்டம் என்ன என்பதை வேத வாக்கியங்களில் தேடிக் கண்டுபிடிக்க நீங்கள் முன்வர வேண்டும். ஒரு புருஷனும் மனைவியும் தேவனால் எழுதிக் கொடுக்கப்பட்டத் தங்களுடைய பொறுப்புகளை மனமுவந்துப் பெற்றுக் கொள்ள சம்மதிப்பார்களாகில், ஒருவரோடொருவர் இணக்கமுடன் வாழ அதுவே அவர்களுக்கு ஒரு மாபெரும் ஆற்றலை அளிக்கும்.

## வேதாகமப் பொறுப்புகள்

திருமணம் மற்றும் குடும்ப வாழ்விலுள்ள பொறுப்புகளைக் குறித்துப் பேசும்போது அதிகமாகக் காணப்படுகின்ற மற்றொரு காரியம் உள்ளது. நாம் அதனை ''கலாச்சாரத்திலிருந்து உண்டாகும் வாக்குவாதம்'' என்று அழைக்கலாம். வேதாகமம் எழுதப்பட்டக் காலத்தில் உண்டாயிருந்த கலாச்சாரம் வேறு, இன்று இவ்வுலகில் நிலவிவரும் கலாச்சாரம் வேறு. ஆகையால், சில குறிப்பிட்ட வேதப் பகுதிகளை இன்று நம்மால் பின்பற்ற முடியாது என சிலர் கூறுகின்றனர். இன்றைய கலாச்சார வேறுபாட்டினால் வேதத்தில் போதிக்கப்பட்டிருக்கும் சத்தியமானது பயனற்று போயிற்று என்பது அவர்களது வாதமாகும்.



பல வேதப் பகுதிகள் கலாச்சாரத்திற்கு ஏற்றபடி மொழி பெயர்க்கப்பட வேண்டியது அவசியம் என்பது உண்மைதான். உதாரணமாக 1 கொரிந்தியர் பதினோராம் அதிகாரத்தில், பெண்கள் தலைமயிரை வெட்டிக் கொள்வது தாங்கள் விபச்சாரத்தில் ஈடுபட்டிருப்பதை ஊருக்குத் தெரிவிப்பதற்காகவே என்றும் கிறிஸ்துவின் சாயலைக் கொண்டிருக்கும் பெண்மணியானவள் தனது கூந்தலை நீளமாக வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் பவுல் கூறுகிறார். அப்படிப்பட்ட கலாச்சாரம் வழக்கத்தில் இல்லாத இடத்தில், பெண்கள் தங்கள் கூந்தலை வெட்டிக் கொள்வதினாலோ அல்லது நீளமாக வளர்ப்பதினாலோ எந்த விதமான வித்தியாசமும் ஏற்படுகிறதில்லை.

ஆனால் வேதத்திலுள்ள மற்ற பல பகுதிகள் இன்றைய கலாச்சாரத்திற்கு ஏற்றபடி மொழிபெயர்க்கப்படக் கூடாதவைகளாக இருக்கின்றன. நாம்தான் நமது கலாச்சாரத்தை வேத வாக்கியங்களுக்கு ஏற்றபடி மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். வேத வாக்கியங்களை மொழிபெயர்க்க கலாச்சாரத்திற்கு இடமளிக்கக் கூடாது. தேவ பக்தியுள்ள கலாச்சாரத்தை ஏற்படுத்துவதற்காகவே வேதவாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட வேத வாக்கியங்களில் ஒன்றுதான் ஆதியாகமம். தேவன் பெண்ணை ஓர் உதவியாளராக அல்லது மனிதனை முழுமைப்படுத்துகிறவளாக சிருஷ்டித்தார் என்பதாகும். பெண் இன்றி ஓர் மனிதன் முழுமையற்றவனாக இருந்தான். அவ்வாறே ஓர் பெண்மணியும் தன்னை முழுமைப்படுத்துவதற்கு ஒரு மனிதனின்றி முழுமையற்றவளாக இருந்தாள். ஆணும் பெண்ணும் ஒன்றாக இணைக்கப்பட்ட பின்பு அவர்கள் ''ஆதாம்'' என்று அழைக்கப்பட்டனர் (''ஆதாம்கள்'' என்று அல்ல).

ஒரு மனைவியின்றி, ஒரு மனிதன், அவன் எவ்வாறு இருக்க வேண்டுமென்று சிருஷ்டிக்கப்பட்டானோ அவ்வாறு இல்லாமல், அதில் ஓர் பகுதியாகத்தான் இருக்கிறான். அவ்வாறே ஒரு புருஷனின்றி ஒரு பெண்மணியானவள் நிச்சயமாக முழுமையடையாதவளாகவே இருக்கிறாள். ஆனால் தேவன் இந்த இருவரையும் ஒன்றாகக் கொண்டு வந்து சேர்த்து ஒரே முழு நபராக ஆக்குகிறார். அதுதான் கலாச்சார வேறுபாடுகளினால் மாசுபடாத வேதாகமக் கலாச்சாரமும், ஒரு புருஷன் மற்றும் ஒரு மனைவிக்கான வேதம் கூறும் பொறுப்புகளின் விளக்கமுமாயிருக்கிறது.

## பேதுரு கூறும் ஓர் மாதிரி திருமணம்

1 பேதுரு மூன்றாம் அதிகாரத்தில், வேதாகமக் கலாச்சாரத்தின் மற்றொரு பகுதி காணப்படுகிறது. அதற்கு முந்தின அதிகாரத்தில், நாம் விசுவாசிகளாவதற்கு முன்பு, வழிதப்பிப்போன ஆடுகளைப் போல

சிதறடிக்கப்பட்டிருந்தோம் என்று எழுதியிருக்கிறார். ஆனால் ''இப் பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமான வரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்'' (2:25) என்று காண்கிறோம்.

பின்பு அவர் மூன்றாம் அதிகாரத்தை எழுத ஆரம்பிக்கும் போது, தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாத புருஷர்களையுடைய மனைவியருக்கு சில புத்திமதிகளைக் கூறுகிறார். ''அந்தப்படி மனைவி களே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப் பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர் களாயிருந்தால், பயபக்தியுள்ள உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினா லேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்'' என்று எழுதுகிறார் (3:1). புருஷர்களுக்கு அவர் எழுதும்போது, ''அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிற படியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர் களுடனே வாழ்ந்து, உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவ னாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்கிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள்'' (3:7) என்று கூறுகிறார்.

இந்த இரு வசனங்களிலும் (1,7) முக்கியமாகக் கூறப்பட்டிருக்கும் ஒரு வார்த்தை ''அந்தப்படி'' என்பதாகும். எந்தப்படி? ''உங்கள் ஆத்து மாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமாயிருக்கிறவர்'' என்னும் அந்த வார்த்தைகளைக் குறிப்பிட்டு பேதுரு எழுதுகிறார். புருஷர்களும் மனைவிகளும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற ஓர் நல்ல மாதிரியை எவ்விதமான முரண்பாடுமின்றி ஒரே சீராக பவுலும் பேதுரு வும் தங்கள் நிருபங்களில் எழுதுகின்றனர். கிறிஸ்துவும் திருச்சபை யுமே அந்த நல்ல மாதிரியாகும்.

கிறிஸ்துவையும் திருச்சபையையும் சுட்டிக் காட்டி புருஷர்களுக் கும் மனைவிகளுக்கும் புத்திசொல்லி எழுதும்போது, பேதுரு அவர் களிடத்தில், ''ஒரு புருஷன்-மனைவிக்கான, தேவனுடைய வேதத்தின் அடிப்படையிலான கலாச்சார வரைபடத்தை நீங்கள் காண வேண்டு மென்று விரும்புகிறீர்களா? அப்படியானால் கிறிஸ்துவானவர் திருச் சபையை எவ்வாறு மேய்ப்பராக வழிநடத்தினார் என்று கவனித்துப் பாருங்கள். புருஷர்களே, கிறிஸ்துவானவர் சபைக்கு மேய்ப்பராக இருப்பதுபோல நீங்களும் உங்கள் மனைவிக்கு மேய்ப்பராக இருங் கள். மனைவிகளே, ஒரு மனைவியாக இருப்பதில் உங்களுடைய பங்கு என்ன என்று அறிந்து கொள்ள உங்களுக்கு விருப்பமுண்டா?



அப்படியானால் கிறிஸ்துவையும் திருச்சபையையும் குறித்த இந்த மாதிரியை நன்றாக கவனியுங்கள். உங்கள் புருஷர் உங்களுக்குக் கிறிஸ்துவைப் போல இருக்கிறபடியினால், அவர் உங்களை மேய்ப் பரைப்போல வழி நடத்திச் செல்லும்போது, திருச்சபையானது கிறிஸ்து வுக்கு எவ்வாறு இருந்ததோ அவ்வாறே நீங்களும் உங்கள் உறவில் புருஷர்களிடத்தில் இருங்கள்'' என்று கூறுகிறார்.

அப்படிப்பட்ட ஆவியோடுதான் பேதுரு இந்தப் பகுதியை எழுதுகிறார். மிக அவசியமென்று உணர்ந்து பேதுரு பின்வருமாறு எழுதுகிறார்: ''மனைவிகளே, உங்கள் புருஷர்கள் உங்களுக்குக் கிறிஸ் துவைப் போலிருக்க இடம் கொடுங்கள். அவர்கள் உங்களை மேய்ச் சல் காட்டி நடத்திச் செல்ல அனுமதியுங்கள். கிறிஸ்துவானவர் திருச் சபையில் அன்பு கூர்ந்ததுபோல உங்களிடத்திலும் அன்பு செலுத்த இடமளியுங்கள்.'' கிறிஸ்துவானவர் திருச்சபைக்கு மேய்ப்பராக இருக் கும் விதமாக தங்கள் புருஷர்கள் தங்களுக்கு மேய்ப்பர்களாக இருக்கத் தங்களைக் கீழ்ப்படுத்துவதே மனைவியருக்கு உண்மையானக் கீழ்ப் படிதலாக இருக்கிறது.

இன்று அநேக விசுவாசிகளுடைய திருமணங்களில் நாம் இந்த மாதிரியைக் காண முடியாததற்குக் காரணம், மனைவிகள் தங்கள் புருஷர்களின் மேய்ச்சலுக்குத் தங்களைக் கீழ்ப்படுத்தாதது அல்ல, பிரச்சினை அதுவாகவே இருந்தாலும்கூட, இந்த மாதிரி திருமணங்கள் இன்று கூடி வராததற்கு தலையாயத் தடை என்னவெனில், புருஷர்கள் தங்கள் மனைவியருக்குக் கிறிஸ்துவைப் போல இல்லாததுதான். அவர் கள் தங்கள் இல்லங்களில் போதகர்களாக இருக்கிறதில்லை. தங்கள் மனைவிகளையும், குடும்பங்களையும் மேய்ச்சல் காட்டி நடத்திச் செல்லவும் பொறுப்பேற்கவும் முன்வருகிறதில்லை.

## பவுல் கூறும் ஓர் மாதிரி திருமணம்

எபேசியர் ஐந்தாம் அதிகாரத்தில், புருஷன்-மனைவிக்கானப் பொறுப்புகளையும் அவர்கள் நிற்கவேண்டிய ஸ்தானத்தையும் குறித்து பவுல் எழுதுகிறார். பவுல் கூறும் வார்த்தைகள் பேதுரு எழுதிய புத்தி மதிகளுக்கு மிகவும் ஒத்திருக்கிறது. இருபத்தோராம் வசனத்தில் பவுல் இவ்வாறு எழுதுகிறார்: ''தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்''. ஒரு பரஸ்பர கீழ்ப்படிதலுக்கு தங்களை ஒப்புக் கொடுக்கும்படி பவுல் அழைக்கிறதைக் கவனியுங்கள். சுபாவத்தின்படி நாம் சுயநலவாதிகளாக இருக்கிறபடியினால், புருஷர்களும் மனைவி களும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். இருவரும்

ஒன்றாயிருக்க வேண்டுமென்ற வாக்கியத்தை சில தேவ பக்தியுள்ள தம்பதியர்கள் வாசிக்கிறபோது, ''எதில் ஒன்றாயிருக்க வேண்டும்?'' என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டிருப்பதிலேயே அவர்கள் பல ஆண்டுகளைக் கழித்துக் கொண்டிருக்கின்றனர். இருவர் ஒன்றாயிருக் கவும், ஒரு திருமண வாழ்வு சிறப்புற்று விளங்கவும் புருஷனும் மனைவியும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அது தான் அன்பின் சாராம்சம்.

பவுல் தொடர்ந்து இவ்வாறு எழுதுகிறார்: ''மனைவிகளே கர்த் தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப் படியுங்கள். கிறிஸ்து தன் சரீரமாகிய சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அந்த சரீரத் திற்கு அவரே இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ் துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர் களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்'' (22-24).

தனது திருமண ஆலோசனையில் பேதுரு எவைகளையெல்லாம் கூறினாரோ அவைகளை எல்லாம் பவுலும் கூறுகிறார். புருஷர் களுக்கும் மனைவிகளுக்கும் உரிய பொறுப்புகளைக் குறித்து பேதுரு வும் பவுலும் எழுதும்போது, கிறிஸ்துவையும் திருச்சபையையும் அவர் களுக்கு ஓர் மாதிரியாக முன் வைத்து எழுதுகின்றனர். இந்த கிறிஸ்து மற்றும் திருச்சபையின் மாதிரியானது சிறிய ஆசியாவிலோ அல்லது ரோமாபுரியிலோ அந்நாட்களில் உண்டாயிருந்த கலாச்சாரத்தோடு எவ் வகையிலும் கலந்துவிடவில்லை. திருமணத்திற்கான இந்தத் திட்டம் அவர்களுடைய காலத்திலிருந்த தூய்மையற்றதும் பாவம் நிறைந்த துமான கலாச்சாரத்தில் ஓர் புரட்சிகரமான மாறுதலை உண்டாக்கிற்று. தாங்கள் வாழ்ந்து வந்த காலத்தில் நிலவி வந்த கலாச்சாரத்தின் கொள் கைகளைப் பின்பற்றக் கூடாதென இயேசு தமது அப்போஸ்தலர்களுக் கும் சீஷர்களுக்கும் போதித்தார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தங்கள் கலாச்சாரத்தில் ஒரு புரட்சிகரமான மாறுதலைக் கொண்டுவரும்படி இயேசு அவர்களுக்கு சவால் விடுத்தார்.

பவுல், பெண்களுக்காக வழங்கிய திருமண ஆலோசனையை அவர்கள் பின்பற்ற வேண்டுமானால் அவர்களுக்கு இயற்கைக்கு அப் பாற்பட்ட கிருபை தேவையாயிருக்கிறது. ஆனால் அவர் ஆண் களுக்கு வழங்கியிருக்கும் ஆலோசனையை அவர்கள் பின்பற்ற வேண்டுமானால் அதனிலும் அதிகமான இயற்கைக்கு அப்பாற்பட்ட கிருபை அவர்களுக்குத் தேவையாக இருக்கிறது. ''...கிறிஸ்து சபையில்



அன்பு கூர்ந்து தம்மையே அதற்காக ஒப்புக் கொடுத்தது போல'' (25-27), புருஷர்களாகிய நாமும் நமது மனைவிகளை நேசிக்கக் கட்டளைப் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவானவர் தமது சபையை நேசிக்கிற அதே விதமாகவே புருஷர்களும் தமது மனைவிகளையும் குடும்பங்களையும் நேசிக்க வேண்டும். கிறிஸ்துவானவர் சபைக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்ததுபோல புருஷர்களும் தங்களுடைய மனைவிகளுக்காகவும் குடும்பங்களுக்காகவும் தங்களையே ஒப்புக் கொடுக்கும்படி கட்டளை பெற்றிருக்கிறார்கள். ''பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்'' (மத்தேயு 5:48) என்று கூறி இயேசு வானவர் புருஷர்களுக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார். கிறிஸ்து நமக்குள் வாசம் பண்ணுவது நமக்கு ஓர் மகிமையான நம்பிக்கையாக இருக்கிறது என கொலோசெயருக்குப் பவுல் எழுதுகிறார். கிறிஸ்து நமக்குள் வாழுவாரானால், நாமும் கிறிஸ்துவைப்போல வாழுவதும், நமது மனைவிகளை நேசித்து நம்மை நாமே அவர்களுக்குக் கொடுப் பதும் சுபாவத்தின்படியே சாத்தியமாகும் (கொலோசெயர் 1:27).

பெண்களே, உங்கள் புருஷன், உங்களையும் உங்கள் பிள்ளை களையும், கிறிஸ்து தமது சபையை நேசிக்கிற விதமாகவே நேசிப் பாரானால் அவர் உங்களுக்கு மேய்ப்பராயிருக்கும்படி இடங்கொடுப் பது உங்களுக்குக் கடினமாக இருக்குமோ? அவர் உங்கள் குடும்பத் திற்குத் தலைவராயிருந்து, உங்களை நடத்திச் செல்லும் பொறுப்பை அவருக்கு வழங்குவது உங்களுக்குக் கடினமாக இருக்குமோ?

ஏதாவது ஒரு விதத்தில், பெண்கள் எளிதில் எதையும் செய்யத் துவங்குகிறார்கள். எனவேதான் பேதுரு மனைவியருக்கு மிக தேவை யான ஒரு புத்திமதியைக் கூறும்போது இவ்வாறு எழுதுகிறார். ''உங் கள் புருஷர்கள் உங்களுக்கு மேய்ப்பர்களாயிருக்க கனிந்த மனதோடு இடங்கொடுங்கள்.'' அவர் இந்த வார்த்தைகளை எழுதும் போது ''மனைவிகளின் நடத்தையினாலேயே அவர்கள் ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள் ..... சாந்தமும் அமைதலுமுள்ள குணமே தேவனு டைய பார்வையில் விலையேறப் பெற்றது'' என்பதை உண்மையில் பொருள்படக் கூறுகிறார். உங்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிவதில் கனிவு நிறைந்திருக்கட்டும். அநேக பெண்கள் வெளிப்புறத்தில் கீழ்ப்படிதலைக் காட்டுவார்கள். ஆனால் உள்ளேயோ எதிர்த்து நிற்பார் கள். ஆனால் பேதுரு இவ்வாறு எழுதுகிறார்: ''உங்கள் கீழ்ப்படிதல்

மாயமற்றதாயிருப்பதாக. அது உங்கள் உள்ளத்திலிருந்து புறப்பட்டு வரவேண்டும். மனங்கனிந்து கீழ்ப்படியுங்கள். அமைதலுள்ளவர்களாக இருங்கள். உங்கள் புருஷர்களுக்கு முன்பாக திருவார்த்தையை அப் படியே வாழ்ந்து காட்டுங்கள். நீங்கள் உங்கள் ஸ்தானத்தில் நிற்கிறதை அவர்கள் காணும்போது அவர்களும் தங்கள் ஸ்தானத்தில் நின்று தங் கள் பொறுப்புகளை நிறைவேற்ற சவால் பெற வேண்டும்.''

திருவசனத்திற்குக் கீழ்ப்படியாத புருஷர்களையுடைய மனைவிய ருக்குத்தான் பேதுரு இந்த புத்திமதிகளைக் கூறுகிறார் என்பதை மறந்து போகாதிருங்கள். இந்தப் புருஷர்கள் விசுவாசிகள் அல்ல என்பதையும் அது அர்த்தப்படுத்தலாம். அவர்கள் விசுவாசிகளாயிருந்தாலும்; கிறிஸ் துவானவர் தமது திருச்சபைக்கு எவ்வாறிருக்கிறாரோ அவ்வாறு தங் கள் மனைவியர்களிடம் நடக்காமல் இருக்கலாம் என்பதையும் அது அர்த்தப்படுத்தலாம். இயேசு, பேதுரு மற்றும் பவுல் ஆகியோரது வார்த்தைகளின்படி ஒரு புருஷனும் ஒரு மனைவியும் நிற்க வேண்டிய ஸ்தானம் ஒன்று உண்டு. தங்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட ஸ்தானத் தில் நிற்கத் தவறிய புருஷர்களையுடைய மனைவியருக்குத்தான் பேதுரு இந்த வார்த்தைகளை எழுதுகிறார்.

***திரண்ட கருத்து:***

குறிப்பாக, இந்த மனைவியருக்குப் பேதுரு சொல்லிக் கொண்டி ருக்கிற புத்திமதி என்னவெனில், அவர்கள் தங்கள் புருஷர்களை அவர் களுடைய ஸ்தானத்தில் நிறுத்துவதற்காக அவர்களுக்குப் பிரசங்கம் செய்ய வேண்டியதுமில்லை, அவர்களைப் பிடித்துத் தள்ளிவிட வேண்டியதுமில்லை அல்லது அவர்களை இழுத்துக் கொண்டு போய் நிறுத்த வேண்டியதுமில்லை என்பது தான். தேவனுடைய கிருபை யினால் அவர்கள் தங்களுடைய ஸ்தானத்தில் நின்றால் மாத்திரம் போதுமானதாகும். தனது அறிவுரைகள் யாவும் அவர்களுடைய புருஷர்களை மனந்திரும்புதலுக்கு நேராக வழி நடத்திவிடும் என்றோ அல்லது அவர்களது நடவடிக்கைகளில் ஓர் மாற்றத்தை உண்டுபண் ணும் என்றோ அவர் இங்கு கூறவில்லை. அவர்களுடைய பிரச்சினை கள் தீர்க்கப்பட வேண்டுமானால், அவர்கள் தங்கள் புருஷர்களுக்கு முன்பாக நல்ல ஓர் முன்மாதிரியான வாழ்க்கையை வாழ்ந்து காட்ட வேண்டும். அதுவே அவர்களுடைய புருஷர்களைத் தங்களுடைய ஸ்தானத்தில் கொண்டுவந்து நிறுத்தும் என்பதுதான் பேதுருவின் ஆலோசனையாகும்.



**அத்தியாயம் 6**

## அன்பு என்னும் இணைப்பு

ஒரு புருஷன் மற்றும் மனைவிக்காக தேவன் ஏற்படுத்தியிருக்கும் ஒருமைப்பாட்டின் அஸ்திபாரம் ஆவிக்குரிய பரிமாணமே ஆகும். திரு மணமான ஒரு தம்பதியர் தங்களுடைய ஒருமைப்பாட்டை பேணிக் காக்கவும் வளர்த்துக்கொள்ளவும் பரிமாற்றம் ஓர் கருவியாக இருக் கிறது. இணங்கி வாழுதல் அவர்களுடைய ஒருமைப்பாட்டிற்கு ஆதார மாயிருக்கிறது. இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று திரு வுளம்பற்றிய தேவன் அவர்களுடைய ஒருமைப்பாட்டிற்கு ஆற்றல் அளிப்பதற்காக அவர்களுக்கிடையே அன்பை வைத்தார்.

திருமண ஒப்பந்தத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பு, ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பின்வரும் கேள்வியைத் தமக்குத் தானே கேட்டுக் கொள்வது நல்லது. ''நான் உன்னை நேசிக்கிறேன்'' என்று நீங்கள் ஒரு வருக்கொருவர் சொல்லும்போது, அதன் பொருள் என்ன? எனக்கு இந்தத் தேவை இருக்கிறது. நான் இதுவரை சந்தித்த மற்ற எல்லா ரையும் விட நீ இந்தத் தேவையை எனக்கு ஏற்றபடி பூர்த்தி செய்வாய் என்பது அதன் அர்த்தமா? 'நான் உன்னை நேசிக்கிறேன்' என்று நீங்கள் சொல்லும்போது, 'நீ எனக்குத் தேவை' என்று உண்மையில் பொருள் பட சொல்லுகிறீர்களா?'' அன்பு என்னும் கோட்பாட்டிற்கு உங்கள் வியாக்கியானம் அதுவாக இருக்குமானால், ''அன்பு'' என்னும் வார்த் தைக்கு வேதம் கூறும் பொருள் என்ன என்பதை நீங்கள் அறியவில்லை என்பதையே அது தெளிவுபடுத்துகிறது.

'நான் உன்னை நேசிக்கிறேன்' என்று சொல்லும்போது, 'நான் சுகமாயிருப்பது எவ்வளவு முக்கியமானதோ, நீ சுகமாயிருப்பதும் அவ்வளவு முக்கியமானது' என்ற பொருள்படும்படி நீங்கள் அதைச் சொல்லுகிறீர்களா? அது சிறப்பானதுதான். ஆனால் அது இன்னும் வேதம் கூறுகிறபடி, கிறிஸ்துவைப் போல நேசிக்கிறதை வெளிப்படுத்த வில்லை.

ஒரு திருமணத்தில் மிகப் பெரிய பிரச்சினை சுயநலமே ஆகும். அதற்கு எதிர்மாறாக, ஒரு திருமணத்தில் ஒரு மிகப் பெரிய ஆற்றல் என்னவெனில் சுயநலமின்மை, பிறர் நலம் கருதுதல் அல்லது பிறரு டைய தேவையை எவ்வாறு பூர்த்தி செய்யக்கூடும் என்று எண்ணி அவர்களுக்கு உதவி செய்ய முற்படுவதாகும். அன்பிற்கு வேதம் கூறும் விளக்கம் என்னவென்று நீங்கள் தேடிக் கண்டுபிடிக்கும்போது ஒரு திருமணத்தில் மிகப் பெரிய ஆற்றல் கிறிஸ்துவின் அன்பைப்

போன்ற அன்பே என்று அறிந்து கொள்ளுவீர்கள். ஏனெனில், கிறிஸ்து வின் அன்பு ஒன்றே நம்மை சுயநலமற்றவர்களாக ஆக்குகிறது.

''வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்'' என்று இயேசு சொன்னார் (அப். 20:35). இயேசுவின் அந்தப் போதனை வாழ்வில் செயல்படுத்தப்படும்போது திருமணங்கள் புரட்சிகரமான மாற்றங்களை உண்டுபண்ணும். அநேகர் திருமணம் செய்து கொள் ளும்போது, அவர்கள் பறித்துக் கொள்ளுகிறவர்களாகவே இருக் கிறார்கள். தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர் கள் ஒருவரிடத்திலிருந்து மற்றொருவர் பறித்துக் கொள்ளவே முயற்சி செய்கிறார்கள். இருவருமே பறித்துக் கொள்ளுபவர்களாகவே இருந்து கொடுக்கிறவர்கள் இல்லாமற் போவதால், ஒருவரும் பெற்றுக் கொள் ளுகிறதில்லை. ஆனால் வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்னும் உண்மையை அவர்கள் உணர்ந்து கொள்ளும் போது, அது எத்தனை பெரிய மாற்றத்தை அவர்கள் வாழ்வில் உண்டாக்குகிறது!

பிறர் நலம் கருதும் பழக்கத்தை நீங்கள் கற்றுக் கொள்ளாத வர்களாக இருந்தால், பிள்ளைகளைப் பெற வேண்டாம். தெய்வீக வழிநடத்துதலின் அடிப்படையில் திருமணம் செய்து கொள்ள ஒப்புக் கொடுப்பதைப் போலவே தேவ பக்தியுள்ள தம்பதியர்கள், தங்கள் குடும்ப வாழ்க்கையில் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள கர்த்தரால் வழிநடத்தப்படுவதற்கு முன்பு பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடாது. பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளுவது ஒரு தம்பதியர் செய்யக் கூடிய மிகப் பெரிய சுயநலமற்ற செயலாகும். தங்கள் பிள்ளைகளைப் போஷித்துப் பராமரித்து வளர்க்கிற அந்த இருபது முதல் இருபத்தைந்து ஆண்டுகள் வரை அவர்கள் கொடுக்க வேண்டும், எதையும் திரும்பப் பெறாமல் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அவர்கள் நல்ல பெற்றோர்களாக இருப்பார்களானால், தங் கள் பிள்ளைகளுக்குத் திருமணம் முடித்து அவர்கள் தங்களை விட்டுப் பிரிந்து போகும்போதுகூட அவர்கள் கொடுக்கிறவர்களாக இருப் பார்கள். சுயநலமற்ற ஈகைக்கு அதுவே இலக்கணமாக விளங்குகிறது.

இன்று மங்கி மறைந்து கொண்டிருக்கும் உயிரினங்களில் நானும் ஒருவனாக இருக்கலாம். திருமணம் மற்றும் குடும்ப வாழ்வுக்கான தேவனுடைய சட்ட திட்டங்களையும் பிரமாணங்களையும் விசுவாசிக் கிற ஒரு தேவபக்தியுள்ள பெண்மணியைத் தாயாக அடையும் பாக்கி யத்தை நான் பெற்றிருந்தேன். தேவ பக்தியுள்ள எனது தாய்க்கு பதி னொரு பிள்ளைகள் இருந்தனர். ஒரு நாள் நான் அவர்களைப் பார்த்து,



''மீண்டும் ஒரு முறை இந்த வாழ்க்கை உங்களுக்கு அமைந்தால் எங்கள் அனைவரையும் மீண்டும் உங்கள் பிள்ளைகளாகப் பெற்றுக் கொள்வீர்களா?'' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், ''ஆம், நான் பெற்றுக் கொள்ளுவேன். ஆனால் அதற்கு முன்பு, மீண்டும் ஒரு முறை இந்த வாழ்க்கையை என் சொந்த முயற்சியில் வாழப் போவதில்லை என்பதை முடிவு செய்வேன்'' என்று பதில் அளித்தார்கள். ''மீண்டும் நான் இந்த வாழ்க்கையை என் சொந்த முயற்சியில் வாழ விரும்ப வில்லை'' என்று எனது தாயார் முடிவு செய்ததை எண்ணும் போது அது உங்களுக்குச் சற்று விநோதமாகத் தோன்றலாம்.

இருபத்தோராவது நூற்றாண்டு வாலிபர்களின் விருப்பங்களில் ஒன்று ஒரு வாழ்வைப் பெறுவதும் அதை அனுபவிக்க உரிமையும் ஆகும். எனவேதான், ஒரு மனிதனை முழுமைப்படுத்துவதற்கு தங்களு டைய ஒத்துழைப்புத் தேவையாயிருக்கிறதே என்ற எண்ணத்தினால் பல பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அவ்வாறே, ஆண்களும், கிறிஸ்து சபையை நேசித்து அதற்காகத் தம்மையே ஒப்புக் கொடுத்த தைப்போல தாங்களும் தங்கள் மனைவிகளுக்காகவும் குடும்பங்களுக் காகவும் தங்களை அர்ப்பணிக்க வேண்டியதாக இருக்கிறதே என்ற எண்ணத்தினால் மனம் சோர்ந்து போயிருக்கின்றனர். ஒரு வாழ்க்கை யைப் பெற்று அதை உங்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் போது, அதை உங்கள் மனைவிக்கும் குடும்பத்திற்கும் உங்களால் எப்படிக் கொடுக்க முடியும்? அது உங்களால் முடியாது என்பது தான் பதிலாகும்.

''இவன் மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ளத் திராணி இல்லை'' என்று இயேசுவைக் குறித்துச் சொல்லப் பட்டது (மத்தேயு 27:42). கிறிஸ்துவின் அன்பைப் போன்ற அன்பைக் கொண்டு பிறரை நேசிக்க வேண்டுமானால், நீங்கள் யாரை நேசிக்கிறீர் களோ அவர்களுக்காக உங்கள் வாழ்வை தியாகம் செய்ய வேண்டும். எனது தாயார் அவர்களுடைய புருஷனையும் பிள்ளைகளையும் கிறிஸ்துவின் அன்புடன் நேசித்தார்கள். அதனால்தான் அவர்களுக் கென்று ஒரு சொந்தமான வாழ்க்கை இல்லாதிருந்தது. ஆனால் அவர் கள் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள்! அவர்களுக்குத் திருமணமாகி பல ஆண்டுகள் ஆகியிருந்தும், ஒரு முறையேனும் திருமணத்தைக் குறித்துப் போதிக்கிற புத்தகம் எதையும் அவர்கள் வாசித்ததில்லை. வேதத்தை மாத்திரமே வாசித்துக் கொண்டிருந்தார்கள். அந்த வேத புத்தகத்தில், அவர்களுடைய திருமணத்திற்கான ஆற்றலை அவர்கள் கண்டு கொண்டபடியினால், அவர்கள் ஒரு மகிழ்ச்சி நிறைந்த மனை வியும் தாயுமாக வாழ்ந்து வந்தார்கள்.

தாங்கள் வாழ்வதற்கு அவர்கள் தெரிந்துகொண்ட ''அன்பின் விதம்'' (''love style'') ''நான் அல்லது எனக்கு'' (''I or for me'') தலைமுறையினருடைய மனப்பான்மைக்கு நேர் எதிரிடையாக உள்ளது. ''ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை'' (யோவான் 15:13) என்றும் ''தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்'' (லூக்கா 9:24) என்றும் இயேசுவானவர் கூறிய வார்த்தைகளை அவர்கள் வாழ்ந்து காட்டினார்கள். ''தன்னால் வைத்துக் கொள்ள முடியாததை கொடுத்துவிடுகிறவனும் இழந்துபோக விரும்பாததை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவனும் முட்டாள் அல்ல'' என்று தனது விசுவாசத்திற்காக இரத்த சாட்சியாக மரித்த ஓர் அருட்பணியாளர் எழுதியிருக்கிறார். மற்றவர்களுக்காக உங்கள் ஜீவனைப் பலியாக ஒப்புக்கொடுக்கும் அன்பே மிகப் பெரிய அன்பாகும். திருமணத்தில் இணைக்கப்பட்ட ஒரு புருஷனும் மனைவியும் இப்படிப்பட்ட அன்பையே தரித்துக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று வேதம் தெளிவாக எடுத்துக் கூறுவதை நீங்கள் காணலாம்.

ஒரு புருஷன் மனைவியின் ஒருமைப்பாட்டிற்கு ஆற்றல் அளிப்பது இவ்வகையான அன்பே ஆகும். சுருங்கக் கூறின், ஒரு தம்பதியர் தனித்தனியேயும், ஒன்றாகச் சேர்ந்தும் கிறிஸ்துவோடு கொண்டிருக்கிற ஆவிக்குரிய உறவே அவர்களது ஒருமைப்பாட்டிற்கு அஸ்திபாரமாயிருக்கிறது; ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ளவும், உரமிட்டு வளர்க்கவும் உதவும் கருவியே பரிமாற்றமாகும்; ஒருமைப்பாட்டிற்கு ஆதாரம் இணங்கி வாழுதலாகும்; ஒருமைப்பாட்டில் நிலைத்திருக்கச் செய்கிற ஆற்றல் அன்பே ஆகும்.

### *அன்பு என்றால் என்ன?*

''நான் உன்னை நேசிக்கிறேன்'' என்று ஒரு பெண்ணிடத்தில் சொல்லும்போது, நீங்கள் அவ்வாறு சொல்லுகிறதின் அர்த்தம் என்ன?'' இந்தக் கேள்வியை நான் சில ஆண்களிடத்தில் கேட்டபோது இதற்குப் பதில் கூற சரியான வார்த்தைகளைக் கண்டுபிடிக்க முடியாமல் அவர்கள் திணறுவதைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டிருக்கிறேன். அன்பு என்றால் என்னவென்று அவர்கள் தங்கள் உள்ளத்தில் உணர்வதை விளக்கிக்கூற இயலாமல் இருக்கின்றனர். உண்மை என்னவெனில், நமது வாலிபப்பிராயத்தில் நாம் திருமணம் செய்து கொள்ளும் போது முதலாவது, அன்பு என்றால் என்ன என்பதைக் குறித்து ஒன்றையும் அறிந்து கொள்ளாமல் இருந்திருக்கலாம். ''நான் உன்னை நேசிக்கிறேன்'' என்று ஒரு வாலிபன் ஓர் அழகிய இளம் பெண்ணைப்



பார்த்துச் சொல்லும்போது, ''நான் என்னை நேசிக் கிறேன், நீ எனக்கு வேண்டும்'' என்பதுதான் அநேகமாக அவன் சொல்லுவதின் அர்த்தமாயிருக்கிறது. தான் மிகவும் நேசிக்கிற தனது இளம் மனைவியைப் பார்த்துப் பேசுகிற ஒரு மனிதனுடைய வார்த்தைகள் இந்த அர்த்தத்தை மாத்திரமே உடையதாக இருக்குமானால், அது அவனுடைய மனைவியை ஓர் பாதுகாப்பற்ற சூழ்நிலைக்குக் கொண்டு போய் விட்டுவிடும். ஏனெனில் இந்த மனைவியைவிட வேறொரு பெண் தனது தேவைகளை அதிகமாகப் பூர்த்தி செய்கிறவளாக இருக்கக் கண்டால், இவன் தன் மனைவியை விட்டுவிட்டு அவளையே நாடிச் செல்கிறவனாக இருப்பான்.

### *வேதாகமத்தின் ''அன்பு'' அதிகாரம்*

தேவனுடைய அன்பைக் குறித்தும் கிறிஸ்துவின் அன்பைக் குறித்தும் எழுதப்பட்டிருக்கிறதாக நான் கருதுகிற மிகப் பெரிய வாசகம் ஒன்றை நான் உங்களோடு பகிர்ந்து கொள்ளட்டும். நீங்கள் மிகவும் நன்றாக அறிந்திருக்கிற வேதப் பகுதியாகிய 1 கொரிந்தியர் பதிமூன்றாம் அதிகாரத்தில் அது எழுதப்பட்டிருக்கிறது. இந்த உற்சாகமூட்டும் வார்த்தைகளை பவுல் கொரிந்தியருக்கு எழுதிய போது, 'அன்பு' என்னும் தலைப்பில் எழுதுவது அவருக்கு முதன்மையான காரியமல்ல. உண்மையில், அவர் ஆவிக்குரிய வரங்களைக் குறித்து எழுதிக் கொண்டிருந்தார். ஆவிக்குரிய வரங்களை அன்பின் கண்ணோட்டத்தோடு எழுதும்படி ஏவப்பட்டு அவர் இதை எழுதியிருக்கிறார்.

### *அன்பு ஒப்பிட்டுப் பேசப்படுகிறது (1-3)*

''நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்க சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கு இராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும் அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை'' (1-3).

இந்த மாபெரும் அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்களில், 'அன்பு' என்பது ஒப்பிடப்பட முடியாததும், அதற்குப் பதிலாக வேறொன்றை மாற்றுப் பொருளாகக் கொள்ளக் கூடாததுமாக

இருக்கிறது என்று எழுதுகிறார். அவர் இங்கு வலியுறுத்திச் சொல்ல விரும்புகிற காரியம் என்னவெனில், ''என் வாழ்க்கையில் அன்பு இரா விட்டால், நான் ஒன்றுமில்லை எனக்கு ஒன்றுமில்லை, என்னால் ஒன்றும் செய்ய முடியாது நான் ஒன்றும் ஆக முடியாது, என்னால் எதையும் பெற முடியாது'' என்பதுதான். பவுல் வாழ்ந்து வந்த நாட்களில், கிரேக்க கொரிந்திய கலாச்சாரத்தைக் கைக்கொண்டு வந்த மக்கள் சிறந்த பேச்சாளர்களாக விளங்கினர். கல்வி அறிவு பெற்றவர்களாகவும் கல்வி கற்பிப்பதைத் தொழிலாகக் கொண்டவர்களாகவும் இருந்தனர். குறிப்பாக, தத்துவ ஞானத்தில் தேர்ச்சிப் பெற்று விளங்கினர். கொரிந்து பட்டணத்து விசுவாசிகள் ஆவிக்குரிய வரங்களை அதிகமாக மதித்து நாடி வந்தனர். குறிப்பாக, அந்நிய பாஷைகளைப் பேசுகிற வரத்தை அதிகமாக மதித்தனர். எனவேதான், பேச்சுத் திறமை, தூதர்களின் பாஷைகள், ஆகிய இவைகளோடு பவுல் அன்பை ஒப்பிட்டுப் பேசுகிறார். சகல அறிவையும் பெற்றவர்களாக, எதற்கும் ஒப்பிடமுடியாத, எதற்கும் ஈடாகாத அன்பிற்கு முதலிடம் தரும்படி சொல்கிறார்.

பின்பு பவுல் தீர்க்கதரிசன வரத்தைக் குறிப்பிட்டு எழுதுகிறார். பின்வரும் அதிகாரத்தில் அதுவே மற்ற எல்லா ஆவிக்குரிய வரங்களைக் காட்டிலும் மேன்மையானது என எழுதுகிறார் (1 கொரி. 4:1). அன்பை விசுவாசத்துடன் ஒப்பிட்டு, மூன்று மிகப்பெரிய நித்திய நற்குணங்களுள் ஒன்று விசுவாசம் என்று சொல்லி இந்த அதிகாரத்தை முடிக்கிறார். சபைச் சரித்திரத்திலேயே மிகச் சீரிய அருட்பணி தொண்டாற்றிய பவுலுக்கு விசுவாசமானது எவ்வளவு முக்கியமானதாகக் காணப்பட்டது என நாம் அதன் மூலமாக அறிய வருகிறோம். ஆயினும், அன்பற்ற விசுவாசம் நமக்கு இருக்குமானால் நாம் ஒன்றுமில்லை என அவர் எழுதுகிறார். கொரிந்தியர்கள் மிக உயர்வாகக் கருதிய இந்த நற்குணங்களோடு பவுல் அன்பை ஒப்பிட்டுப் பேசும் போது, ''அன்பு ஒன்றே உயர் இலட்சணமாகவும் ஒப்பற்றதாகவும் இருக்கிறபடியினால், உங்கள் வாழ்வில் இவைகளில் ஒன்றாகிலும் அன்புக்கு ஈடாகாது'' என கூறி முடிக்கிறார்.

### *அன்பு வித்தியாசப்படுத்தப்படுகிறது (8-13)*

''அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம். அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும் போது குறைவானது ஒழிந்துபோம். நான் குழந்தையாயிருந்தபோது



குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப் போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கு ஏற்றவைகளை ஒழித்துவிட்டேன். இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளுவேன். இப்பொழுது விசுவாசம் நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக் கிறது; இவைகளில் அன்பே பெரியது'' (8-13).

இந்த அதிகாரத்தின் இறுதியில், பவுல், அன்பிற்கான ஒப்புவமைகளைச் சுருக்கித் தொகுத்து வழங்குகிறார். அப்பொழுது, உண்மையிலேயே முடிவின்றி நிலைத்து நிற்கிற மூன்று நித்திய நற்குணங்களாகிய நம்பிக்கை, விசுவாசம் மற்றும் அன்பு ஆகியவற்றைக் குறித்து நம்முடன் பகிர்ந்து கொள்ளுகிறார். ஆனால் இந்த மூன்று நித்திய நற்குணங்களிலும் அன்புதான் மிகச்சிறந்தது என்று கூறி முடிக்கிறார். நம்பிக்கையானது நம்மை விசுவாசத்திற்கு நேராக வழிநடத்துகிறபடியினால் அதுவும்கூட நித்தியமான நற்குணங்களுள் ஒன்றாக இருக்கிறது. ஒரு நாளில் அந்த நம்பிக்கையானது நம்மை விசுவாசத்திற்கு நேராக வழிநடத்திச் செல்லும்போது, நாம் உறுதியுடன் எதிர்பார்த்திருந்த அந்த நன்மையான பாக்கியத்தை இவ்வுலக வாழ்விலேயே நாம் பெறுவோம் (எபி. 11:1) விசுவாசமானது நம்மைத் தேவனுக்கு நேராக வழிநடத்திச் செல்லுகிறபடியினால் அதுவும்கூட நித்திய நற்குணங்களில் ஒன்றாக இருக்கிறது. ஆனால் நாம் அன்பைக் கண்டு பிடித்துக் கொள்ளும்போது, தேவனிடத்திற்கு வழிநடத்திச் செல்லுகிற வேறொரு நற்குணத்தினிடத்திற்கு அது நம்மை நடத்திச் செல்லுகிறதில்லை. தேவனுடைய சுபாவங்களில் ஒன்றாக அன்பு காணப்படுகிறபடியினால், நாம் அன்பைக் கண்டுபிடிக்கும்போது தேவனையே நேரடியாகக் கண்டுபிடித்ததற்குச் சமமாகக் கொள்ளலாம். அதனால்தான் அன்பு ஒப்பிடப்பட முடியாதது, அதற்கு ஈடாக வேறொன்றை நாம் கொள்ள முடியாது எனக் கூறுகிறோம். ''தேவன் அன்பாகவே இருக்கிறார்'' (1 யோவான் 4:16).

### *அன்பு நற்குணங்களின் தொகுப்பு*

''அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமை இல்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும், சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்'' (4-7).

இவ்வுலகிலேயே மிகச்சிறந்த காரியம் ("The greatest thing in the world") என்னும் தனது சிறப்பு மிக்க தியான நூலில் அதை எழுதிய ஹென்றி ட்ரம்மாண்டு என்பவர் நாம் மேலே வாசித்த அந்த நான்கு வசனங்களையும் குறித்து இவ்வாறு எழுதியிருக்கிறார்:

''இந்த வசனங்களில், பரிசுத்த ஆவியானவர், பவுலினுடைய உற்சாகமூட்டும் அறிவுப்பூர்வமான வார்த்தைகள் என்னும் பெட்டகத் தின் ஊடாக தெய்வீக அன்பு என்னும் கோட்பாட்டை ஊடுருவிச் செல்லச் செய்திருக்கிறார். அவரது வார்த்தைகள் அப்பெட்டகத்தின் மறு பக்கத்தின் வழியாக நற்குணங்களின் தொகுப்பாக வெளி வரு கிறது''. இந்த நான்கு வசனங்களிலும் பதினைந்து நற்குணங்கள் சொல் லப்பட்டுள்ளன. இந்த நற்குணங்களை நீங்கள் ஆராய்ந்து பார்த்தால், தெய்வீக அன்பின் ஓர் குறுக்கு வெட்டுத் தோற்றத்தையே நீங்கள் ஆராய்ந்து கொண்டிருப்பதைக் காண்பீர்கள். 'தேவன் அன்பாகவே இருக்கிறார்' (1 யோவான் 4:16) என்று நமக்குச் சொல்லப்பட்டிருக் கிறபடியினால் தேவனுடைய இயற்கையானத் தன்மை என்ன என் பதையே நாம் அந்த ஆராய்ச்சியின் மூலமாகக் கண்டுபிடிக்கிறவர் களாக இருப்போம்.

தேவனையோ அல்லது தேவனாக இருக்கிற அன்பையோ விளக்கிக் கூறுவது எளிதான காரியம் அல்ல. தெய்வீக அன்பு எவ்வாறு செயல்படும் என்பதைக் குறித்து மகா பெரிய ஞானத்தோடும் பரிசுத்த ஆவியின் ஏவுதலோடும் பவுல் நமக்கு விளக்கிக் கூறுகிறார். ''நான் எழுதிக் கொண்டிருக்கும் இவ்வகையான அன்பை நீங்கள் உடையவர் களாக இருந்தால், உங்கள் வாழ்வில் குறுக்கிடுகின்ற மக்களோடுகூட நீங்கள் உறவு கொள்ளுகிற விதம் இதுவாகவே இருக்கக் காண்பீர்கள்'' என்று பவுல் திட்டமாகக் கூறுகிறார். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாழுகிறார் என்பதற்கு இந்த விதமான அன்பு ஒன்றே கனியாக, ஆதாரமாக, சாட்சியாக இருக்கிறது என்று பவுல் தனது உற்சாகமூட்டும் மற்றொரு நிருபத்தில் நமக்குக் கூறுகிறார் (கலாத்தியர் 5:22). இந்த நான்கு வசனங்களிலும்தான் இந்த 'அன்பு' அதிகாரத்தின் இருதயம் அடங்கியிருக்கிறது. அந்த அன்பை பவுல் ஓர் ஆவிக்குரிய நுண் ணோக்கியின் அடியில் வைத்து நமக்குக் காண்பிக்கிறார்.

நீங்கள் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று ஓர் சவாலை உங்களுக்கு முன்பாக நான் வைக்க விரும்புகிறேன். தெய்வீக அன்பை



எடுத்தியம்பும் இந்தப் பதினைந்து நற்குணங்களையும் மிகக் கவனத் துடன் பரிசீலனை செய்யுங்கள். நீங்கள் அவ்வாறு செய்யும்போது, உங்கள் வாழ்க்கையிலிருந்து வெளிப்படும் ஆவியின் கனியைப் பிரதி பலிக்கிற இந்த நற்குணங்களின் மையத்தில் உங்களுடைய மனைவி அல்லது புருஷனையும், உங்கள் பிள்ளைகளையும் மற்றவர்களையும் வையுங்கள். இந்த வேதப்பகுதிக்கு விபரீதமாக வியாக்கியானத்தைக் கொடுக்க திறன் படைத்த மக்கள் ''ஆஹா இந்த விதமாகத்தான் என் மனைவியும் (அல்லது புருஷனும்) மற்ற விசுவாசிகளும் என்னை நேசிக்க வேண்டும்'' என்று எண்ணுவார்கள். இல்லை, பவுல் வேறு வித மாகச் சொல்லுகிறார். அவர் கூறுவதைக் கவனியுங்கள்: ''இந்த வித மாகத்தான் நீங்கள் உங்கள் மனைவியையும் (அல்லது புருஷனையும்) மற்றவர்களையும் நேசிக்க வேண்டும்.''

பல ஆண்டுகளுக்கு முன்பு, எனது மூத்த மகள் இரண்டு வயது குழந்தையாயிருந்தபோது, அவள் திருச்சபையில் உள்ள குழந்தைகள் பராமரிப்பு இல்லத்திற்குள் செல்லுவதை நான் இரகசியமாகக் கவனித் துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவள், வேறொரு குழந்தை யினுடையகையில் இருந்த ஒரு பிளாஸ்டிக் பொம்மையைப் படக்கென்றுப் பறித்துக் கொண்டு ''நாம் நம்முடைய பொருட்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று இயேசு சொல்லி யிருக்கிறார்'' என்று சொன்னதைக் கேட்டு நான் அதிர்ச்சி அடைந்தேன். இந்த அதிகாரத்தில் பவுல் நமக்குச் சித்தரித்துக் காட்டியிருக்கும் அன்பின் அர்த்தம் என்னவென்று அவள் அன்றுவரை அறிந்து கொள்ளாத ஓர் சிறுமியாயிருந்தாள் என்பது எனக்கு மிகத் தெளிவான ஓர் காரியம்தான். ஆனால், பெரியவர்களாகிய நாம் அதைக்குறித்து நன்றாக அறிந்திருக்கிறோம். ஆனாலும் அதே காரியத்தைத்தான் நாம் அடிக்கடி செய்து கொண்டிருக்கிறோம். அன்பைக் குறித்து அதிகமாகப் போதிக்கும் இந்த வேதப் பகுதியை நாம் வாசிக்கும்போது, ''இவ்வித மாகத்தான் என் மனைவி (அல்லது என் புருஷன்) என்னை நேசிக்க வேண்டும்!'' என்று நம்மில் அநேகர் எண்ணுகிறோம். தெய்வீக அன்பை வெளிப்படுத்துகிற இந்த நற்குணங்களை நீங்கள் அறிய வரும்போது, உங்கள் மனைவியோ (அல்லது புருஷனோ) உங்களை எப்படியெல்லாம் நேசிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று

சிந்திக்காதீர்கள். ''இந்த விதமாக நான் என் மனைவியை (அல்லது புருஷனை) நேசிக்கிறேனா?'' என்று உங்களையே நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள். நாம் இப்பொழுது இந்த நற்குணங்களைக் குறித்து ஒவ்வொன்றாகப் பார்ப்போம்;

### அன்பு நீடிய சாந்தமுள்ளது

இதனை விளக்கிக் கூறுவதற்கு பவுல் இங்கு கிரேக்கப் பதம் ஒன்றைப் பயன்படுத்துகிறார். அதன் பொருள் 'அன்பு இரக்கமுள்ளது' என்பதாகும். இந்த அன்பு பழிக்குப் பழி வாங்குகிறதில்லை. பழிக்குப் பழி வாங்கத் தனக்கு உரிமை இருந்தும் அதைச் செய்ய ''சந்தர்ப் பங்கள் வாய்த்தாலும்கூட'' அது அவ்வாறு செய்கிறதில்லை.

### ''அன்புக்குப் பொறாமையில்லை''

இதனை விளக்கிக் கூறுவதற்காக பவுல் ''தாராளம்'' என்னும் அர்த்தத்தைக் கொடுக்கிற ஓர் கிரேக்க பதத்தைப் பயன்படுத்துகிறார். ஒருவர் மற்றொருவருக்காகச் சுயநலமற்ற அன்பை அல்லது ஒப்புக் கொடுத்தலைக் கொண்டிருப்பதை இது விளக்குகிறது. சுத்திகரிக்கப் பட்ட ஓர் பிறர் நலம் கருதும் தன்மை, உங்கள் மனைவி அல்லது புருஷனுடைய விருப்பங்கள் யாவையும், என்ன நேரிட்டாலும்-அதை நிறைவேற்றி முடிக்க உங்கள் நேரம், திறமை, பெலன் மற்றும் எல்லாவற்றையும் செலவழிக்கத் தீவிரமாக ஒப்புக் கொடுத்திருக்கிறீர் களா? ''பொறாமையில்லை'' என்னும் பொருளைக் கொடுப்பதற்கு மூல பாஷையில் எழுதப்பட்டிருக்கும் வார்த்தையும் விளக்கமும் இதுதான்.

### ''அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது''

இவ்விதமாக நேசிக்கிற ஒரு மனிதன் தன்னைத்தானே பெருமைப் படுத்திப் பேசமாட்டான் என்பதை விளக்குவதற்காக கிரேக்க புத்த கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வியாக்கியானம்தான் அது. பிறரு டைய பாராட்டுதலைப் பெறும்படியாக அவர்கள் எதையும் செய்ய மாட்டார்கள். இந்த அன்பு அவர்களைத் தாழ்மையுடன் இருக்க ஏவு கிறபடியினால் தனது காரியங்களை முக்கியப்படுத்திப் பெருமை யாகப் பேசமாட்டார்கள். இவ்வுலகிலுள்ள பெருமையும் அகங்கார மும் உடைய மக்களுக்கு நேர் எதிரான குணமுடைய மக்களாக அவர்கள் இருப்பார்கள்.



### தெய்வீக அன்பின் இரண்டு பரிமாணங்கள்

இந்த எல்லா நற்குணங்களுக்கும் ஓர் வெளிப்புற பரிமாணமும், ஓர் உட்புறப் பரிமாணமும் உண்டு. அன்பின் உண்மையான வெளிப் பாடு உட்புறத்தில் இருக்கிறபடியினால் வெளிப்புறத்திலும்கூட இந்த அன்பு இவ்விதமாக செயல்படுகிறது. இதைத்தான் நாம் ஐந்தாம் வசனத்தில் ''அன்பு அயோக்கியமானதைச் செய்யாது'' என்று வாசிக் கிறோம். அன்பு வெளிப்புறத்தில் மிகவும் ஏற்ற விதமாக நடந்து கொள்ளும். உட்புறத்தில் அது தனது சொந்த வழியில் நடவாததினால் வெளிப்புறத்திலேயும் மிகுந்த கண்ணியத்துடனும், மென்மையாகவும், மரியாதையுடனும் நடந்து கொள்ளுகிறது. உண்மையான உட்புற சுபாவத்தினால் இந்த அன்பு சினமடைகிறதில்லை. தனக்கென்று எந்த விதமான தனிப்பட்ட நோக்கமும் இல்லாதபடியினால் அது தற் பொழிவை நாடுகிறதில்லை. அது எப்போதும் பிறர் நலம் நாடுகிற தாயிருக்கிறபடியினால் தான் நேசிக்கிற நபரிடத்தில் கோபப்படுகிற தில்லை. உட்புறத்தில் சுயநலமோ, பெருமையோ, என் விருப்பம் போலவே எல்லாம் நடைபெறவேண்டும் அல்லது ஒன்றும் நடைபெறக் கூடாது என்ற எண்ணமோ இல்லாதிருக்கிறதினால் வெளிப்புறத்திலும் அதனுடைய உண்மையான தன்மைப் பிரதிபலிக்கிறது.

அன்பு ''தீங்கு நினையாது''. பவுல் இந்த வார்த்தைகளை எழுதும் போது, அன்பானது தனது உள்ளத்தில் எந்தவிதமான தழும்பையும் அல்லது பிறர் தனக்குச் செய்த தீங்கையும் தேக்கி வைப்பதில்லை என்பதை பொருள்படுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக் கிறார். உங்கள் மனைவி அல்லது புருஷனைக் குறித்த தழும்பு எதை யாகிலும் உங்கள் உள்ளத்தில் தேக்கிவைத்திருக்கிறீர்களா? நீங்கள் அப்படிச் செய்தால், கிறிஸ்துவின் அன்பு உங்கள் இருதயத்தில் இல்லை என்றுதான் அது தெளிவுபடுத்துகிறது. வெளிப்புறத்தில் இந்த அன்பு தனது தழும்புகளைக் காட்டாததற்குக் காரணம் உட்புறத்தில் அது ''அநியாயத்தில் சந்தோஷப்படாததுதான்'' ஆகும். கிறிஸ்துவின் அன்பைக் கொண்டு பிறரை நேசிக்கிற ஒரு நபர், அன்பின் செயல்பாடு தோல்வி அடைவதில் சந்தோஷப்படமாட்டார். அன்பு தோல்வி அடையும்போது, அன்பு செலுத்துகிற ஒரு நபர் துக்கப்படுகிறார். அவன் அல்லது அவள் தனது அன்பு தோல்வியில் முடிவடைவதை ஒருபோதும் விரும்பமாட்டார்கள். தனது அன்பு வெற்றிபெறும்போது அதில் அவர்களுக்கு உள்ளான மகிழ்ச்சி ஏற்படுகிறது. ''சத்தியத்தில்

சந்தோஷப்படும்'' என்பதின் பொருள் அதுதான். சத்தியம் ஜெயம் பெறும்போது சந்தோஷப்படுகிற அன்பே, கிறிஸ்துவின் அன்பை ஒருவர் உடையவராயிருக்கிறதற்கு அடையாளமாயிருக்கிறது.

''அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்'' என்று வசனம் 7 கூறுகிறது. அன்பின் செயல்பாடு தோல்வியுறும்போது, அன்பு செலுத்துகிறவர் அதை அமைதியாக ஏற்றுக் கொள்ளுகிறார். ''சகலத்தையும் தாங்கும்'' என்பதின் பொருள் அதுதான். பிறரிடத்திலிருக்கிற திறமையைக் கண்டு நம்புகிறதற்கு ஏதுவான விசுவாசம் அன்பிற்கு உண்டு. அந்த விசுவாசமே மக்களுக்கு அதிக நன்மையை உண்டுபண்ணுகிறது!

நான் ஒரு இளைஞனாயிருந்தபோது, என்னிடத்திலிருந்த மிகச் சிறிய திறமைகளைக் கூட கண்டுகொண்ட எனது சபைப் போதகர் என்னைப் பார்த்து, ''உன்னிடத்திலிருக்கிற அந்தத் திறமைகளை நான் பாராட்டுகிறேன்'' என்று கூறுவது வழக்கம். அவர் கூறியதைப் போல வேறொருவரும் என்னிடத்தில் ஒருபோதும் கூறியதில்லை. அவர் கூறிய அந்த வார்த்தைகள் என்னை வெகுவாகப் பாதித்தது. அவர் வேடிக்கைக்காக அவ்வாறு கூறினார் என்று முதலில் நான் எண்ணினேன். ஆனால் அவர் அவ்வாறு கூறவில்லை. அவர் உண்மையிலேயே என்னை நம்பினார். அவர் என்னிடத்திலுள்ள ''சகலத்தையும் நம்பினார்.''

பிறரிடத்திலுள்ள திறமைகளைக் காண்பதற்கு அன்பு விசுவாசத்தை உடையதாக இருக்கிறபடியினால், அது சகலத்தையும் நம்புகிறது. அது தான் காண்கிறதும் நம்புகிறதுமான காரியங்களின் நிறைவேறுதலைக் காண மகிழ்ச்சியுடன் காத்திருக்கிறது என்பதுதான் அதன் பொருளாகும். அது அவ்வாறு நம்பிக்கையோடும் பொறுமையோடும் நிறைவேறுதலுக்காகக் காத்திருக்கும்போது எதிர்ப்படுகின்ற எல்லாவற்றையும் சகித்துக் கொள்ளுகிறது. எந்தத் துன்பத்தையும் அது சகித்துக் கொள்ள முடியும். ''நம்பும்போதும் காத்திருக்கும்போதும் விடாமுயற்சியைக் கைக்கொள்ளுதல்'' என்னும் பொருள் கொடுக்கும் கிரேக்க வார்த்தை ஒன்று இதை விளக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உள்ளத்தில் இந்த சுத்திகரிக்கப்பட்ட தன்னம்பிக்கையை உடையவராக இருக்கிறபடியினால், பிறரை நேசிக்கிற ஒரு நபருக்கு இவற்றை வெளிப்புறத்திலும் காண்பிக்க ஏதுவுண்டாகிறது.



இறுதியாக ''அன்பு ஒருக்காலும் ஒழியாது'' என்று பவுல் நமக்கு உறுதியாகக் கூறுகிறார். நாம் அன்பு காட்ட தவறிப் போகிறோம். ஆனால் அன்பு ஒழிந்து போகிறதில்லை. தனது நேசம், ஒருபோதும் வல்லமையற்றதாகவோ அல்லது மடிந்து போகவோ போவதில்லை என்று பிறரிடத்தில் அன்பு செலுத்துகிற ஒருவர் அறிந்திருக்கிறார். வேறு வார்த்தைகளில் கூறுவோமானால் தன்னால் நேசிக்கப்படுகிற ஒருவரிடத்தில், ''நான் உன்னை கிறிஸ்துவின் அன்போடுகூட நேசிக்கிறபடியினால், வலிமையான அந்த அன்பானது, நீ என்னை எப்படிப் பேசினாலும் அல்லது நீ எனக்கு என்ன செய்தாலும் உன்னை நேசிப்பதிலிருந்து அது என்னை நிறுத்தி விட முடியாது. அது சகலத்தையும் சகித்துக் கொள்ளும்'' என்று நேசிக்கிறவர் கூறுவதுபோல் உள்ளது.

இந்தப் பதினைந்து நற்குணங்களின் வெளிச்சத்திலும் நின்று கொண்டு, உங்கள் மனைவியையோ அல்லது புருஷனையோ பார்த்து, ''நான் உன்னை நேசிக்கிறேன்'' என்று சொல்லும்போது அதன் பொருள் என்னவாக இருக்கிறது? என்று கேளுங்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் இருப்பாரானால், உங்கள் மனைவியை அல்லது புருஷனை இந்த நற்குணங்களைக் கொண்டு நேசிக்கும் திறனை நீங்கள் உடையவராயிருப்பீர்கள். ஆதியில் தேவன் ஆதாமை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தபோது அவர்களுக்குள் ஒருமைப்பாடு இருக்க வேண்டுமென்று விரும்பி, 'அன்பு' என்னும் ஆற்றலை அவர்களுக்குள் வைத்தார். இந்த ஆற்றல் இல்லாவிடில், திருமணம் மற்றும் குடும்ப வாழ்வு பிரமாணத்தின்படி, உங்கள் ஒருமைப்பாடானது, உடைந்துபோன ஒரு துணுக்கைப் போலவே இருக்கும். ஆனால் அன்பு என்னும் இந்த ஆற்றலானது, தேவ கிருபையினால், உங்கள் குடும்ப வாழ்வில் காணப்படுமானால், அந்த அன்பே தேவன் எந்த நோக்கத்தோடு ஒருமைப்பாட்டை ஏற்படுத்தினாரோ, அந்த நோக்கத்தை நிறைவேற்ற உங்களுக்கு உதவி செய்யும்!.

**Marriage & Family (Part 1)**
Booklet - 6
Tamil

**India Bible Literature**
67, Beracah Road, Kilpauk
Chennai - 600 010.

*(For Private Circulation Only)* ICM/Tam-6/2004